# பிழைக்கும் வழி

## PRACTICAL LIFE.

ஜி. எ. வைத்தியராமன், பி. எ., பத்திராதிபர்.

G. A. VaidyaRaman, B. A., EDITOR.

புஸ்தகம் 3. Vol. 3. | விரோதிகிருது ௵ மார்கழி ௴ DECEMBER, 1911. | ஸஞ்சிகை 12. No. 12.


## Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, citizenship and popular, scientific and technical education.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. A. P. | Foreign Rs. A. P. |
|---|---|---|
| Per annum ... | 4 0 0 ... | ... 6 0 0 |
| Single copy ... | 0 6 0 ... | ... 0 8 0 |
| Sample copy ... | 0 2 0 ... | ... 0 3 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | |
|---|---|---|
| 1 Page | ... 5 0 0 | per month. |
| ½ do | ... 2 8 0 | do |
| ¼ do | ... 1 4 0 | do |
| Less than ¼ page ... | 0 8 0 | per *inch* per month. |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors.**—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles intended for the journal should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. All articles which may be accepted will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. Vaidya Raman & Co., 3 & 4, Sunkurama Chetty Street, Georgetown, Madras.

## பிழைக்கும் வழி.

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், ப்ரஜா லக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய ஸகலருக்கும் உபயோகமான படங்களடங்கிய, ஒரு மாஸாந்தாத் தமிழ்ப் பத்திரிகை.

தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | அந்நிய நாடு. |
|---|---|---|
| வருஷம் 1க்கு | .. 4 0 0 .. | 6 0 0 |
| தனிப்பிரதி | .. 0 6 0 .. | 0 8 0 |
| மாதிரி காபி | .. 0 2 0 .. | 0 3 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | |
|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | 5 0 0 |
| ½ பக்கத்திற்கு | ,, ,, | 2 8 0 |
| ¼ பக்கத்திற்கு | ,, ,, | 1 4 0 |
| ¼ பக்கத்திற்குக் குறைந்தால் மாஸம் ஒன்றுக்கு | அங்குலம் ஒன்றுக்கு | 0 8 0 |

**வியாஸம் எழுதுகிறவர்கள் கவனிக்கவேண்டியவை.**

விவஸாயம், வியாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வியாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் பிரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்யப்படும். ஒவ்வொரு வியாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

இந்தப் பத்திரிகையில் பிரசுரமாகும் வியாஸங்களுக்காக நிருபர்களுக்கு ஸம்பாவனை செய்திருக்கும் பக்ஷத்தில், அந்த வியாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி பிரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நிருப நேயர்கள் அறியவேணும்.

ஜி. எ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
3 & 4, சுங்குராம செட்டித் தெருவு, மதராஸ்

# பிழைக்கும் வழி.

## PRACTICAL LIFE.

புஸ்தகம் 3. Vol. 3. | விரோதிகிருதுஸ்ரூ மார்கழிமீ—DECEMBER 1911. | ஸஞ்சிகை 12. No. 12.


## பொருளடக்கம்.


**பத்திராதிபர் குறிப்புகள்** — பக்கம்

சக்ரவர்த்தியின் விஜயம்-ராஜா நன்கொடைகள்-டெல்லி ராஜஸ்தலமானது வங்காளாப் பிரிவினை மாற்றப்பட்டது .. .. .. 619-624

**விசேஷ வியாஸங்கள்**

நிலக்கடலை ஸாகுபடி —விவஸாயி .. .. 625

மாட்சிமை தங்கிய மஹாராணி மேரி சக்ரவர்த்தினி .. .. 629

வியாதி வராமல் தடுத்தல் —வி. ஏ. வெங்கடாசாரியார் .. 634

கூட்டுச் சீட்டுகள் .. .. 638

**விசேஷத்திரட்டு**

மழைக்குறிகள் .. .. 641

புங்கமரம் .. .. 643

விதவைகளின் வேதனை .. 646

கோகினூர் ரத்னம் .. .. 648

**பத்திரிகை ஆராய்ச்சி**

தஞ்சாவூர் ஜில்லா கிருஷிகருக்கு ஒரு யோசனை .. .. 649

மதுராபட்டணம் .. .. 650

இந்தியாவில் யந்திர இறக்குமதி.. 651

**புஸ்தக ஆராய்ச்சி** .. .. 652

**சிறுவர் பகுதி** .. .. .. 653-654

**ஸ்திரீகள் பகுதி** .. .. 655-656

**பகுதிக் குறிப்புகள்**

விவஸாயக் குறிப்புகள்—கைத்தொழில் குறிப்புகள்—வித்யா விஷயக் குறிப்புகள்—சாஸ்திரீயக் குறிப்புகள்—வைத்தியக் குறிப்புகள்—சட்டக் குறிப்புகள்—மனுஷ்யர்களைப் பற்றிய குறிப்புகள்—வேடிக்கையும் துக்கடாக் கதைகளும்—விநோதங்கள் .. 657-666

**மாஸ வர்த்தமானம்** .. .. 667-671

**மதராஸ் மார்க்கெட் நிலவரங்கள்.** .. 672


## CONTENTS.


**Editorial Notes** — PAGE

THE ROYAL VISIT-THE ROYAL BOONS TRANSFER OF CAPITAL TO DELHI AND MODIFICATION OF BENGAL PARTITION ... 619-624

**Special Articles**

THE CULTIVATION OF GROUNDNUTS An Agriculturist ... ... ... 625

HER MAJESTY QUEEN MARY ... ... 629

THE PREVENTION OF DISEASE V. A. Venkata Chariar ... ... ... 634

CHIT FUNDS ... ... ... ... 638

**Selections**

SIGNS OF RAIN ... ... ... ... 641

THE PUNGAM TREE ... ... ... 643

THE WOES OF THE WIDOW... ... ... 646

THE KOHINOOR DIAMOND ... ... ... 648

**Review of the Press**

A SUGGESTION TO TANJORE RYOTS ... ... 649

MUTTRA ... ... ... ... ... 650

IMPORTS OF MACHINERY INTO INDIA ... 651

**Reviews of Books** ... ... ... ... 652

**The Boys' Section** ... ... ... ...653-654

**The Ladies' Section** ... ... ... ...655-656

**Departmental Notes**

Agricultural Notes ... ... ... ... 657

Industrial Notes ... ... ... ... 659

Educational Notes ... ... ... ... 660

Scientific Notes ... ... ... ... 661

Medical Notes ... ... ... ... 662

Legal Notes ... ... ... ... 663

Personal Notes ... ... ... ... 664

Fun and Anecdote ... ... ... 665

Curiosities ... ... ... ... 666

**News of the Month** ... .. ... 667-671

**Madras Market Reports** ... ... ... 672

## EDITORIAL NOTES.

## பத்திராதிபர் குறிப்புகள்.

**The Royal Visit.**

சக்ரவர்த்தியின் விஜயம்.—ஆறுமாஸ காலமாய், ராஜா வரப்போகிருராமே, ராஜா வரப்போகிருராமே, என்று வாய் ஓயாமல் பேசிக்கொண்டிருந்த ஜனங்கள் மகாராஜா சக்ரவர்த்தியும் மகாராணி சக்ரவர்த்தினியும் சீமையிலிருந்து இந்தியாவுக்கு ஸௌக்கியமாய் வந்து சேர்ந்து, டெல்லியில் நாளது மாஸம் 12-ந் தேதியன்று தங்களுக்கு மகுடாபிஷேகமான செய்தியை விளம்பரப்படுத்தினதை இந்தியாவில் மூலைமுடுக்குகளிலுள்ள ஒவ்வொருவரும் கொண்டாடின குதூஹலத்தையும் உத்ஸாகத்தையும் பார்த்தவர்கள் ஒருநாளும் மறக்கமாட்டார்கள். ஸுமார் 800 வருஷங்களுக்குமுன் ஏசுகிறிஸ்து பிறந்த இடமாகிய பாலஸ்டீனைக் கைப்பற்றிக்கொண்ட துருக்கரோடு சண்டை செய்யப் போன முதலாவது ரிச்சர்ட் அரசரைத் தவிர, வேறு ஒரு இங்கிலீஷ் அரசரும் தாம் ஆண்டுவந்த காலத்தில் ஐரோப்பாவைத் தாண்டி வேறுதேசத்துக்குப் போனதில்லை. ஆகையால் மகாராஜா சக்ரவர்த்தியும் சக்ரவர்த்தினியும் இந்தியாவுக்கு நேரில் வந்ததே இந்தியர்களின் பெரும்பாக்கியம். இது ஒருபக்கமிருக்க, சக்ரவர்த்தி, போன ஜூன் மாதத்தில் தன்னுடைய தலை நகராகிய லண்டனில் மகுடாபிஷேகம் செய்துகொண்ட பிறகு அந்தச் செய்தியை தம்முடைய ஜாதியாரும் பந்துக்களும் குடியேறி இருப்பதான கானடா, ந்யூபௌண்டலண்ட், ஆஸ்ட்ரேலியா முதலிய தேசங்களுக்கு நேரில் போய் தெரிவிக்காமல் இந்தியாவுக்கு மட்டும் நேரில் வந்து தெரிவித்ததானது அவருக்கு இந்திய ப்ரஜைகளிடத்திலும், இந்தியாவின் மேலும் உள்ள அன்பை நன்ருய் எடுத்துக் காட்டுகிறது. தென் ஆப்ரிக்காபோன்ற குடி ஏற்ற நாடுகளில் இந்தியர்களை தொந்தரவு செய்யும் கவர்ன்மெண்டுகளுக்கு அப்படிச்செய்வது சக்ரவர்த்தியின் மனதுக்கு திருப்தி கொடுப்பதல்ல என்று எச்சரிப்பதுபோலிருக்கிறது. ராஜாக்கள் விஜயம் செய்யும்பொழுது ஜனங்களுக்கு பல நன்கொடைகளும் நன்மைகளும் செய்வது ஸகஜம். அப்படியே நம்முடைய சக்ரவர்த்தியும் செய்திருக்கிறர். இது மட்டுமல்ல. அவர் செய்ததில் ஒருகாரியத்தால் இந்தியர்களை மதிப்பாக எண்ணி அவர்களை அந்தஸ்தில் ஒரு படி ஏற்றி விட்டார். அதென்னவென்றுல், வங்களாப் பிரிவினையை மாற்றி அதை ஒரு கவர்னரின் ஆளுகைக்குள் வைத்தது. லார்டகர்ஸன் கவர்னர் ஜெனரலாயிருந்த காலத்தில் அவர் வெங்காளிகளைப் பிரித்து, இரண்டு கவர்ன்மெண்டுகளுக்குள் அடைத்து, அதனல் அவர்களுடைய ஒற்றுமையையும் உணர்ச்சியையும் அழித்தார். இப்படிச் செய்ததானது 400 லட்சம் ஜனங்களுக்கு அதிருப்தியை உண்டுபண்ணி, அவர்களுடைய கூச்சல் இந்தியா முழுவதும் பரவி, ஜனங்களை மதிக்காமல் ராஜாங்கம் நடத்துவதுதான் இங்கிலீஷ்க்காரர் முறைபோலும், என்று ஸகல ஜனங்களுக்கும் ஒருவித அதிருப்தியும் அவநம்பிக்கையும் உண்டாயிற்று. இது பொது ஜனங்களின் அபிப்ராயமென்று அறிந்ததும் அதை மாற்றி வெங்காளத்தை ஒன்று சேர்த்ததானது, ராஜ்ய நிர்வாகத்தில் இந்தியர்களின் அபிப்ராயத்தையும் கலந்துகொள்ளவேண்டும் என்றகோட்பாட்டை அங்கீகரித்து இந்தியர்களை கௌரவப்படுத்தினதாகிறது. இப்படிச்செய்த ஏற்பாடுகள் ஸ்வஜாதியான கல்கத்தாவிலுள்ள சில ஐரோப்பிய வர்த்தர்களுக்கு நஷ்டமுண்டாக்கும். இருந்தபோதிலும் இக்

திய பொது ஜனங்களுக்கு வருத்தம் நீங்க வேண்டுமென்று செய்ததானது இங்கிலீஷ் ராஜ்யத்தில் ஜனங்கள் கேட்டவுடனே இல்லா விட்டாலும் ஒருகாலத்தில் நியாயம் கிடைக் கும் என்பதைக் காட்டுகிறது.

சக்ரவர்த்தியும் சக்ரவர்த்தினியும் இந்தியா வுக்கு வந்தது முதல் அவர்கள் செய்ததை நம் முடைய நேயர்கள் கேட்கப்பிரியப்படுவார்கள் என்று ஒவ்வொரு நாளும் நடந்த ஸங்கதிகளை இடத்துக்குத் தக்கபடி சுருக்கமாய் எழுதுகி றோம். இவர்களுக்கு நடந்த மரியாதைகளையும் ஊர்கோலச் சிறப்புகளையும், ஜனங்கள் காட் டிய சந்தோஷத்தையும் ஒவ்வொரு தடவையும் சொல்ல இடமில்லாமல் விட்டிருக்கிறோம்.

சக்ரவர்த்தியும் சக்ரவர்த்தினியும் வந்தமெடீ னு கப்பல் நாளது ீ 2ம் தேதி பகல் ஸரியாய் 10 மணிக்கு பம்பாய் துறை முகத்தில் வந்து சேர்ந்தது. உடனே இந்தியா கவர்னர் ஜெனர லாகிய லார்டு ஹார்டிஞ்ஜ், பம்பாய் கவர்னரா கிய ஸர் ஜார்ஜ் க்ளார்க், அவரவர்களுடைய பரி வாரங்களுடன் சக்ரவர்த்தியையும் சக்ரவர்த் தினியையும் மெடீனு க்ப்பலிலேயே போய்ப் பார்த்தார்கள். 3 மணிக்கு சக்ரவர்த்தி கப்பலை விட்டு இறங்கினதும் 101 மரியாதை குண்டு கள் போடப்பட்டன. சக்ரவர்த்தியையும் சக்ரவர்த்தினியையும் வரவேற்பதற்காக ஜோ டிக்கப்பட்ட ஒரு மண்டபத்தில் தங்க ஸிம்மா ஸனத்தில் அவர்கள் உட்கார்ந்ததும், பம்பாய் முனிஸிபாலிடிக்கு ப்ரெஸிடெண்டாகிய ஸர் பிரோஸ்ஷா மேட்டா, ராஜ தம்பதிகளுக்கு ஒரு நல்வரவு அட்ரெஸ் (பத்திரம்) படித்தார். அதற்கு சக்ரவர்த்தி, தாம் 1905-ம் வருஷத்தில் இந்தியாவுக்கு வந்தபொழுது நடந்த உபசா ரத்தை ஒருநாளும் மறக்கவில்லை என்றும், தம் முடைய தகப்பனார் இறந்து தாம் பட்டத்துக்கு வந்ததும் தமக்கு இந்தியாவைப்போய்ப்பார்க்க வேண்டுமென்ற ஆசை உண்டானதால் அப் படியே செய்யமுடிந்ததைப்பற்றித் தமக்கு ரொம்பசந்தோஷமாயிருக்கிறதென்றும், பதில் சொன்னார். பிறகு அங்கே வந்திருந்த பெரிய உத்தியோகஸ்தர்கள், பிரமுகர்கள் எல்லா ருக்கும் ராஜ பேட்டி நடந்தது. உடனே எல் லாரும் பம்பாயைச் சுற்றி ஊர்கோலமாகப் போய் கடைசியில் ஸாயந்திரம் $5\frac{1}{2}$ மணிக்கு சக்ரவர்த்தி தம்முடைய கப்பலுக்குப் போய் விட்டார். அன்றை ராத்திரி லார்டு ஹார் டிஞ்ஜும் இன்னும் சில பொறுக்கி எடுத்த பேர்களும் மட்டும் சக்ரவர்த்தியோடு மெடீனு கப்பலிலேயே சாப்பிட்டார்கள்.

3ம் தேதி ஞாயிற்றுக்கிழமை யாதலால் சக்ரவர்த்தி கோவிலுக்குப் போனதைத்தவிர வேறுவிசேஷமொன்றுமில்லை. அன்றுராத்திரி பல பெரிய கனவான்கள் சக்ரவர்த்தியோடு மெடீனுவிலேயே சாப்பிட்டார்கள்.

4ம் தேதியன்று காலமே 30,000 ஸ்கூல் பிள்ளைகளுக்கு வேடிக்கை முதலியவைகள் காட்டப்பட்டன. அந்தச் சிறுவர்களை சக்ர வர்த்தியும் சக்ரவர்த்தினியும் பார்த்து ஆனந் தப்பட்டுவிட்டு, பம்பாயில் நடந்த பொருட் காட்சியைப் போய்ப்பார்த்தார்கள். பிறகு தங்களுடைய கப்பலுக்குப்போய்விட்டார்கள். அன்று பட்டணம் முழுவதும் தீபாலங்காரம் செய்யப்பட்டிருந்ததோடு பெரிய வாண வேடி க்கையும் நடந்தது.

5ம் தேதி காலமே சக்ரவர்த்தியும் சக்ரவர்த் தினியும் ஆடம்பரம் ஒன்றுமில்லாமல் பம்பாய் க்குப் பக்கத்திலுள்ள எலிபெண்டா குகை களைப் போய்ப்பார்த்தார்கள். பிறகு ராத்திரி $10\frac{3}{4}$ மணிக்கு டெல்லிக்கு பிரயாணமானார்கள். கப்பலிலிருந்து ரெயில் ஸ்டேஷனுக்குப் போகும் வீதிகளிளெல்லாம் வெகு அழகாய் விளக்குகள் போடப்பட்டிருந்தன.

7ம் தேதி 10 மணிக்கு டெல்லியில் வந்து இறங்கினார்கள். ஸ்டேஷனில் கவர்னர் ஜெனரல் லார்டு ஹார்டிஞ்ஜு, இன்னும்பல பெரிய உத்தியோகஸ்தர்கள், கனவான்கள், எல்லாரும் வந்திருந்தார்கள். அங்கிருந்து புறப்பட்டு டெல்லி கோட்டைக்குப் போகும்பொழுது வழியில் சக்ரவர்த்தியை ரொம்பகீர்த்திபெற்ற 900 போர் வீரர்கள் வரவேற்றார்கள். அவர்களில் 100 பேர்கள் 1857ம்வருஷத்தில் அந்த டெல்லியில் நடந்த கலகத்தில் இங்கிலீஷ்க்காரருக்காக சண்டைசெய்து ஜெயித்தவர்கள். பிறகு 150 சிற்றரசர்கள் கூடி எதிர்கொண்டு அழைத்தார்கள். பிறகு அங்கேயுள்ளபெரிய மசூதியைச் சுற்றியும் வீதிகளைச் சுற்றியும் இங்லீஷ் இந்திய ஸைன்யங்களுடனே ஊர்கோலம் வந்தார்கள். அப்பொழுது சுமார் மூவாயிரம் நாலாயிரம் இந்தியாவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அவர்களை வரவேற்று அவர்களுக்காக ஜென்கின்ஸ்என்பவர் ஒரு உபசார அட்ரெஸ் படித்தார். அதற்கு சக்ரவர்த்திபதில் சொல்லுவதில் இந்தியா அமைதியாயும் திருப்தியாயும் க்ஷேமமாயும் இருக்கவேண்டுமென்பதைத் தவிர தமக்கு வேறு ஆசையில்லையென்று சொன்னார். ஊர்கோலம் முடிந்தபிறகு ஸாயந்திரம் சிற்றரசர்கள் ஒவ்வொருவராய் சக்ரவர்த்தியைப்போய்ப் பார்த்தார்கள்.

8-ம் தேதியன்று காலமே சிற்றரசர்களைப் பார்த்துவிட்டு, ஸாயந்திரம் காலஞ்சென்ற எட்வர்டு சக்ரவர்த்தியின் ஞாபக சின்னமாய் இந்தியாவிலுள்ள ஜனங்கள் யாவருங் கூடி ஏற்படுத்தும் சிலைக்கு அஸ்திவாரக்கல் நாட்டினார். அப்பொழுது "இந்தச்சிலையானது டெல்லியில் இனிமேல் பிறப்பவர்களுக்கு அவரிடத்தில் எட்வர்டு உங்களுக்குள்ள பக்தியையும் விசுவாஸத்தையும், அவருக்கு உங்களிடத்திலுள்ள அனுதாபத்தையும் நம்பிக்கையையும் ஞாபகப்படுத்தும். ஈசுவரகிருபையால் இந்த அந்யோந்யம் இந்தியாவுக்கும் என்னுடைய குடும்பத்தாருக்கும் ஒரு பொழுதும் விட்டுப் போகாமலிருக்கவேண்டும்" என்று சொன்னார்.

9-ம் தேதியன்று இன்னுமுள்ள சிற்றரசுகளுக்கு பேட்டிகொடுத்து, ஸைன்யங்கள் புட்பால் (காலால் பந்தடித்தல்) போலோ (குதிரை மேலிருந்தபடி பந்தடித்தல்) விளையாடுவதைப் பார்த்தார்.

10-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை யானதால் கோவிலுக்குப் போய் அங்கே நடந்த உபன்யாஸங்களைக் கேட்டதைத் தவிர வேறுவேலை ஒன்றும் செய்யவில்லை.

11-ம் தேதியன்று இந்திய ஸைன்யங்களுக்கும் ஐரோப்பிய ஸைன்யங்களுக்கும் புதுக்கொடிகள் கொடுத்தார்.

12-ம் தேதி தர்பார் நடந்தது. அந்த வைபவத்தைப்பார்த்தவர்கள் அது ஒரு கண் கொள்ளாச் சேர்வையென்று சொல்லுகிறார்கள். அதற்கு 12,000 பேர்கள் விருந்தாளிகளாக அழைக்கப்பட்டார்கள். தர்பார் நடக்கும்போது மேற் சொன்ன 12,000 விருந்தாளிகளுக்கும், 20,000 ஸைன்யங்களுக்கும் 50,000 வேடிக்கை பார்ப்பவர்களுக்கும், ஆக மொத்தம் சுமார் லட்சம் ஜனங்களுக்கு போதுமான இடம் தயாராயிருந்தது. ஸரியாக 12 மணிக்கு தர்பார் ஆரம்பமாயிற்று. அப்பொழுது சக்ரவர்த்தி பேசியதை இந்திய நாட்டு ஸமாசாரங்கள் என்னும் பகுதியில் அச்சிட்டிருக்கிறோம்.

சக்ரவர்த்தி பேசியானதும் அங்கேயுள்ள கவர்னர் ஜெனரல், ஸேனாதிபதி, கவர்னர்கள், சிற்றரசர்கள் முதலியவர்களெல்லாரும் ஸிம்மாஸனத்தண்டைபோய் வணக்கமாய் ஸேவா

ஞ்சலிசெய்து ராஜபக்தியைக்காட்டினார்கள். இது முடிய ஒரு மணிநேரம் ஆயிற்று, பிறகு ராணுவத்தில் பெரிய உத்யோகஸ்த ராகிய ப்ரிகேடியர் ஜெனரல் பேட்டன் என்பவர் சக்ரவர்த்திக்கு மகுடாபிஷேகமானதை விளம்பரப்படுத்தினர். இந்த விளம்பரத்தை இந்திய நாட்டு ஸமாசாப் பகுதியில் பார்க்கலாம்.

விளம்பரமானதும் சக்ரவர்த்தியின் ஆக்ஞைப்படி லார்டு ஹார்டிஞ்ஜ் எழுந்து சக்ரவர்த்தியின் நன்கொடைகளையும் நன்மைகளையும் தெரிவித்தார். அவைபின்மருமாறு:—

**The Royal Boons.**

ராஜ நன்கோடைகள்.—

"வெகு ஜனக் கல்விக்காக ரூபாய் 50 லட்சம்.—பெருமை தங்கிய அரசரின் இஷ்டத்துக்குக் கீழ்ப்படிந்தும், அவருடைய ஸெக்ரிடெரி ஆப் ஸ்டேட்டின் ஸம்மதத்தைப் பெற்றும், கல்வி விருத்தியின் ஆவசியகத்தை யுணர்ந்தும், இவ்விஷயத்தில் பொதுவாயுள்ள உணர்ச்சியை ஆங்கீகரித்தும், இந்தியாவில் கல்வி லகுவாயும் விசாலமாயும் கிடைக்கும்படி செய்ய இந்தியா கவர்ன்மெண்டார் தீர்மானித்திருக்கிறார்கள். இந்த நோக்கத்தை யனுஸரித்து,வெகுஜனக்கல்வியைவிருத்திப்படுத்த உடனே 50 லக்ஷம் ரூபாய் செலவழிப்பதாக யோசனை செய்திருக்கிறார்கள். இந்தத்தொகையுடன் இனி வருஷா வருஷம் தாராளமாய் மேலும் தொகைகள் கொடுப்பதாக கவர்ன்மெண்டின் உத்தேசம்.

கடற்படை தரைப்படை யாட்களுக்கு அரை மாதச் சம்பளம் இனும்.—ராஜ சக்ரவர்த்தி தம் கடற்படை தரைப்படை யாட்களின் நன்றியுள்ள அரிய ஸேவகத்தைக் கொண்டாடி, 'நான்கம்மிஷன்ட்' ஆபீஸராயும், இந்தியாவிலுள்ள ப்ரிட்டிஷ் சேனையையும் இந்தியா சேனையையும் சேர்ந்த ரிஸர்வ் (கையிருப்பு) ஆட்களாயும், இன்னும் ராணுவ இலாகாவிலிருந்து சம்பளம் வாங்குபவர்களாயும், இருக்கும் மாதம் ரூபா 50 சம்பளத்துக்கு மேற்படாதவர்களுக்கெல்லாம் அந்தந்த அந்தஸ்துக்குள்ள சம்பளத்தில் $\frac{1}{2}$ மாதச் சம்பளம் இனும் கொடுப்பதாக விளம்பரப்படுத்தும்படி எனக்கு ஆக்ஞையிட்டிருக்கிறார்.

இந்தியர்களுக்கு "விக்டோரியா க்ராஸ்".—மேலும், இது முதல் தம் இந்திய ஸைனியத்தில் ஆட்களாயும் ரிஸர்வ்களாயும் உள்ளவர்களும் நேடிவ் ஆபீஸர்களும் சௌரியத்தின் பொருட்டு "விக்டோரியா க்ராஸ்" என்ற அந்தஸ்து பெற உரியவர்களாவார்கள் என்றும், ராஜ சக்ரவர்த்தியின் முடிசூட்டு தர்பாராகிய இது முதல் 10 வருஷத்தில், "ஆர்டர் ஆப் ப்ரிடிஷ் இந்தியா" மெம்பர்கள் முதல் வகுப்பில் 52 பேர் அதிகமாகும்படி செய்வதோடு, இக்கொண்டாட்டங்களின் அறிகுறியாக புதியதாய் முதல் வகுப்பில் 15 ஸ்தானங்களும், இரண்டாவது வகுப்பில் 19 ஸ்தானங்களும் உடனே ஏற்படுத்தப்படுமென்றும், இது முதல் எல்லைப்புற மிலிஷியா படையையும் மிலிடெரி போலீஸையும் சேர்ந்த இந்திய ஆபீஸர்கள் மேற்சொன்ன அந்தஸ்தைப்பெற அருகர்களாவார்களென்றும், நெடுங்காலம் கௌரதைக்குரிய விதமாய் ஸேவகம் செய்து, ராஜ சக்ரவர்த்தியின் இந்திய சேனையில் நேடிவ் ஆபீஸர்களாயுள்ளவர்களுக்கு, அவரவர்களுக்குத் தக்கபடி, ஸ்பெஷலாக நிலமோ, நிலவரி வருமானமோ, இனும் கொடுத்து, அல்லது நிலவரி தள்ளுபடி செய்து, சன்மானம் செய்யப்படுமென்றும், இந்தியன்-ஆர்டர்-ஆப்-மெரிட்டில் உள்ளவர்களில் மரணம் நேர்ந்தால், மரித்தவரின் மனைவிக்கு மூன்று வருஷங்களுக்கு ஸ்பெஷல் அலவென்ஸ் கொடுப்பதாக இப்போதிருப்பதைமாற்றி, இந்த தர்பார் முதற்கொண்டு, அப்படி புருஷனையிழந்த ஸ்திரீகளுக்கு, அவர்கள் இறக்கும் வரையில், அல்லது அவர்கள் மறுவிவாகம் செய்துகொள்ளும்வரையில் அந்த அலவென்ஸ் கொடுக்கப்படுமென்றும் ராஜ சக்ரவர்த்தி நியமித்திருக்கிறார்.

ஸிவில் உத்தியோகஸ்தர்களுக்கு இனம்.—தம் ஸிவில் ஸர்விஸிலுள்ளவர்கள் பக்தியுடன் தத்தம் வேலைகளை நிறைவேற்றிவருவதை நன்கு மதித்து, கவர்ன்மெண்ட் ஸிவில் உத்தியோகத்தில் மாதம் ரூபா 50 க்கு மேற்படாதிருக்கும் காயமான உத்தியோகஸ்தர்களுக்கெல்லாம் $\frac{1}{2}$ மாதச் சம்பளம் இனம் கொடுப்பதாக விளம்பரப்படுத்தும்படி எனக்கு சக்ரவத்தி கட்டளையிட்டிருக்கிறார்.

பட்டம் பெற்றோர்களுக்கு அடையாளக்குறிகளும், கலைவல்லோருக்குப் பேன்ஷனும்.—திவான் பகதூர், ஸர்தார் பகதூர், கான் பகதூர், ராய் பகதூர், கான் ஸாகிப், ராய் ஸாகிப், ராவ் ஸாகிப் ஆகிய பட்டங்களைப் பெற்றுள்ளவர்களுக்கும் இனிப் பெறப்போகிறவர்களுக்கும் கௌரவத்துக்கும் மதிப்புக்கும் அறிகுறியாக அவரவர்களுக்குத் தக்கவாறு, அடையாளக்குறிகள் கொடுபடவேண்டும் என்றும், மகாமகோபாத்தியாயர், ஷாம்ஸ் உல்-உல்மா என்னும் பூஜிக்கத்தக்க பட்டங்களை இப்போது பெற்றவர்களெல்லாருக்கும் இனி பெறுவோர்களுக்கும் இந்தியாவின் புராதன கலையின் புகழை உத்தேசித்து, வருஷவாரி பென்ஷன் கொடுக்கப்படவேண்டுமென்றும் ராஜ சக்ரவர்த்தி கருணையுடன் ஆக்ஞாபிக்கிறார்.

வடமேற்கெல்லைப்புறத்தில் நிலம் இனம்.—தம் தர்பார் ஞாபகார்த்தமாகவும், பொது ஸேவகத்தில் சிறந்திருப்பதை யுத்தேசித்தும், வடமேற்கெல்லை மாகாணத்திலும் பலுசிஸ்டானிலும் நிலங்கள் வரியில்லாமல், கொடுக்கப் பெற்றவர் தம் ஜீவ்யகாலமுழுதுமோ அவர் ஜீவ்யகாலத்துக்கப்புறமும் இன்னொருவர் ஜீவ்யகால முழுமையுமோ, லோகல் கவர்ன்மெண்ட் இஷ்டப்படுகிறபடி, கொடுக்கப்படும், அல்லது கவர்ன்மெண்ட் இப்போது கைப்பற்றியிருக்கும் நிலங்கள் திருப்பி கொடுத்துவிடப்படும்.

"நாஜரானு" இனி செலுத்தவேண்டாம்.—தம்முடைய இந்திய சிற்றரசுகளின் க்ஷேமத்தைப் பெருமனதுடன் கோரி, அவர்களின் தேச ஆதிக்கத்துக்குப் புதிதாய் ஒருவர் வரும்தோறும் செலுத்தவேண்டிய 'நாஜரானு' தொகை இனிசெலுத்தப்பட வேண்டியதில்லையென்றும், நியாயாதிகாரம் பெறுத கத்தியவார் குஜராத் ஆகிய பிரதேசங்களிலுள்ள சிறு ராஜ்யங்களும், மீவாரில் பூமியாசீப்களும் கவர்ன்மெண்டுக்குக் கொடுக்கவேண்டிய சில்லரைக் கடன்கள், இந்தியா கவர்ன்மெண்டின்உத்தரவுப்படி முழுமையுமோ ஒரு பாகமோ, தள்ளுபடி செய்யப்படுமென்றும், இம்பிரியல் ஸர்விஸ் துருப்புகளைக் கௌரவிக்கும் பொருட்டு ப்ரிட்டிஷ் இந்தியா ஆரடரில் (அந்தஸ்தில்) சில அதிக ஸ்தானங்கள் ஏற்படுத்தப்படுமென்றும், விளம்பரப்படுத்தும்படி ராஜசக்ரவர்த்தி எனக்கு ஆக்ஞையிட்டிருக்கிறார்.

கைதிகள் விடுதலை.—ராஜ சக்ரவர்த்தி கிருபையையும் இரக்கத்தையும் மேற்கொண்டு, இப்போது குற்றங்கள் செய்து சட்டப்படியுள்ள தண்டனையை அனுபவிக்கும் சில கைதிகளைச் சிறையிலிருந்து விடுவிக்கும்படியும், சிறுதொகை கடன்பட்டவராயும்மோசம் செய்யாமல் தரித்திரத்தால் சிறைப்பட்டவராயும் உள்ள ஸிவில் கடனாளிகளெல்லாரையும் விடுவித்து, அவர்கள் பட்டகடன்களை (கவர்ன்மெண்ட்) கொடுத்து விடும்படியும் உத்தரவிடத் திருவுள்ளம் கொண்டிருக்கிறார்.

மேற்சொன்ன இனங்களும் நன்கொடைகளும் தருமங்களும் யார்யாருக்கு எந்தெந்த நிபந்தனைக்குட்பட்டுச் செய்யப்படுமென்பது இனி வெளிப்படுத்தப்படும்.

ராஜ சக்ரவர்த்தியை கடவுள் காப்பாராக.'

**Transfer of Capital to Delhi and Modification of Bengal Partition.**

டெல்லிராஜஸ்தலமானது, வங்காளப் பிரிவினை மாற்றப்பட்டது.—சக்ரவர்த்தி யவர்கள் தர்பார் முடிவில் சில முக்கியமான நிர்வாகத் திருத்தங்களுக்குத் தாம் அனுமதி கொடுத்திருப்பதாக விளம்பரப்படுத்தினர். இந்தத் திருத்தங்கள் பின்வருமாறு. அவைகள் சக்ரவர்த்தியினுல் வெளியிடப்பட்டன :—

"தர்பார் முடிவில் நமது ஜனங்களுக்கு நாம் வெளியிட விரும்புவதாவது :—ஆலோசனை ஸபையிலுள்ள நமது கவர்னர் ஜெனரலோடு ஆலோசனை செய்து நம் மந்திரிகள் நமக்குச் சொன்னபடி இந்தியா கவர்ன்மெண்டின் ராஜஸ்தலம் கல்கத்தாவிலிருந்து பழய ராஜஸ்தலமாகிய டெல்லிக்கு மாற்றுவதாக நிச்சபம் பண்ணி விட்டோம். அதே காலத்தில் இந்த மாறுதலின் பயனுக, வெங்காளமானது ஒரு ப்ரவிடென்ஸியாக்கப்பட்டு அதற்கு ஒரு கவர்னர் நியமிக்கப்படுவார். பேஹார், ஒரிஸ்ஸா, சோட்டா நாக்பூர், இந்த மூன்று மாகாணங்களையும் சேர்த்து ஒரு லெப்டினென்ட் கவர்னரும் நிர்வாக ஸபையும் நியமிக்கப்படுவார்கள் ; ஆஸாம் மாகாணம் ஒரு சீப் கமிஷனருக்குள் இருக்கும் இப்படி புதிதாய் சிருஷ்டிக்கப்பட்ட மாகாணங்களையும் எல்லைகளும் நிர்வாகத்தையும் ஆலோசனை ஸபையிலுள்ள நமது இந்தியா ஸெக்ரிடெரியின் ஸம்மதத்தின்பேரில் ஆலோசனை ஸபையிலுள்ள நமது கவர்னர் ஜெனரல் அவசியமானபடி அமைப்பார். இந்தத்திருத்தங்களால் இந்தியா இப்போதைவிட நன்ருய் நிர்வகிக்கப்பட்டு நமது அன்புள்ள ப்ரஜைகளின் அதிகமான வளப்பத்துக்கும் சந்தோஷத்துக்கும் அவைகள் ஹேதுவாக வேண்டு மென்று நாம் மனப்பூர்வமாய் விரும்புகிருேம்."

இது சொன்னதும் தர்பார் முடிந்து கலேந்தது. அன்றை தினம் ராத்திரி சக்ரவர்த்தியின் இருப்பிடத்தில் வெகுபேர்களுக்கு விருந்து நடந்தது. சாப்பாடானபிறகு சக்ரவர்த்தியும் சக்ரவர்த்தினியும் 4000 விருந்தாளிகளை வரவேற்றுர்கள். இவைகளெல்லாம் 12-ம் தேதி வைபவங்கள்.

13-ம் தேதி யன்று காலமே ராணுவ உத்தியோகஸ்தர்களை வரவேற்றுர். பகல் $12\frac{1}{2}$ மணிக்கு டெல்லி முனிஸிபாலிட்டியாலும் சென்னை ராஜதானி ஜனங்களாலும் உபசார அட்ரெஸ்கள் வாசிக்கப்பட்டன. அவைகளுக்கு சக்ரவர்த்தி சொல்லிய பதில்களை இன்னெரு பகுதியில் அச்சிட்டிருக்கிருேம். ஸாயந்திரம் சக்ரவர்த்தியும் சக்ரவர்த்தினியும் கோட்டையின் பக்கத்தில் நடத்திய தோட்டக்கச்சேரிக்கு போனுர்கள். அங்கே நடந்த வேடிக்கைகளையும் விநோதங்களையும் பார்ப்பதற்காக திரளான ஜனங்கள் வந்திருந்தார்கள். ஜனங்களும் பார்க்கும் படியாக பழைய காலத்து மொகலாய சக்ரவர்த்திகள் செய்தது போல் சக்ரவர்த்தியும் சக்ரவர்த்தினியும் ஒரு உயர்ந்த கொத்தளத்தின் மேல் வீற்றிருந்தார்கள்.

14-ந்தேதியன்று சக்ரவர்த்தியும் சக்ரவர்த்தினியும் ஸைன்யங்களைப் பார்த்தார்கள். அன்று இரவில் சக்ரவர்த்தி கௌரவப்பட்டம் கொடுத்தவர்களுக்கு அவரவர்களுக்குள்ள பதக்கங்களைக்கொடுத்தார்.

15-ம் தேதி காலையில் புதிதாய் தலைநகரமாக ஆக்கப்பட்ட புது டெல்லி நகரத்துக்கு அஸ்திவாரக்கல் நாட்டினர். அப்பொழுது லார்டு ஹார்டிஞ்ஜ் பேசினதையும் சக்ரவர்த்தி பேசினதையும் 'இந்திய நாட்டு ஸமாசார' ப்பகுதியில் காணலாம். பிறகு போலீஸ்படைகளைப்போய்ப்பார்த்தார்கள். ஸாயந்திரம் ஸைன்யங்களின் வேடிக்கைகளையும் விளையாட்டுகளையும் போய்ப்பார்த்தார்கள்.

16-ம் தேதி யன்று சக்ரவர்த்தி டெல்லியை விட்டுப் புறப்பட்டு நேப்பாளத்தில் வேட்டையாடப்போனுர். சக்ரவர்த்தினி புறப்பட்டு ஆக்ராவுக்குப் போய் அங்கிருந்து ராஜபுடானுவில் சில ஸமஸ்தானங்களை பார்த்துவருகிருர். இருவரும் 30-ம் தேதி யன்று கல்கத்தாவுக்கு வந்து சேர்வார்கள்.

# THE CULTIVATION OF GROUNDNUTS.

BY
AN AGRICULTURIST.

## நிலக்கடலே ஸாகுபடி.

நிலக் கடலேயில் நாட்டுக் கடலே என்றும் மோரீஸ் கடலே என்றும் இரண்டுவகையுண்டு. இப்பொழுது அதிகமாக ஸாகுபடி செய்யப்பட்டு வருகிறது மோரீஸ் கடலேதான்.

### Season-Rainfall.

காலஸ்திதி—மழை.

மானவாரி ஸாகுபடி.—நிலக்கடலே 5, 6 மாதத்திய பயிர். விதை போட்டது முதல் இரண்டு மாதங்களுக்கு கொஞ்சம் ஈரம் இருந்தால் போதும். பூத்து கொட்டை இறங்க ஆரம்பிக்கும் வரையில் அதிக ஈரம் வேண்டியதில்லே. ஆகையால் பிந்தின 2, 3 மாதங்களில் ஈரக்குறைவில்லாமல் நல்ல மழை பெய்யக் கூடிய காலத்தை உத்தேசித்து, விதை விதைக்கவேண்டும். சில ஜில்லாக்களில் அக்டோபர் மாதம் முதல் டிஸம்பர் மாதம் வரையில் நல்ல மழை பெய்யக்கூடும். இப்படிப்பட்ட இடங்களில் ஜுலே அல்லது ஆகஸ்டு மாதத்தில் விதைப்பது நலம். சில ஜில்லாக்களில் ஜுன்மாதம் முதல்ஸெப்டம்பர்மாதம் வரையிலும் நல்ல மழைபெய்கிறதுண்டு. இவ்விடங்களில் ஏப்ரல், மே மாதங்களில் முதல் மழை பெய்த உடனே விதையை விதைத்து விடவேண்டும். ஆகையால் அனுபோகத்துக் குத்தக்கபடி கிருஷிகர்களே விதை விதைக்கும் காலத்தை நிதானித்துக்கொள்ளவேண்டும்.

### Soil.

பூமி.—அதிக களிப்புள்ள பூமி மணிலாக் கொட்டை ஸாகுபடிக்குத்தகுந்ததல்ல. இதில் பயிர் பார்வைக்கு செழிப்பாக வந்தாலும், அதிக மாசூல் கிடைப்பதில்லே. அறுவடைக்கு மண்பொல பொலப்பில்லாமல் கெட்டியாயிருப்பதால் கடலேயைக் கொத்தி சேகரிக்க அதிக செலவு பிடிக்கும். ஆகையால் லாபம் குறையும். மணல் சாரி நிலந்தான் ஸர்வ சிலாக்கியம். பூமி நல்ல வடிகாலுள்ளதாயிருந்தால் நலம். ஏனென்ருல் நிலக்கடலேப் பயிருக்கு நீர்ப்பிடிப்பு கூடாது. இளம்பயிராக இருக்கும்போது பெரும் மழை அடித்தால் பயிர்கெட்டு வளராமல் போகிறது.

### Preparatory Cultivation.

செய் நேர்த்தி.—விதை விதைப்பதற்கு முந்தியே பூமியிலுள்ள புல் பூண்டுகளே எடுத்து விடவேண்டும். இல்லாவிட்டால் பயிர் வளர்ந்து நல்ல மழை அடிக்கும்போது இப்புல் பூண்டுகள் அதிகப்பட்டு மாசூலேக் கெடுத்து விடும். ஆகையால் கோடைகாலத்தில் வேறு பயிர் செய்தாவது கோரை முதலிய புல் பூண்டுகளே அகற்றிவிடவேண்டும். நிலம் புல் பூண்டுகள் இல்லாமல் சுத்தமாயிருக்குமானுல் அதிக உழவு வேண்டியதில்லே. மூன்று மடக்கே போதும்.

### Manuring.

எருவிடுதல்.--விதைப்பதற்கு கடைசி உழவு உழுவதற்கு முன் நிலத்துக்கு எருவிடவேண்டும். ஆடுமாடுகளின் சாணியையாவது ஊர்க்குப்பைகளேயாவது எருவாகப் போடும் பக்ஷத்தில் அதை ஒரு மூலேயில் குவித்து சாயவிடாமல் சீராக நிலம்முழுவதும் போடவேண்டும். கட்டியாயிருக்கும் எருவை உடைத்து விட்டு நன்ருய்ப் பரவின உடனே நிலத்தையும் உழுதுவிடவேண்டும். எவ்வளவுக் கெவ்வளவு எருவிடுகிருேமோ அவ்வளவுக் கவ்வளவு லாபமுண்டு. ஆடுமாடுகளின் சாணி, ஊர்குப்பை சாம்பல், இவைகள் சிலாக்கியமான எரு. ஒரு ஏகர் நிலத்துக்கு 15, 20, வண்டி எரு அடிப்பது நல்லது.

Seed.

விதை.—விதைக்காக நல்ல விதைக் கடலையை முந்தி மாசூலிலிருந்து பொறுக்கிஎடுத்து வைத்திருக்கவேண்டும். இந்தக் கடலையை கையால் உடைத்து விதையை எடுத்துக் கொண்டு அவைகளிலிருந்து நல்லவிதைகளை மாத்திரம் பொறுக்கி விதையாக உபயோகப் படுத்தவேண்டும். கெட்டுப்போன விதைகளை நீக்கி விடவேண்டும்.

Sowing as a pure Crop,

நிலக்கடலையை தனியே ஸாகுபடி செய்தல்.—உழுதுகொண்டு போகும் பொழுதே உழவு சாலில் விதைகளை கையால் போட்டுக் கொண்டு போவது வழக்கம். இதனால் விதை அதிகம் செலவாகிறது. விதைகளும் நெருக்கமாய் முளைத்து படர்ந்து வளராமல் நெருங்கிப்போய் விடுகிறது. தவிரவும் பிற்பாடு களை வெட்ட அதிக சிரமமுண்டாகிறது. அதிக மழை பெய்தால், தண்ணீர் தேங்கி நிற்க ஹேதுவாகிறது. ஒரு படைச்சால் விட்டு ஒரு படைச்சாலில் பூமி வளத்தைப் பொறுத்து, அரை அடி முக்கால் அடிக்கு ஒரு விதையாக விதைப்பது நலம். இதில் விதை லாபமுமுண்டு. இப்பொழுது, ஒரு ஏகர் நிலத்தில் 32 பட்டணம்படி விதைப்பதற்கு 10, 12 படி விதைத்தால் போதும். பயிர்கள் ஒன்றோடொன்று படாமல் விரிந்து வளரவும் ஹேதுவாகும். இப்படி விதைப்பதால் கைக்களை வெட்டுவதற்கு பதிலாக ஒரு ஜதை மாடுகட்டி சுலபமாய் களைவெட்டலாம். விதைத்து முதல் மூன்று மாதம்வரையில் நிலக் கடலையுடன் மற்றொரு பயிர் ஸாகுபடி செய்வதற்கு அனுகூலமாகும். இந்த விதம் களை வெட்டுவதனால் நிலத்தில் தண்ணீர் தேங்காமல் வடியவும் ஹேதுவாகிறது.

Sowing as mixed crops.

நிலக்கடலையை கலப்புப்பயிராக விதைத்தல்.—நிலக்கடலை 5,6 மாதப் பயிராயிருப்பதால் இந்தப் பலனை விதைப்பதற்கு முந்தியே வேறு ஒரு பலன் பூமியிலிருந்து எடுக்க வேண்டி, தென்னார்காட் ஜில்லாக் குடிகள் 2 அல்லது 3 மாதத்துப் பயிரான, சோளம் கம்பு போன்ற தானியப் பயிரை முதலில் நிலத்தில் தெளிக்கிறார்கள். பிறகு விதைகள் மறையும்படி மேலாக ஒரு சால் உழுது விட்டு பூமியை நிரவுவதற்கு மரத்தின்கிளைகளை படல் கட்டி இழுக்கிறதுண்டு. விதை முளைத்து அரையடி உயரமானதும் அடுத்த மழையில் பயிரடிப்பார்கள். அதாவது பூமியைக்கொத்தி களை எடுப்பார்கள். பூமி இறுகிப்போகுமானால் இரண்டு மூன்று தடவை இப்படிக் கொத்திக் களை எடுப்பதுண்டு. தானியப் பயிர் புஷ்பிக்க ஆரம்பிக்கும்பொழுது, நிலக் கடலை விதையை முக்கால் அடிக்கு ஒன்றாக களைவெட்டிகொண்டு தானியபயிரின் இடையில் போடுவார்கள். இப்படி பூமியில் பாடுபடுவதினால் தானியப்பயிரும் நன்றாய் வளர்கிறது. பிற்பாடு ஸாகுபடி செய்யப்படும் நிலக்கடலைக்கும் சிலாக்கியமாகிறது. கிணற்று ஆதாரமுள்ள நிலத்தில் புன்செய்ப்பயிரான சோளம், கம்பு இவைகளை ஸாகுபடி செய்வதில்லை. ராகி, தினை, இவைகளை ஸாகுபடி செய்கிறார்கள்.

கேழ்வரகு ஸாகுபடிக்கு பாத்தி கட்டி தண்ணீர் இறைத்து, இந்தப் பாத்தியில் அந்த நாற்றை நடுவார்கள். கேழ்வரகு கதிர் வாங்கும் ஸமயத்தில் ½ அடிக்கு ஒன்றாக நிலக் கடலையையும் ஊன்றுவார்கள். சோளம், கம்பு இவைகளைப்போலவே தினையையும்விதைத்து அவசியமானால் பின்பு ஜலம் இறைப்புக்காக பாத்திகட்டுவார்கள், தினைப்பயிர் லேசாய்

முடியக்கூடியது. ஆகையால் தினை அறுவடையானபிறகு நிலக்கடலை விதையை ஊன்றுவது வழக்கம். விதைக்கலப்பை முதலான உழவுக்கருவிகள் உபயோகப்பட்டு வருமிடங்களில் கலப்புப் பயிர் நன்ருய் ஸாகுபடி செய்யலாம். தானியப்பயிரை $1\frac{1}{2}$ அடிக்கு ஒன்ருயுள்ள உழவு சாலில் விதைத்து மத்தியிலுள்ள இடத்தை தன்துளுவினல் களை வெட்டி இந்த இடை வெளியில் ஸரியான பட்டத்தில் நிலக்கடலை விதையை ஊன்றலாம். தானியப்பயிர் அறுவடையானதும் நிலக்கடலைக்கு மத்தியில் தந்துளு என்னும் கலப்பையை ஓட்டி களைவெட்டலாம். இந்த மாதிரி பாலூர் விவஸாயப் பண்ணையில் ஸாகுபடி செய்து பார்த்ததில் நல்ல லாபமாகத் தெரியவந்தது.

After Cultivation.

பின்சாகுபடி.—நிலக்கடலைக்கு களைவெட்ட செடிகளுக்கு இடையே களை வெட்டியால் கொத்துகிருர்கள். இதற்கு கூலியாட்கள் அதிகமாகவேண்டும். கூலியாட்கள் கிடைக்காத அனேக இடங்களில் களைவெட்டி பூமியை தளரச் செய்யாத காரணத்தினுல், நிலக்கடலை விருத்தியாகிறதில்லை. ஆகையால் விதைக் கலப்பையால் விதைவிதைத்து பிறகு தந்துளு என்னும் களைவெட்டியால் ஒரு ஜதை எருதுகொண்டு களைவெட்டுவது சுலபம். இதுவே சிலாக்கியமென வற்புறுத்துகிருேம். எப்படியாவது அடிக்கடி நிலத்தைக்கொத்திக் கொடுக்கவேண்டியது அவசியம். இவ்வளவு தடவைதான் கொத்திக் கொடுக்கிறதென்று நிர்ணயமில்லை.

நிலக்கடலை விதைத்து மூன்றுமாதம் வரையில் மழைபெய்து பூமி காயும்பொழுதெல்லாம் பூமியை நெகிழச்செய்வது அவசியம். இதனுல் பூமி ஈரம் காத்து, கன்னிகள் பூமியுள் சென்று கடலையைப் பெருக்க செய்யும், களைகளும் மண்டாது.

Harvesting.

அறுவடை.—ஸுமார் 5-மாதத்தில் நிலக்கடலை வெட்டத்தயாராகும். செடிகாய்ந்து, மேல் கட்டை முத்தி கடலையின் மேல் தோல் சற்று சிவந்த நிறமாகும்பொழுது அறுவடை செய்துவிடலாம். ஒவ்வொரு செடியிலும் முற்ருத இளம் கொட்டைகளுமிருக்கக்கூடும். மணல்சாரி நிலங்களில், ஒவ்வொரு செடியாய்ப்பிடுங்கி கடலையை பறித்துவிடுகிருர்கள். இப்படிப்பட்ட பூமிகளில்தென் ஆர்க்காடு ஜில்லாவில் மண்வெட்டிக் கலப்பையால் உழுது கடலையை சேகரம் செய்கிருர்கள். கடினமான தரைகளில் செடிகளை முதலில் பிடுங்கி விட்டு அவைகளிலிருக்கப்பட்ட நிலக்கடலைகளையும் எடுத்துக்கொண்ட பிறகு பூமியை மண்வெட்டியால் ஸுமார் 4 அங்குலம் ஆழம் கொத்தி கடலையை பெண்களைக் கொண்டு ஒவ்வொன்ருய்ப் பொறுக்குகிருர்கள். இப்படிச் சேகரிக்கப்பட்ட கடலையை வெயிலில் நன்ருய்க் காயப்போடவேண்டும். ஸாயங்காலம் குவியல் செய்து மூடிவைக்க வேண்டும். மறுதினம் காயவைத்து, நன்ருய் இப்படி காய்ந்த பிறகு எடுத்துவைக்கவேண்டும்.

Yield.

கண்டுமுதல்.—இது செய் நேர்த்தியைப் பொறுத்தது. நன்ருய் உழுது, எருவிட்டு பக்குவமாய் ஸாகுபடியாகி காலமும் ஸரியாக ஒத்துக்கொண்டால், மானவாரியாக செய்யப்படும் ஸாகுபடியில் ஏகர் 1-க்கு 700 முதல் 1200 பட்டணம் படிவரையில் கடலை கிடைக்கும். அநேகர் எருவிடாமலே தங்கள் நிலத்தில் முதல் முதல் கடலை ஸாகுபடி செய்கிருர்கள். ஸரியான மாசூல் கிடைக்கிறது. மறுவரு

ஷம் அப்படியே எருவிடாமல் ஸாகுபடி செய்கிறுர்கள். முன்போல் அவ்வளவு மாசூல் கிடைப்பதில்லே. இதனுல் அதைரியப்பட்டு கடலே ஸாகுபடியை விட்டுவிடுகிறுர்கள். மேலே சொல்லியிருக்கிறபடி எருவிட்டால் தான் மணிலாக்கொட்டை ஸாகுபடியில் பலனுண்டு.

The Disposal of the Crops.

விற்பனே.—நிலக்கடலே உடனே விலேயாகி விடுகிறது. புதிதாக ஸாகுபடி செய்யப்படும் ஜில்லாக்களில் விலேயாவது கஷ்டம். ஆனுல் பயிரை எடுத்து எண்ணெய் ஆட்டலாம். எண்ணெய் நன்ருய் விலேயாகிறது. 100 ராத்தல் பருப்பில் ஸுமார் 40ராத்தல் எண்ணெய் எடுக்கலாம். கடலேப் பிண்ணுக்கை கால் நடைகளுக்கு தீனியாக வைக்கலாம். அல்லது நிலத்திற்கு எருவாகப்போடலாம். தென்னுர்காடு ஜில்லாவில் நன்செய்களுக்கு ஏகர் 1-க்கு ஒரு பாரம் வீதம் கடலேப் பிண்ணுக்கை எருவாகப் போடுகிறுர்கள். இதினுல் கிராமத்திலுள்ள ஊர்வாரிக்குப்பை வகையரா நிலக்கடலே ஸாகுபடிக்கு எருவாக உதவுகிறது. கடலேப் பிண்ணுக்கையே கடலே ஸாகுபடிக்கு உரமாக உபயோகிக்கக்கூடாதாஎன்பதை பாலூர் விவசாய பண்ணேயில் பரிக்ஷித்து வருகிறுர்கள். காய்ந்துபோன நிலக்கடலேச் செடி கொடிகள் ஆடுமாடுகளுக்கு நல்ல தீனி, நன்ருய் வைத்து வைக்கோலுடன் கலந்து போடவேண்டும்.

Irrigated groundnut.

இறைப்பு நிலக்கடலே.—தென்னுர்காடு ஜில்லாவில் நிலக்கடலேயை இறைப்புப் பயிராகவும் ஸாகுபடி செய்கிறுர்கள். மானவாரிப் பயிராக ஸாகுபடி செய்வதற்கும் இறைப்புப் பயிராக ஸாகுபடி செய்வதற்கும் ஒன்றும் வித்தியாஸம் இல்லே. இறைப்புப் பயிராக ஸாகுபடி செய்வதில் அதிகமாக எருவிட வேண்டும். அதற்குத்தக்கபடி அதிக மாசூலும் கிடைக்கும். மேலே சொன்னபடி (ராகியை) கேழ்வரகை பூமியில் தெளித்து சிறு பாத்திகளாகக் கட்டி ஜலம் இறைத்து வருகிறுர்கள். கேழ்வரகு கதிர்வாங்கும் ஸமயத்தில் நிலக்கடலே விதையை கேழ்வரகில் களேவெட்டியால் போடுவார்கள். அப்படி நிலத்தை பண்படுத்தி ஸரியானபடி மழை இல்லாவிட்டால் கேழ்வரகு நாற்று விட்டு பிற்பாடு நடுவார்கள். சில ஸமயங்களில் நிலக்கடலேயையே தனிப்பயிராகவும் ஸாகுபடி செய்வார்கள். நிலத்தைப்புழுதியாக உழுது பாத்தி பிடித்து அதில் நிலக்கடலேயை ஸுமார் முக்கால் அடிக்கு ஒன்ருக களேவெட்டியால் போட்டு பிறகு தண்ணீர் பாய்ச்சுவார்கள். விதையை நெருக்கமாய் ஊன்றவேகூடாது. நாட்டுக் கடலேயை ஊன்றி வந்தபடியே மோரிஸுக் கடலேயையும் ஜனங்கள் நெருக்கமாய் ஊன்றி வருகிறுர்கள். நாட்டுக்கடலேச் செடியின்மேல் வரிகள் கிட்டவே மணி பிடிக்கும். மோரீஸ் கடலே அப்படியல்ல. இதன் செடி நாலாபக்கமும் கிளே விட்டுப் பரவிப்படரும். ஒவ்வொரு கிளேயிலும் மணி ஜாஸ்தியாகப் பிடிக்கும். நெருக்கமாய்ப்பயிரிடுவதில் களேகளுக்குபரவிப்படரஇடமில்லாமல் போகிறது. கொத்தி கிளேஎடுக்கவும் ஸாத்தியப்படுகிறதில்லே. பூமி கெட்டிப்பட்டு களேமண்டிவிடுகிறது. பூமி கெட்டியாய்ப் போவதால் பாய்ச்சும் ஜலம் சேதமாய்ப் போய் உள் ஈரமில்லாமல் அடிக்கடி தண்ணீர் பாய்ச்சவேண்டியதாகிறது.

Cultivation and Sowing.

விதைத்தல்.—எப்படி விதைப்பது சிலாக்கியம் என்று பாலூர் விவசாயப்பண்ணேயில் பரிக்ஷித்து வருகிறுர்கள். இப்போது தெரிந்த வரையில் ஒரு சால்விட்டு ஒரு சாலில்விதை

நடுவது சிலாக்கியம். விதைப்புக்கு முந்திநிலத்தில் தண்ணீரைப் பாய்ச்சி, கொஞ்சம் காய்ந்ததும் உழுதுபூமியை மட்டப் படுத்த வேண்டும். பூமியிலுள்ள ஈரமே விதைமுளைக்கப்போது மானதாகும்.

## Irrigation and After Cultivation.

நீர்பாய்ச்சலும் பின் சாகுபடியும்.—விதைகள் நடப்பட்டிருக்கும் படைச்சால்களுக்கு மத்தியில் நாட்டுக்கலப்பையால் ஒரு சால் உழுது அதன் வழியாக தண்ணீர்பாய்ச்சிவர வேண்டும். அப்படித் தண்ணீர் பாய்ச்சுவதில் தண்ணீர் சேதமுண்டாகாது. பூமி ஸமமாக இல்லாவிட்டால் இதிலிருந்து சிறுவாய்க்கால்கள் இழுத்துப்பாய்ச்சவும் நேரிடும். உழுவுசால் கொஞ்சம் காய்ந்ததும், மறுபடி முன்போல் உழுதுவிடவேண்டும். இப்படி செய்வதால் அதிக ஈரம் கொள்ளும். மறு தண்ணீர் பாய்ச்சுவது பூமியின் தன்மையைப் பொறுத்தது. காலை வேளையில் பயிர் கண்ணுக்குச் செழிப்பாகத் தோன்றினுல் தண்ணீர் பாய்ச்ச வேண்டிய அவசியமில்லை. கடைசி இரண்டு மாதங்களில் அதிகமாக தண்ணீர் பாய்ச்ச வேண்டியிருக்கும். 5-வது மாதக்கடைசியில் கொட்டை முற்றிவிடும். இனிதண்ணீர் பாய்ச்சக்கூடாது.

மானவாரி பூமியிலிருந்து கடலையைவெட்டி எடுப்பதுபோலவே இறைப்பு நிலத்திலிருந்தும் கடலையை வெட்டி எடுக்கலாம். ஆனுல் கடைசியில் ஒரு தண்ணீரைப்பாய்ச்சி நிலத்தைகொஞ்சம் பதப்படுத்திக் கொண்டு வெட்டவேண்ணும். இறைப்பு பூமியிலிருந்து ஒரு ஏகராவில் 1000 படி முதல் 3000 படி வரையில் மாசூல் கிடைக்கிறது.

விவஸாயி.

## HER MAJESTY QUEEN MARY.

## மாட்சிமை தங்கிய மஹாராணி மேரி சக்ரவர்த்தினி.

மேரி அடி லேய்ட் ராஜகுமாரிக்கும் டெக் ராஜகுமாரருக்கும் 1867-ம௵ மே௴ த்தில் ஜனனமான ஸந்தானமே நமது சக்ரவர்த்தினியாகிய மேரி மஹாராணி. இரண்டு மாதம் கழிந்தபிறகு இந்தக் குழந்தைக்கு "விக்டோரியா மேரி அகஸ்டா லூயிஸா ஒல்கா பாலின் க்லாடைன் அக்னிஸ்" என்று நாமகரணம் செய்யப்பட்டது.

இந்த ராஜகுமாரிக்கு நாலுவயதானபோது தாய் தந்தைகள் அவளை ரம்பன்ஹீம் என்னும் ஊருக்கு அழைத்துக்கொண்டு போனுர்கள். அப்போது வேல்ஸ் இளவரசரும் இளவரசியும் தங்கள் குழந்தைகளுடன் அவ்விடம் வந்து இந்தக்குடும்பத்துடன் கலந்துகொண்டார்கள். இவ்விரு குடும்பத்தாரும் ஒன்றுய்ப் பழகிப் பொதுவான ஒரே மண்டபத்தில் போஜனம் பண்ணிவந்தார்கள். இந்தப்பழக்கம் முதிர முதிர இவர்களுக்குள் ஸ்நேகம் விருத்தியானதோடு சிலஸமயம் விவாக ஸம்பந்தங்களும் நிச்சயிக்கப்பட்டன.

டெக் பிரபுவும் அவருடைய மனைவியும் தங்கள் குழந்தைகளை வெகு ஜாக்ரதையாய் வளர்த்துவந்தார்கள்; எல்லாரிடத்திலும் மரியாதையாயும் பட்சமாயும் நடந்துகொள்ளும்படி சொல்லிக்கொடுத்தார்கள். குழந்தைகள் குசாலாய் குதித்து விளையாடுவதில் இவர்கள் சந்தோஷங்கொண்டபோதிலும் அந்த விளையாட்டுப் புத்தியினுல் அவர்களுடைய படிப்புக்குக்குறைவுவராமல் பார்த்துவந்தார்கள்.

மேரி ராஜகுமாரியும் அவளுடைய ஸ[illegible]தரர்களும் பிறத்தியாருடைய கஷ்ட[illegible]களை நன்குய் உணரவேண்டுமென்[illegible]

களுடைய தாயாருக்கு அதிக ஆவல் இருந்தபடியால் அப்பெருமாட்டி அவர்களை ஏழை ஜனங்களுடைய வீடுகளுக்கு அடிக்கடி கூட்டிக்கொண்டு போகும்படி ஏற்பாடு செய்தாள். இந்த விதமாக மேரி ராஜகுமாரி இளம் வயதிலேயே ஏழை ஜனங்களுடைய ஸுகதுக்கங்களைப்பற்றியும் கஷ்ட நிஷ்டூரங்களைப்பற்றியும் சிறிது தெரிந்துகொள்ள நேர்ந்தது. இப்படி ஏழைகளுடைய வீடுகளுக்குப்போய் வந்தது நம் ராஜகுமாரியின் மனதைவிட்டு எப்போதும் அகலாமல் ஸ்திரமாய் ஊன்றிவிட்டபடியால் அந்த ஞாபகம் பிற்காலத்தில் அந்த அம்மைக்கு அதிக பிரயோஜனகரமாயிருந்தது.

ராஜகுமாரி தன் ஸகோதரருடன் சேர்ந்து உபாத்தியாயரிடத்தில் ஒன்றுகவே வாசிப்பாள். இவள் அதிக தீவிர புத்தியும் ஸாமர்த்தியமுமுள்ளவளென்றும், ஸங்கீத த்வனியைப்போன்ற இனிய சாரீர ஸம்பத்துடையவளென்றும் சொல்லுகிறுர்கள். பிரபஞ்சத்திலுள்ள இயற்கைப்பொருள்களைக் குறித்து ஆராய்ந்தறிய இவளுக்கு தக்க ஸந்தர்ப்பங்கள் நிறைய இருந்தபடியால் அந்த விஷயத்தில் விசேஷ தேர்ச்சி பெற்றிருக்கிறுள். ராஜகுமாரி தன் தாயாருடன்கூட கோவிலுக்குத் தப்பாமல் போய்வருவதுண்டு. மேரி ராஜகுமாரி 1883-ம் ௵த்தில் தன் தாய் தகப்பன்மாருடன் இடலி தேசத்திலுள்ள ப்ளாரென்ஸ் நகரத்துக்குப்போனுள். அங்கே தங்கியிருந்த காலத்தில் ராஜகுமாரி ஸாதாரணமாய் தன் வாத்தியார்களிடம் கல்வி கற்று வந்ததுடன், சித்திரம், ஸங்கீதம்முதலிய கலைகளிலும் அனுபவ ரீதியாய்ப் பழகிவந்தாள்.

[illegible]ப்படி இரண்டு வருஷகாலம் வெளிநாட்[illegible]ஞ்சாரஞ்செய்த பிறகு, இந்த குடும்பத்தார் இங்கிலாந்துக்குத் திரும்பிவந்தார்கள். இப்படி ஸஞ்சாரம்செய்தது ராஜகுமாரியின் அபிப்பிராயங்கள் விசாலமாவதற்கு விசேஷ உதவியாயிருந்தது. அவளுக்கு இயற்கையாயிருந்த அரிய குணங்களெல்லாம் தினந்தோறும் அவள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் வெளிப்படத்தொடங்கின. மேரி ராஜகுமாரி நாடகத்தில் பிரியம் கொண்டவள்; லண்டன் நகரத்தில் நடக்கும் நாடகங்களுக்கு விசேஷமாய் போவதுண்டு. கிராமத்தில் போய் வசிப்பதிலும் இந்த ராஜ குமாரிக்கு அதிக ஆசை. இவள் கிராமங்களுக்குப் போகும்போதெல்லாம் அங்குள்ளவர்கள் இவளை மெத்தப் பிரியமாய் எதிர்கொண்டழைத்து உபசரிப்பார்கள்.

ராஜ குமாரிக்கு வயதாக ஆக அவள் தன் அந்தஸ்துக்குத்தக்கபடி செய்ய வேண்டிய காரியங்கள் அதிகரித்து வந்தபோதிலும் அவள் படிப்பை மாத்திரம் விட்டுவிடாமல் தான் தினமும் இவ்வளவு படிக்க வேண்டுமென்று நிர்ணயித்துக்கொண்டு அந்தப்படியே தனக்குக் கல்யாணம் ஆகும் வரையில் வாசித்துவந்தாள்.

டென்னிஸன், கார்லைல், எமர்ஸன், ஜார்ஜ் எலியட் என்னும் ஆங்கில நூலாசிரியர்கள் எழுதிய புஸ்தகங்களை நமது மஹாராணியார் வெகு பிரியமாய் வாசித்து வருவார், அவர் எந்த காரியத்தையும் சீராயும் ஒழுங்காயும் செய்வதையே முக்கியமாகக் கருதுவார். ஸங்கீத வித்தையில் இவர் தாயாருக்கிருந்த அத்தியந்தமான வேட்கை இந்தம்மாளிடத்தில் காணவிட்டாலும், பாடுவதில் ஆசைகொண்டவராகவேயிருக்கிறுர். ஈசுவர விஷயமான ஞான கீர்த்தனைகளே எப்போதும் இவர் மனதுக்கு ரம்யமானவை.

நகர வாசிகள் உல்லாஸமாய்ப் பொழுது போக்கக்கூடும் கோஷ்டிகளுக்கும் கக்சேரிகளுக்கும் மேரி ராஜகுமாரி தவருவல் போவார். அக்கம்பக்கத்திலுள்ள ஜனங்களின் க்ஷேமாபிவிர்த்திக்காக செய்யப்படும் ஒவ்வொரு முயற்சியிலும் இவர் சேர்ந்து சிரத்தையுடன் வேலை செய்வார். இவ்விராஜகுமாரி தம் செலவுக்காகக் கொடுக்கப்படும் பணத்தில் ஒரு பாகத்தை ஏழை ஜனங்களின் குழந்தைகளுக்காகச் செலவிடும்பொருட்டு பிரத்தியேகமாய் எடுத்துவைத்து விடுவார். வறுமையாலும் வியாதியாலும் வருந்தும் ஜீவகோடிகளின் துன்பத்தைக் கொஞ்சமாவது நீக்கும் பொருட்டு இவர் லண்டன் நகரத்தில் ஏழைகள் நிறைந்திருக்கும் ஈஸ்ட் எண்ட் என்னும் இடத்துக்கு தன் தாயாருடன் அடிக்கடிபோவதுண்டு.

இவ்விதமாக ராஜ குமாரிக்கும் ஜனங்களுக்கும் ஸ்நேஹ ஸம்பந்தம் விருத்தியாகிவந்தது. இவர் தம் தாயாரின் உதவியைக்கொண்டு ஏழை ஜனங்களின் கஷ்டமான நிலைமையை நன்ருய்த் தெரிந்துகொண்டு லண்டன் நகரத்தில் பணக்காரருக்கும் ஏழைகளுக்கும் அதிக ஒற்றுமை யுண்டாகும்பொருட்டுக் கவலையுடன் முயற்சி செய்து வந்தார்.

விக்டோரியா மஹாராணியார் ஸிம்மாஸனமேறின ஐம்பதாவது வருஷோத்ஸவக் கொண்டாட்டம் ஸம்பந்தமாக 1887-ம் வருஷத்தில் நடந்த வைபவங்களிலெல்லாம் மேரி ராஜகுமாரியைப்போல் அவ்வளவு சுறுசுறுப்பாயும் ஸந்தோஷமாயும் சேர்ந்து வேறு எவரும் சிரத்தை பாராட்டி நடக்கவில்லை.

1893-ம் வருஷம் மே மீ 3 தேதி ராஜ குமாரியை வேல்ஸ் இளவரசரின் குமாரராகிய ஜார்ஜ் ராஜ குமாரருக்கு விவாகம் செய்து கொடுப்பதாய் நிச்சயித்திருக்கும் ஸமாசாரம் வெளிப்படுத்தப் படவே ஸகல ஜனங்களும் அகமகிழ்ச்சியடைந்தார்கள். மேரிக்குத்தகுந்த மணவாளன் ஜார்ஜே என்றும், ஜார்ஜுக்கு தகுந்த மணமகள் மேரியே யென்றும், ராஜ்யமெங்கும் பிரஜைகள் கொண்டாடி மனம் பூரித்தார்கள்.

மேரி என்ற மங்கள நாமம் ஜனங்களுக்குக் களிப்பை உண்டு பண்ணிற்று. ஆனல் இவளுடைய மங்கைப் பருவம் கழிந்துபோனபடியால் அந்த பெயர் மாறி, யார்க் பெருமாட்டி விக்டோரியா மேரி என்னும் பெயர் ஏற்பட்டது.

இப்போது நமக்கு மஹாராணியாராய் விளங்கும் ராஜ குமாரியைப்பற்றி ஸகல விஷயங்களும் ஆதிமுதல் சுபஸூசகங்களாகவே ஏற்பட்டிருக்கின்றன. விக்டோரியா மஹாராணியார் எந்த அரண்மனையில் எந்த அரையில் எந்த மாதத்தில்பிறந்தாரோ அதே அரண்மனையிலும், அதே அறையிலும் அதே மாதத்திலும் நம் மேரி மஹாராணி பிறந்தாரென்பதும், இவர் தமது இயற்கைபெயருடன் விக்டோரியா என்னும் பெயரையும் பூண்டிருக்கிருரென்பதும் மங்கள ஸூசகமென்று எண்ணப்பட்டது. ஜார்ஜ் ராஜகுமாரருக்கும் மேரி ராஜகுமாரிக்கும் விவாகம் நடப்பதாய் நிச்சிதார்த்தம் செய்யப்பட்டது முதல் அவர்கள் முன்னிலும் அதிக அந்யோந்யமாய் அன்பு பாராட்டிப் பழகிவரலானுர்கள். கல்யாணத்துக்கு வேண்டிய ஸகல ஸந்நாஹங்களும் உடனே செய்யப்பட்டு 1893-ம் வருஷம் ஜூலை மீ 6ந்தேதி திருக்கல்யாண மஹோத்ஸவம் மகா வைபவத்துடன் நடந்தேறிற்று.

1894-ம் வருஷத்திலே இந்த தம்பதிகளின் முதற் குமாரரான எட்வர்ட் ட்யூக் ஆப் காரன்வால் என்பவர் பிறந்தார். விக்டோரியா மகாராணியாரின் வைர ஜூபிலி மகோத்ஸவ ஸம்பந்தமாய் நடந்த ஸகல வைபவ சடங்குகளி

லும் மேரி இளவரசி பிரஸன்னமாயிருந்தார். இந்தக் கொண்டாட்டங்கள் முடிந்த பிறகு இந்த தம்பதிகள் ஐயர்லாந்துக்கு விஜயமாகி அங்கே ப்ரஜைகளால் பக்தி சிரத்தையுடன் வரவேற்கப்பட்டார்கள். அவர்கள் அங்கே தங்கியிருந்த காலத்தில் அந்த நாட்டாரின் அழகிய பூத்தையல் வேலையையும், ஒப்பற்ற சரிகைத்தொழிலேயும், ஜனங்களின் உல்லாஸ ப்ரியத்தையும், விருந்தினரை உபசரிக்கும் விமரிசையையும், கண்டு மகிழ்ச்சியடைந்தார்கள்.

இதற்குப் பிறகு மேரி மஹாராணியின் தாய் தகப்பன் இருவரும் இறந்துபோகவே அவர்களுடைய ஸமஸ்தானத்து விவகாரங்களை மேரி ராணி பிறருதவியில்லாமல் தாம் ஒருவராகவே கவனித்து வந்து, தாம் மேற்கொண்ட வேலையை மிக்க திறமையாயும் ஸாமர்த்தியமாயும் செய்து முடித்தார்.

1901-ம் வருஷத்தில் இந்த தம்பதிகள் கனடா ஆஸ்த்ரேலியா முதலிய குடியேற்ற நாடுகளுக்குப் பிரயாணப்பட்டுப் போனதைக் குறித்து சென்றமாதம் இந்தப் பத்திரிகையில் வெளியான ஜார்ஜ் மஹாராஜா சரித்திரத்தில் சொல்லியிருக்கிறோம்.

இந்தப் பிரயாணத்திலிருந்து திரும்பி வந்தவுடனே இவர்களுக்கு வேல்ஸ் இளவரசர்-இளவரசியென்னும் பட்டம் அளிக்கப்பட்டது.

1902-ம் வருஷத்தில் எட்வர்ட் மாஹாராஜாவின் முடிசூட்டுவைபவம் நடந்த பிறகு வேல்ஸ் இளவரசரும் இளவரசியும் இந்தியாவுக்கு விஜயம் செய்தார்கள். இந்தியாவுக்குப் பிரயாணமாவதற்குமுன் அந்த தேசத்தைப் பற்றிய ஸகல விஷயங்களையும் படித்தறிந்து கொண்டார். இந்தியாவில் தமக்கு விருந்தளிக்கும் சீமான்களுக்கும் சீமாட்டிகளுக்கும் எந்த விதமான பரிசுகள் கொடுக்கலாமென்று யோசிப்பதில் அதிக காலம் கழித்தார் இந்தியாவுக்கு ராஜகுமார தம்பதிகள் விஜயமானதை முன்னிட்டு இத்தேசமெங்கும் அற்புதமான உற்சாகம் மேலிட்டது. இளவரசி பம்பாயில் அடிவைத்தது முதல் மறுபடியும் 5 மாதம்கழித்து கராச்சியில் இந்தியாவைவிட்டு புறப்படும் வரையிலும் இளவரசியார் வெறும் காட்சிகாணவந்தவரில்லை யென்றும் இந்த தேசத்தில் ஒவ்வொரு ஸங்கதியையும் கவனமாயும், பிரீதியோடும், பொறுமையோடும் பார்த்தறிந்து அனுபவம் பெறுகிறுள் என்றும் ஸகல ஜனங்களும் கருதினுர்கள். ஹிந்துக்கள் அவரைப்பலமக்களை ஈன்ற பாக்கியவதியென பாவித்தார்கள். ஸமயம் கிடைக்கும் போதெல்லாம் இவர் ஒரு கிராமத்துக்கோ அல்லது கடைத் தெருவுக்கோ சென்று அங்கே ஜனங்களின் ஆடம்பரமற்ற சுத்தமான வாழ்க்கையைப் பார்த்துவந்தார். மற்ற ஸமயங்களில் தெரிந்துகொள்ள முடியாத பல அருமையான விஷயங்களை இவர் இவ்விதமாகத் தெரிந்துகொண்டார். இவர் ஏதாவது நல்ல காரிய மொன்றேனும் செய்யாதநாளே கிடையாது. இதனுல் இந்திய ஜனங்களுக்கு இவரிடத்தில் அதிக பிரிய முண்டாயிற்று.

இவர் அடிக்கடி ஸ்திரீகளின் ஆஸ்பத்திரிகளைப் போய்ப்பார்த்து வந்தார். இந்தியாவின் சித்திர சிற்ப கலைகளை இளவரசியார் மகிழ்ந்து கொண்டாடினுர். கராச்சியிலிருந்து ஜன்மதேசத்துக்குப் புறப்படுகிற வரையில் இளவரசியார் ஒரு நொடிப்போதேனும் வீண்போக்காமல் இந்திய விஷயங்களை சிரத்தையாய் கவனித்து வந்தார்.

ஐந்துமாதகாலம் தங்கியிருந்தபிறகு இத்தேசத்தைவிட்டு பிரிந்துபோவது தம்பதிகளுக்கு மிக்க விசனகரமாயிருந்தது. உதயபுர ராஜ்யத்துக்குப் போய்த் திரும்பிவருகையில், இளவர

சியார் தம்முடன் வந்த உத்தியோகஸ்தரைப் பார்த்து "நீர் அதிஷ்டசாலி; நீர் உதயபுரத்தை மறுபடியும் பார்க்கக்கூடும்; எனக்கோ அந்த பாக்கியம் எப்போதும் கிடைக்காது" என்று சொன்னாராம். அப்படி சொல்லும் போதே இவரது கண்களில் நீர்ததும்பிற்று.

இந்நாட்டைவிட்டுப் புறப்படுவதற்குமுன் இளவரசி எழுதிய ஒருகடிதத்தில் பின் வருமாறு கூறுகிறார்:—

"நாலரைமாதகாலம் இந்தியாவில் கழித்துவிட்டு இப்போது பிரிந்து போகிறதென்றால் மகா விசனமாயிருக்கிறது. ஆனால் ஊருக்குப் போய் என் குழந்தைகளைப் பார்க்கவேண்டுமென்னும் ஆவல் அதிகமாயிருக்கிறது. இந்தப் பிரயாணம் எங்களுக்கு அத்யற்புதமாயிருந்தது. எங்களுக்குண்டான பலவகைப்பட்ட அனுபவங்களால் அநேக ஸங்கதிகள் தெரிந்துகொண்டோம். இந்துதேசத்து மதங்களால் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி உண்டாயிற்று."

இந்தியாவிலிருந்து இவர்கள் திரும்பிப் போனபோது லண்டன் நகரத்தார் இந்த தம்பதிகளை கில்ட்ஹால்மண்டபத்தில் வரவேற்று உபசரித்தார்கள். 1910-ம் வருஷத்தில் எட்வர்ட் மஹாராஜா இறந்துபோகவே, ஐந்தாம் ஜார்ஜ் மஹாராஜா ஸிம்மாஸனமேறினார். மேரி மஹாராணி மஹாராஜாவுக்கேற்ற கற்புடைய மனைவியாகவும் பிரஜைகளின் க்ஷேமத்தில் அக்கரைகொண்ட ராணியாகவும் விளங்குகிறாள். இந்த மஹாராணியார் மகளாகவும், மனைவியாகவும், தாயாகவும், பட்டமஹிஷியாகவும் பயிற்சியடைந்து தேர்ச்சி பெற்று இப்போது இந்த மஹாராஜ்யத்தில் மண்டலேசுவரனது பாரிசத்தில் ஸரிஸமானமாக வீற்றிருக்கும் உந்நத பதவியை அடைந்திருக்கிறார்.

மஹாராணியின் ஸந்நிதானம் மிக்க ராஜகம்பீரமானது. இவர் அதிக தெய்வபக்தியும் பாரமார்த்திகபுத்தியும் உடையவர். தம் குழந்தைகளிடத்தில் இவருக்குள்ள வாஞ்சை பலவிதத்திலும் வெளிப்படுகிறது. குழந்தைகளுக்காக உல்லாசக் கச்சேரிகள் வைப்பதில் இவருக்கு விசேஷபிரியமுண்டு. இவர் தாம் செய்யும் காரியங்களையெல்லாம் கிரமந்தவறாமலும் ஒழுங்காயும் செய்யும் ஸ்வபாவமுள்ளவர். தமது தேசத்தின் புராதன சரித்திரச்சிறப்பில் அதிக பற்று கொண்டவர். சித்திர படங்களின் குணகுணங்களை நிதானிப்பதில் நல்லநிபுணர். எவ்விதமான நாடகவித்தையிலும் இவருக்கு அதிக பிரீதி. அப்பப்போது நடக்கும் ஸம்பவங்களை ஸரியாய் கவனித்து, ஸமாசாரப் பத்திரிகைகளைத் தவறாமல் படித்து வருகிறார். மஹாராணியார் விஸ்தாரமாய்ப்படித்து விவேகிகளான பலருடன் சம்பாஷித்திருப்பதனால், ஆழ்ந்த அறிவுடையவராயிருக்கிறார். இவருக்கு ஞாபக சக்தி அதிகம். தம்பிரஜைகளின் மத்தியில் இருக்கவேண்டுமென்று அதிக ஆசைகொள்ளுகிறார். வஸ்திராலங்காரத்தில் அதிக அபிருசி கொண்டவர். இங்கிலாந்துதேசம், அதுஸம்பந்தமான ஸகல விஷயங்களிலும் அதிக நேசம் கொண்டவர். தர்மவிஷயமாய் பணத்தைச்செலவிடுவதில் இவரது பெயர் எங்கும் பிரசித்தி பெற்றிருக்கிறது. கஷ்டத்தையும் துக்கத்தையும் நிவர்த்திசெய்வதில் தமக்குள்ள அவகாசத்தாலும், பொருளாலும், செல்வாக்காலும் தம்மால் கூடியதையெல்லாம் தாராளமாய்ச் செய்துவருகிறார். மனோ விஷயத்திலாவது தேகவிஷயத்திலாவது துன்பப்படும் ஸகலருக்கும் மனங்கசிந்து இறங்குகிறார். இத்தகைய அருங்குணங்கள் வாய்ந்த நமது மஹாராணியருக்கும் மஹாராஜாவுக்கும் இந்தமாதம் 12உ டில்லியில் நடந்த மகுடாபிஷேக தர்ப்பார் மஹோத்ஸவத்தை முன்னிட்டு நாம் மனப்பூர்வமாய் வாழ்த்துக் கூறுகிறோம்.

## THE PREVENTION OF DISEASE.

BY

V. A. VENKATA CHARIAR.

## வியாதி வராமல் தடுத்தல்.

——:o:——

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்னும் பழமொழி எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. மனிதருக்கு வியாதிகள் வருவது ஸகஜமானாலும் நாம் ஈஸ்வரனால் கொடுக்கப் பட்டிருக்கிற புத்தியறிவைக்கொண்டு அவ் வியாதிகளைத்தடுத்தல் வேண்டும். "வெள்ளம் வருமுன் அணைபோடவேண்டும்", அதாவது வியாதிகண்டபின் அதற்காக மருந்துண்டு ஸௌக்கியப்படுத்திக் கொள்வதைக்காட்டி லும் வியாதி வரவொட்டாமல் தடுப்பதே புத்திக்கழகு.

நமது தேசத்தில் ப்ரதிவருஷமும் ஸுமார் இருபது லக்ஷம் ஜனங்களுக்கதிகமாகவே புத் தியைக்கொண்டு தடுக்கக்கூடிய வியாதி களால் மரணமடைகிறார்களென்று கணக் கிடப்பட்டிருக்கிறது. நமது தேசத்தார் தங் கள் புத்தியை ஸுகாதார விஷயங்களில் செலுத்துவார்களானால் அந்த இருபதுலக்ஷம் ஜனங்களும் நோய்க்கு அகப்படாமல் ஸுகித் திருப்பார்கள் என்பதற்கு ஸந்தேகமில்லை. நமது புத்தியால் நாம் தடுக்கக்கூடிய வியாதி களாவன :—1. காலராவென்னும் விஷபேதி. 2. டிஸன்டரி என்னும் சீதபேதி 3 டைமீரியா என்னும் அஜீர்ணபேதி. 4 ப்ளேக் என்னும் மஹாமாரி. 5. டைபாய்டு என்னும் விஷஜ்வ ரம். 6. மலேரியா என்னும் குளிர் முறை ஜ்வரம். 7. காலிக் என்னும் வயிற்றுநோவு. 8. ரூமாடிஸம் என்னும் கை கால் பிடிப்பு. 9. எலிபன்டியாஸிஸ் என்னும் ஆனைக்கால். 10. ரிங்வோர்ம் என்னும் படர்கடி வியாதி. 11. கினிவோர்ம் என்னும் நரம்புச்சிலந்தி. 12. இட்ச் என்னும் சொறி சிரங்கு. 13. ஹைட்ரோபோபியா என்னும் வெறிநாய்க் கடித்தல். இன்னும் பாம்பு வண்டு முதலிய விஷப்பூச்சிகளை தீண்டுதலால் உண்டாகும் வியாதிகள். இத்தியாதி வியாதிகளைத் தடுப் பது புத்திமான்களுக்கு ஸர்வ ஸுலபமெ னத் தைரியமாய்ச் சொல்லலாம்.

மேற்கூறிய வியாதிகள் ஒவ்வொன்றையும் தடுப்பதைப்பற்றி நாம் செய்யவேண்டிய விஷ யத்தை அந்தந்த வியாதிகளுக்கு ப்ரத்தியேக மாகச் சொல்ல அவகாசம் போதாததினால் முக்கியமான அம்சங்களை மாத்திரம் இங்கு கவனிப்போம்.

காலரா என்னும் விஷபேதி ஸாதாரணமாய் அழுக்கிலேயே உயர்ந்தோங்கி வளரும் சில விஷப்பூச்சிகளால் உண்டாகிறது. இந்தவிஷப் பூச்சிகளுக்கு முக்கிய ஆகாரம் அழுக்கே. அழுக்கில்லாவிட்டால் இந்த விஷப்பூச்சிகள் ஆகாரமின்றி நசித்துவிடும். இந்த விஷப்பூச்சி கள் ஜலத்தில் ஸம்பந்தப்பட்டால் அந்த ஜலத்தை உபயோகிப்போர் எல்லாருக்கும் கால்ரா உண்டாகக்கூடும். அதனால்தான் ஆற் றங்கரை யோரத்திலிருக்கும் ஒரு ஊரில் அவ் வியாதிகண்டால் அந்த ஆற்றோரத்திலிருக்கும் ஒவ்வொரு ஊரிலும் அவ்வியாதிகாண்கிறது. அப்படியே ஒரு வியாதிக்காரனுக்கு உபயோ கப்படுத்தின பாத்திரத்தைக்கொண்டு ஊர்ப் பொதுக்கிணற்றில் ஜலம் மொள்ளப்பட்டால் அக்கிணற்றில் விஷப்பூச்சிகள் ஸம்மந்தப் பட்டு அந்த ஜலத்தை உபயோகப்படுத்துகிற ஒவ்வொருவருக்கும் அவ்வியாதி காண நேரி டும்.

மஹாமாரி, விஷஜ்வரம், மலேரியா, முதலிய ஸகல தொத்து வியாதிகளும் அவ்வா றே உண்டாகின்றன. ஆனால் நாம் நமது புத் தியை உபயோகப்படுத்தி நம்முடைய இருப்

பிடத்திற்கு அருகாமையிலும் நாம் உபயோகிக்கும் ஜலத்திற்கருகாமையிலும் மலம் முதலிய அழுக்குகளில்லாமல் பார்த்துக் கொள்வோமானால் ஒருக்கால் அவ்விஷப் பூச்சிகள் வேறு ஒரு இடத்திலிருந்து கொண்டு வரப்பட்டாலும் இங்கே ஆகாரமின்றி நசித்து விடுமென்பதற்கு ஸந்தேகமில்லை. நம் உபயோகத்திற்காக வற்பட்டிருக்கும் ஜலாதாரத்தையும் செவ்வனே பாதுகாத்துக்கொள்ள வேண்டியது நமது கடமை. நமது ஜனங்கள் புத்தியீனத்தால் அப்படிப்பட்ட வியாதிக்காரனுடைய துணிகளையும் பாத்திரங்களையும் பொதுக்கிணற்றில் அல்லது குளத்தில் சுத்தி செய்வதனாலும், மலங்களை 'டிஸின்பெக்டெண்ட்' என்று சொல்லப்படுகிற விஷத்தைக்கொல்லும் மருந்துகளைக் கலந்து ஒன்று சேர்த்து கொளுத்திவிட அல்லது ஆழமாய் புதைத்துவிடவேண்டியிருக்க, அப்படி செய்யாமல் அஸ்வாரஸ்யமாய் இருந்துவிடுகிறதினாலும், தங்களுக்கும் தங்களைச் சேர்ந்தவர்களுக்கும் இன்னும் மற்று முள்ளோர்யாவருக்கும் அவ்வியாதி உண்டாகச் செய்கிறார்கள்.

விஷபேதியும் மஹாமாரியும் ஏறக்குறைய ஒரேமாதிரியான தொத்து வியாதி என்றாலும் அவையிரண்டிற்கும் ஒரு முக்கிய வித்யாஸமுண்டு. விஷபேதி முக்கியமாய் ஜல ஸம்பந்தத்தினாலும் மஹாமாரி பூமிஸம்பந்தத்தினாலும் பரவுகிறது. அதனால் ஒரு ஊரில் விஷபேதி உண்டானால் இன்றைக்கு ஊர் வடக்குக் கோடியில் ஒருவனுக்கு வியாதிகாண்கிறதும், நாளைக்கு தென்கோடியில் ஒருவனுக்கு காண்கிறதுமாயிருக்கும். அதாவது அந்த ஜலத்தை யார்உட்கொள்ளுகிறார்களோ அவர்கள் இவ்வியாதிக்கு உள்ளாகக்கூடும். ஆனால் மஹாமாரிஅப்படியல்ல. அவ்விஷப்பூச்சிகள் முக்கியமாய் தரையிலும் ஸாமான்களிலும் தங்குவதால் அவ்விடத்திலிருந்து தினேதினே நாலாப்பக்கங்களிலும் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பரவி அவ்விடத்தில் வஸிப்பவர்களுக்கே காணும். ஆகையால் விஷபேதியைக் காட்டிலும் மஹாமாரி குரூரமானதானாலும் ஸுலபமாய் அடக்கக்கூடியதே.

விஷப்பூச்சி ஸம்மந்தப்பட்ட ஒவ்வொருவருக்கும் வியாதிகாணவேண்டியிருக்க ஏன் அப்படிக்காண்கிறதில்லை என்று சிலர் கேட்கக்கூடும். விஷப்பூச்சி ஸம்மந்தப்பட்ட ஒவ்வொருவருடைய தேகத்திலும் அவ்விஷப் பூச்சிகள் விருத்தியாகி ஓர் விஷத்தை உண்டாக்குகிறது. உடனே ஸ்வாமிகிருபையால் நமது உடலில் ஓர் மாறு விஷம் உண்டாய் விஷத்துக்கும் மாறுவிஷத்துக்கும் ஓர் தக்க யுத்தம் நமது உடலில் நடக்கிறது. விஷம் அதிகரித்தால் நாம் வியாதிக்குள்ளாகி மரணமடைகிறோம். மாறுவிஷம் அதிகரித்தால் வியாதியற்று போகிறது. ஆகையால் தான் விஷப்பூச்சி ஸம்பந்தப்பட்டவர்களில் சிலர் அவ்வியாதியால் வருந்துகிறதில்லை.

விஷ ஜுரம், நரம்புச்சிலந்தி, படர்கடி முதலியவைகளும் ஸாதாரண ஜுரமும் அனேகமாய் ஜல ஸம்பந்தத்தினாலேயே உண்டாகிறபடியால் விஷபேதிக்குச் சொன்னதே அவைகட்கும் தக்கனவையென்று பாவிக்கலாம்.

சொறி, சிரங்கு, கண்ணோவு, ஜலதோஷம் முதலிய ஸாதாரண தொத்து வியாதிகளும், காலரா, மஹாமாரி, முதலிய குரூர தொத்து வியாதிகளும் ஒருவனுக்குக் காணுமானால் அவனை பிரத்தியேகமாக தூரத்தில் வைத்து அவனை பாதுகாக்கும் பொருட்டு ஒருவர், இருவருக்குமேல் அவனோடு ஸம்பந்தப்படாமலும், மற்ற எவரும் அப்பாதுகாப்பாரோடு ஸம்பந்தப்படாமலும் இருத்தலே உத்தமம்.

மேற்சொல்லிய தொத்து வியாதிகளை பரவச்செய்யும் கருவிகள் காற்று, ஜலம், தரை, வியாதியஸ்தன் உபயோகித்த பாத்திரம், துணி, படுக்கை இத்தியாதிகளாதலால், வியாதியஸ்தனிருக்கும் அறையில் புதிய காற்று நுழையும்படிக்கும், பழைய காற்று வெளிப்படும்படிக்கும் கதவு பலகணிகளைத்திறந்து வைத்துக்கொண்டிருக்கவேண்டும். அறையில் காற்று அசுத்தமாகும்படிக்கு அனேகர் வியாதிக்காரனை சுற்றிக்கொண்டிருத்தல் கூடாது. வியாதிகண்ட வீடுகளிலுள்ள கிணறுகளையும், ஊரிலுள்ள பொதுக் கிணறுகளையும் ஒரு டாக்டர் அல்லது ஒரு ஸானிடெரி உத்தியோகஸ்தரைக்கொண்டு பெர்மாங்கனேட் ஆப் பொட்டாஷ் அல்லது படிக்காரம் போட்டு சுத்தி செய்விக்கவேண்டியது. பெர்மாங்கனேட் ஆப் பொட்டாஷ் போட்டு சுத்தி செய்யப்பட்ட கிணற்றின் ஜலத்தை ஸுமார் 24 மணிநேரம் உபயோகிக்கலாகாது. நாம் குடிக்கும் ஜலத்தை நன்ருய்க் கொதிக்கவைத்து ஆற்றி அருந்தவேண்டும். கொதிக்கிற ஜலத்தில் குளிர்ந்த ஜலம் விட்டு ஆற்றுவது ஒருபோதும் கூடாது. தரையையும் சுவர்களையும் சுத்தி செய்வதற்கென்று ஆஸ்பத்திரியில் கொடுக்கப்படும் பெர்க்ளோரைட் ஆப் மெர்க்குறி லோஷன் என்று சொல்லப்படும் ஓர் பாஷாண திராவகஜலத்தை வாங்கி வீடு, சுவர், கூரை முதலிய எல்லாவற்றையும் நன்ருய் நனையும்படி கழுவவேண்டும். அப்படிக்கழுவி ஆறின பிறகு சுண்ணும்படித்தல் நலம். ஸாதாரணமாய் நம்மவர்கள் ஒரு வீட்டுக்கு சுண்ணும்பு அடிக்கவேண்டுமானல் சுண்ணும்பை முதல் நாள் ஜலத்தில்போட்டு மறுநாள் சுண்ணும்பு அடிக்கிறது வழக்கம். அப்படிச் செய்வதினல் சுண்ணும்பு அடித்தலின் குணமற்றுப்போய்விடுகிறது. ஆகையால் சுண்ணும்பை ஜலத்தில்போட்டுக் கறைத்த உடனே உபயோகித்தால் அதின் காரம் வீணுகாமல் கொஞ்சநெஞ்சமிருக்கிற விஷப்பூச்சிகளும் அழுக்கும் அற்றுப்போம். பாத்திரங்களை உலையில் காச்சி சுத்திசெய்யவேண்டும். துணிகளையும் படுக்கையையும் ஸாதாரணமாய் கொளுத்திவிடுகிறதே உத்தமம். அப்படிக்கொளுத்திவிடக்கூடாதவைகளை கொதிக்கிற ஜலத்தில் அல்லது வெள்ளாவியில் நன்ருய் வேகவைத்து தோய்த்து வெயிலில் உலர்த்தி உபயோகிக்கலாம். தானியம் முதலியவைகளையும் ஜலத்தில் நனைக்கக்கூடாத விலையுயர்ந்த ஆடைகளையும் வெயிலில் குறைந்த பக்ஷம் 8 மணி நேரமாவது (தானியங்களை பரப்பியும் துணிகளை விரித்தும் வைத்துவிட்டு போட்டு) உபயோகிக்கலாம்.

பள்ளிக்கூடப்பிள்ளைகளில் யாருக்காவது சிரங்கு, சொறி, கண்ணோவு, ஜலதோஷம், கக்குவான், தட்டம்மை, பயரம்மை, மென்கட்டுமாரி, அல்லது வைசூரி காணுமானல் அப்பிள்ளையை பள்ளிக்கூடத்தில் சேர்க்காமல் விடை கொடுத்து வீட்டுக்கனுப்பி விடுகிறதினல் மற்றப்பிள்ளைகளை அக்காலம் அவ்வியாதிகளினின்றும் காப்பாற்றியதாகும். வீட்டிலும் அப்பிள்ளைகளை மற்றப் பிள்ளைகளோடு சேராமல் தனியே வைக்கும்படி பெற்ருேருக்கும் அறிவித்தல் உத்தமம். ஜலதோஷமும் தொத்துவியாதி என்பதில் ஸந்தேகம் வேண்டுவதில்லை.

மஹாமாரி வியாதியையும் வைசூரியையும் தடுக்கும்பொருட்டு இத்தேசத்தில் அம்மை குத்தி வருகிருர்கள். அவ்வாறு அம்மை குத்திக்கொள்வதினல அவ்வியாதிகள் வருகிறதில்லையென்பதும், ஒருவேளை அவ்வியாதிகள் கண்டாலும் குரூரமில்லாமல் ஸுலபமாயிருந்து அல்பசிகிச்சையினல் குணமாய்

விடுகின்றனவென்பதும் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் நமக்கு விளங்குகிறபடியால் அவ்வாறு அம்மை குத்திக்கொள்வது அவசியமே. வைசூரிக்காக குழந்தை பிறந்த ஆறு மாதத்திற்கெல்லாம் முதலில் அம்மை குத்திவிடவேண்டும். அம்மை குத்தின சில தினங்களுக்கெல்லாம் குத்தின இடத்தில் புண்ணாகிறது. அப்புண்ணை நம்மில் சிலர் மூடத்தனத்தினால் வேப்பிலை முதலியவைகளை அறைத்துத் தடவி ஆற்றிவிடுகிறார்கள். அப்படி ஆற்றுவதினால் அம்மை குத்தினதின் பலன் அற்றுப்போகிறது. தவிர, நமது தேகமானது ஏழுவருஷத்திற்கொருதரம் பூர்த்தியாக ரத்தம் உள்பட மாறுகிறதினால் அம்மைகுத்திக்கொண்டதின் பிரயோஜனமும் மாறிவிடுகிறது. ஆகையால் ஏழுவருஷத்திற் கொருதரம் அம்மை குத்திக்கொள்வது அவசியமென்று மேனாட்டு மேதாவிகள் சொல்லுகிறார்கள். ஆனால் மஹாமாரி வியாதிக்கு ஒரு தரம் அம்மை குத்திக்கொண்டால் அதன் பலன் ஒரு வருஷத்திற்குள்ளாக மாறிவிடுகிறபடியால் பக்க ஊர்களில் அவ்வியாதி கண்டாலொழிய இனாக்யுலேஷன் செய்துக்கொள்வது அவசியமில்லை. பிளேக் வியாதி ஸமீபித்திருக்குமானால் உடனே இனாக்யுலேஷன் செய்துகொள்வதே யுக்தம். அவ்வியாதி பயம் அருகாமையிலுள்ள பரியந்தம் அடிக்கடி இனாக்யுலேஷன் செய்துகொள்வது நலமென்று அனுபோகத்தால் அறிவித்திருக்கிறார்கள்.

நமது கிராமாந்தரங்களில் பாம்புக் கடியினால்மரணம் அதிகமாகவேயிருக்கிறது. அனேகமாய் கிராமங்களில் குடியிருக்குமிடத்துக்கருகாமையிலும் வீட்டு புறக்கடைகளிலும் வீடுகளுக்கிடையிலும் அனேகவித உபயோகமற்ற புதருகளும் ஏராளமான நாகதாளிப் புதருகளும் இருக்கிறபடியால் பாம்புகள் நம்மோடு வஸிக்க நாமே அவைகளுக்கு இடம் சம்பாதித்துக் கொடுத்ததாகிறது. கிராமத்தில் புதருகளில்லாமல் சுத்தமாய் வைத்துக் கொள்ள வேண்டுமென்று யாராகிலும் கிராமத்தாருக்குச் சொல்வார்களானால் அதற்கு மறுமொழியாக பாம்பில்லாத இடம் எதுவென்றும், விதியிருந்தால் தப்பாமல் கடிக்குமென்றும் அனேகர் சொல்லுகிறது வழக்கமாயிருக்கிறது. இது புத்தியீனமே. ஏனெனில் நமது கொள்கைப்படி விதி அதிக பலமுள்ளதானாலும் விதியை வெல்லும் மதி என்பதற்கு நமது மார்க்கண்டேயர் புராணமே ஒரு பெரிய அத்தாக்ஷியாயிருக்கிறது. ஆகையால் விதிப்படிதான் நடக்குமென்று நம்பி பாம்புள்ளக் குடத்தில் கையிடுதல் புத்தியீனம் அல்லவா? ரோட்டுகருகில் சாலைச் செடிகளுக்கு நாகதாளி வேலி போடுகிறதினால் அந்நாகதாளி துஷ்டரைப்போல் ஓங்கி வளர்ந்து புதராகி பாம்புகளுக்கு இருப்பிடமாகிறது. அப்பாம்புகள் அருகாமையிலுள்ள பாதைகளில் நடமாடும் ஜனங்களைத் தீண்டி அவர்களை மரணத்துக்காளாக்கியிருக்கிறதுபற்றி, அம்மாதிரி வேலிகளுக்கு நாகதாளியை உபயோகிக்கிறதைவிட வேறே முட்களை உபயோகப்படுத்துவது உத்தமம்.

ஒரு வேளை தெய்வ ஸங்கல்பத்தால் யாரையாகிலும் ஒரு பாம்பு தீண்டுமானால் அதற்குத் தக்க சிகிச்சை செய்கிறதற்குமுன் தீண்டின உடனே தீண்டின பாகத்திற்கு கொஞ்சம் மேலாக ரத்தத்தைப்பரவ வொட்டாமல் கெட்டியாக ஒரு கயற்றினால் கட்டி கடித்த இடத்தை ஒரு கத்தியால் நன்றாய்க் கீறி ரத்தத்தை பிதுக்கிவிடல் நலம்.

வெறி நாய் ஊரிலிருக்குமானால் அதைக் கொன்று விடல்வேண்டும். யாரையாகிலும்

வெறி நாய் கடித்தால் கடித்த காயம் ஆராம லிருக்கும்படிக்கு கடித்த இடத்தை சுட்டுப் புண்ணாக்கி உடனே நீலகிரி ஜில்லா கூனூரில் இதற்கென்று கருணையுள்ள நமது ராஜாங்கத் தாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் தர்ம வைத் தியசாலைக்கு அவர்களை அனுப்பவேண்டும். கடிபட்டவன் ஏழையாயிருந்தால் அவனுக் கும் அவனோடு ஸகாயமாய்ப் போகிறவருக் கும் ரெயில் சார்ஜ் முதலானதும் இனாமாய் ராஜாங்கத்தார் கொடுக்கிறார்கள். கடிபட்ட வன் ஸர்க்கார் உத்தியோகஸ்தனாயிருந்தால் அவனுக்கு சம்பளத்தோடு லீவும் கொடுக்கப் படுகிறது.

டையீரியா என்னும் ஸாதாரண அஜீர்ண பேதியானது அளவுக்கு மிஞ்சின சாப்பாட்டி னாலும், நன்றாய் பக்குவமாகாத போஜனத்தி னாலும், நன்றாய் பழுக்காத அல்லது அதிக மாய்ப் பழுத்து அழுகிப்போன கனிகளை அருந்துவதினாலும் உண்டாகிறபடியால் நாம் நன்றாய் சமைக்கப்படாத யாதொரு வஸ்து வையாவது கெட்டுப்போன கனிகளையாவது சாப்பிடவேகூடாது. "அளவுக்கு மிஞ்சினால் அமிருதமும் விஷம்" என்பதற்கேற்க அள வுக்குமிஞ்சி சாப்பிடுகிறதைக் காட்டிலும் கொஞ்சமாய் சாப்பிடுகிறதே நலம்.

வி. ஏ. வெங்கடாசாரியார்.

---

## CHIT FUNDS.
## கூட்டுச் சீட்டுகள்.

---

மனுஷ்யர்களாய்ப் பிறந்தவர்க் கெல்லாம் பணம் சேர்த்து வைப்பதில் ரொம்ப ஆசை யுண்டு. பணத்தில் ஆசையற்றவர் மிகவும் சிலர். இவ்விஷயத்தை வற்புறுத்து வதற்கா கவே "பணமென்றால் பிணமும் வாயைத்தி றக்கும்" என்று இல்லாத காரியத்தையும் இருப்பதாக ஸாதிக்கும் பழமொழியும் நம் நாட்டில் வழங்குகிறது. இறந்தவரைப்பிழைப் பிக்க முடியாத ஒரு காரியத்தைத் தவிர, மற் றெல்லாக் காரியங்களையும் பணத்தைக் கொண்டு இவ்வுலகத்தில் ஸாதித்து விடலாம். ஆகவே இவ்வளவு உபயோகமும் உபகார முள்ள பொருளைத் தேடி வைத்துக்கொள்வ தில் ஆசையிருப்பது மனுஷ்ய இயற்கைதான். இந்த ஆசை வேண்டாத அளவுக்கு முற்றி, அதனால் தூண்டப்படும் கொலை, கொள்ளை, களவு முதலிய விஷயங்களைப் பற்றி நாம் இங்கே பேசுவதாகவில்லை. பணம் சேர்க்கும் வழிகளில் நியாயமானதும் பிறர்க்குக் கெடுத லில்லாததுமான ஒரு வழியைப் பற்றியே இங்கே பேசுவோம்.

இவ்வழிக்கு "கூட்டுச் சீட்டு" என்று பேர் வழங்குகிறது. ஸாதாரணமாக மாஸம் இரு முறையும் மாஸமொருமுறையும் வழங்கி வரும் சிறு கூட்டுச் சீட்டுகளை நமது நாட்டு ஸ்திரீகள் கூட நடத்தி வருகிறார்கள். இதற்கு அதிக ஸாமார்த்தியம் வேண்டியதில்லை. வேண்டியவையெல்லாம் நாணயமும் சொற் செலுகையுந்தான். இவ்விதச் சீட்டுகள் நாடெங்கும் நடந்து வந்தாலும், திருநெல் வேலி ஜில்லாவில் மட்டும் அபரிமிதமாகத் தோன்றி, மூன்று மாதங்களுக்கொரு முறை யும், ஆறு மாதங்களுக்கொரு முறையும் சில இடங்களில் வருஷத்தில் ஒரு முறையும் நடந்து வருகின்றன. ஆறுமாதங்களுக்கொரு முறை நடக்கும் சீட்டுகளுக்கு "பூச்சீட்டு" என்று பேர் வழங்குகிறது.

சீட்டு விஷயத்தில் பொறுப்பை யேற்றுக் காரியத்தை நடத்துபவருக்கு கரைஸ்வான் என்று பேர். அவருக்கு அந்தஸ்தும் செல் வாக்கும் இருந்தால் சீட்டுப் புள்ளிகளாகச் சேர விரும்புவோர்களுக்கு அவனிடம் நம்

பிக்கையுண்டாகும். இவ்விரண்டும் இல்லாத ரைஸ்வான் சீட்டை ஸரிவர நடத்திக் கடைசிவரையில் கொண்டு போவதற்கு சக்தியுள்ளவனாகமாட்டான். இரண்டு மூன்று கரைஸ்வான்கள் சேர்ந்து நடத்தும் சீட்டுகளும் உண்டு. ஆரம்பத்தில் கரைஸ்வான் தான் சீட்டுச்சேர்க்கப் போகும் விஷயத்தைப் பலபேர்களுக்குச் சொல்வான். சீட்டில் சேர விருப்பமுள்ளவர்களான புள்ளிக்காரர்கள் தங்களுக்கு முழுச் சீட்டோ அல்லது அதற்குக் குறைந்த முக்கால், அரை, கால், அரைக்கால், வீசம் முதலிய பின்னச் சீட்டோ பங்கிட்டுக்கொடுக்க வேண்டுமென்று கேட்பார்கள். சீட்டுத் தொகை அதிகமாக இருந்தால், முழுச் சீட்டுகள் போடும் புள்ளிகள் குறைவாயும், சில்லறைச் சீட்டுப் புள்ளிகள் அதிகமாயும் இருப்பார்கள். சீட்டு வாயிதாக்களுக்கு ஏற்றபடி சீட்டு முடிவான ஆகையர் ஏற்படும் ஆயினும் பத்து வருஷங்களுக்கு மேற்போகும் ஆகையர் ஏற்படுத்திக்கொள்வதில்லை. சீட்டின் விவரத்தையும் நிபந்தனைகளையும் கடிதாசில் எழுதி அக்கடிதாசில் கரைஸ்வானும் புள்ளிக்காரர்களும்கையெழுத்துப் போட்டுவைத்துக் கொள்வார்கள். அந்தத்தஸ்தவேஜுக்கு "கரார்நாமா" என்றுபேர்.

சீட்டுகள் பல விதப்படும். முக்கியமாக ஏலச் சீட்டும், ப்ரைஸ்ச் சீட்டுமே அதிகமாக வழங்கி வருகின்றன. மேற் கூறிய கரார்நாமா ஏற்பட்டதும் சீட்டு ஆரம்ப மாவதற்கு ஒரு நாள் குறிக்கப்படும் அந்நாள் ஸாதாரணமாக ஒரு மாஸத் துவக்கமாகவேயிருக்கும். அன்றைய தினத்தில் புள்ளிக்காரர்கள் கரைஸ்வான் வீட்டுக்கோ அல்லது அவனால் குறிப்பிடப்பட்ட வேறு இடத்துக்கோ. தங்களுடைய முதல் வாயிதாப் பணத்துடன் வருவார்கள். பணத்தைப் பெற்றுக்கொண்ட கரைஸ்வான் சீட்டின் நிபந்தனைப்படி மேல் காரியங்களை நடத்துவான். அதாவது சீட்டு ஏலச் சீட்டாக இருக்குமானால், சீட்டு மொத்தத் தொகையில் கொஞ்சம் குறைத்துக்கொண்டு, பாக்கித் தொகை ஏலத்துக்கு விடப்படும். யார் குறைந்த தொகையைக் கடைசியாகக் கேட்கிறார்களோ அவர்களுக்கே ஏலம் ஜாரி செய்யப்படும். சேர்ந்த மொத்தத்தொகையில், ஏலத்தொகையை ஏலம் கேட்டவனுக்குக் கொடுத்துவிட்டு, பாக்கியுள்ளதில், (இன்கம் டாக்ஸ்) வருமானவரி, தர்ம பண்டு முதலியவைகளுக்கென்று ஏற்பட்டவைபோக, மீதியுள்ளதை, ஏலம் எடுத்தவனும் கரைஸ்வானும் தவிர மற்றைப் புள்ளிக்காரர்களுக்கு சீட்டுவீதப்படி பிரித்துக்கொடுத்து விடுவார்கள். இவ்விஷயத்தில் கரைஸ்வான் எடுத்துக்கொள்ளும் சிரமத்துக்காக, அவனுக்கு ஏலகழிவு அன்னியில் பூராத் தொகையையும், இரண்டாவது சீட்டிலோ, நிபந்தனைப்படி ஏற்பட்டதவணையிலோ கொடுத்துவிடுவதுண்டு. நூற்றுக்கு ஒருவட்டி மேனிக்கு, குறித்த தொகையொன்று ஆறு வருஷத்தில் இருமடங்காகிவிடும். இந்த லாபத்துக்காகத்தான் கரைஸ்வான் பாடுபடுகிறான். ஏலக்காரர்களுடைய அவஸரத்துக்கும் அவசியத்துக்கும் தக்கபடி ஏலக்கழிவு ஏற்படும். வெகு அவஸரமான செலவு நேர்ந்தால், மொத்தத்தொகையில் ஜாஸ்தியாகக்குறைத்து ஏலங்கேட்பதுண்டு. இவர்களுக்குக் கடைசியில் அதிகலாபமிராது. இப்படி ஏலமெடுத்தவர்கள், பின்வாயிதாக்களுக்கு குறித்த தாரணைப்படி பணம் செலுத்திவரவேண்டியதற்காக, கரைஸ்வானுக்கு அடமான பத்திரமோ, வெண்கடன் பத்திரமோ எழுதிக்கொடுப்பார்கள். அப்படி எழுதுவதில், அவர்கள் சீட்டுத் தொகை முழுவதையும் பெற்றுக் கொண்டதாகவும், ஏற்

கனவே செலுத்திய தொகைகளை வேறு ரசீது மூலமாகப் பற்றிக்கொண்டு, பாக்கி செலுத்த வேண்டிய தொகைக்கே பத்திரம் எழுதிக் கொடுப்பதாகவும் குறிப்பிப்பதுமுண்டு. பணப்பற்று விவரத்தில், ஏலமெடாத புள்ளிகளுக்கு விதித்துக் கொடுத்த தொகையையும் தாங்கள் பெற்றுக் கொண்டதாகவே எழுதுவது பதிவு. தவணைப்படி பணம் செலுத்தாது போனால், தவறின தேதி முதல் நாள் ஒன்றுக்கு ரூபா ஒன்றுக்கு குறித்த வட்டித் தொகை போட்டுக்கொடுப்பதாக நிபந்தனை செய்வதுண்டு. குறித்த தவணையில் பணம் செலுத்தாது போனால், அந்தத் தொகையை கரைஸ்வான் தன் கையிலிருந்தே போட்டு மற்றப் புள்ளிக்காரர்களுக்கு ஈடுசெய்யவேண்டியவனுகையால் மேற்குறித்த நிபந்தனை வெகு அவசியமாகும். இவ்வித வட்டித்தொகை, சட்டத்தால் தடுக்கப்பட்ட வட்டியாக மாட்டாதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிற விஷயக் குறிப்பை "பிழைக்கும் வழி" 3-வது புஸ்தகம் 495-ம் பக்கத்தில் காணலாம்.

இவ்விதம் நடத்தப்படும் ஏலச்சீட்டில், கடைசி இரண்டு சீட்டு மட்டுமே ஏலம் போடப்படாமல், பாக்கிப் புள்ளிக்காரர்களுக்கு ஸமபாகமாகப் பிரித்துக் கொடுத்துவிடப்படும்.

இன்னொரு வகையான ப்ரைஸ் சீட்டிலும், ஏலச் சீட்டில் போலவே, மொத்தத்தொகையில் கொஞ்சம் குறைத்துக்கொண்டு, பாக்கித் தொகையை மட்டும் திருவுளச் சீட்டுப்போட்டுக் குலுக்கி மாருக்கு ப்ரைஸ் விழுகிறதோ அவருக்குக் கொடுத்துவிடுவார்கள். சீட்டு எடுத்தவன் தஸ்தவேஜு எழுதிக்கொடுக்க வேண்டும். ஏலச்சீட்டிலும், ப்ரைஸ் சீட்டிலும் மொத்தத் தொகையில் கொஞ்சம் குறைத்துக் கொள்வதாகவும், பாக்கியுள்ளதையே ஏலமாகவோ, ப்ரைஸாகவோ, விடுவதாகவும் சொன்னேமல்லவா? அப்படிக் குறைக்கும் தொகை, மொத்தத் தொகைக்கு ஸுமார் முக்கால் வட்டி போட்டால் எவ்வளவு கிடைக்குமோ, அவ்வளவுக்கு மேற்படாது. இது புள்ளிக்காரர்களுக்கு பகுத்துக் கொடுக்கப்படும்.

இரண்டாவதாக விவரித்த ப்ரைஸ்ச்சீட்டில் முதலில் சீட்டு விழுகிற புள்ளிக்கு அதிகலாபம் கிடைக்கும், அதாவது, அவனுக்குக் கிடைக்கும் ப்ரைஸ்த் தொகையை வட்டிக்கு விட்டு, அந்த வட்டியிலிருந்தே அவன் மேல் செலுத்த வேண்டிய சீட்டுப் பணத்தைக் கட்டிவிடலாம். கடைசியாகச் சீட்டுவிழுகிறவனுக்கு லாபமேயில்லை யென்று சொல்ல வேண்டும். சீட்டுகள்தோறும் பகுத்துக் கொடுக்கப்படும் தொகை தான் இவனுக்கு லாபமாகும். ஆனால் கொஞ்சம் கொஞ்சமாகப் போட்ட பணம் மொத்தமாக ஒரே தேதியில் வரும்.

இனி, இவ்விதச் சீட்டுகளினால் ஏற்படும் நன்மைகள் என்னவென்று பார்ப்போம். முதலாவதாக, ஜனங்களிடம் ஒற்றுமை ஏற்பட்டு பரஸ்பர நம்பிக்கை உண்டாகிறது. அதிக வட்டி வாங்குகிற ஷைலாக்குகள் வலையில் அகப்பட்டு, கடனுக்காக பூமிகளை விற்றுவிட வேண்டிய அவசியம் நேராது. வாங்கிய கடனைச் சிறுகச்சிறுக சுலபமாகவே அடைத்துவிடலாம். கரைஸ்வானுக்கும் புள்ளிக்காரர்களுக்கும் ஒருங்கே லாபகரமான இவ்விதச் சீட்டுகள் திருநெல்வேலி ஜில்லாவிலும், திருவாங்கூர் ஸமஸ்தானத்திலும் மட்டும் அதிகமாகவும், மற்றைய இடங்களில் பிரபலமில்லாமலும் இருப்பதற்குக் காரணம் எதுவாக இருக்கலாம்? அவ்விடங்களில் உள்ள ஐக்கியமத்தியமும் ஸௌகர்யங்களும் மற்றைய இடங்களில் இல்லையா? இச்சிறு வியாசத்தைப் படிக்கும் அபிமானிகள் தங்கள் தங்களுடைய இடங்களில் இவ்விதச் சீட்டுகளை நடத்த ஏற்பாடு செய்து, ஏழை எளியவர்களுக்கு நன்மைசெய்வார்களென்பதே எமது நோக்கம்.

## SELECTIONS.

## விசேஷத்திரட்டு.

### SIGNS OF RAIN.

### மழைக்குறிகள்.

பூத பௌதிக சாஸ்திரங்களில் மிகத்தேர்ச்சியடைந்து வரும் தற்காலத்திய ஆங்கிலேயர்கள் (பராமிட்டர்) வாயுவின் கனத்தை யளக்குங் கருவி, (தர்மாமிட்டர்) சீதோஷ்ண நிலைமையைக் காட்டுங் கருவி, முதலிய சூத்திரங்களினாலே இன்னின்ன காலங்களில் மழை வருமென்று தெரிந்துகொள்ளுகின்றனர். இவைப்போன்ற கருவிகள் ஏற்பட்டிராத முற்காலத்தார் சில மிருகங்களும், பக்ஷிகள் முதலிய ஜீவராசிகளும், சில செடிவர்க்கங்களும் மழை வருவதற்கு முன்னே யடையும் மாறுதல்களை நெடுநாளாகக் கவனித்து அவற்றின் செய்கைகளையே மழைக்கு அறி குறியாக பாவித்துக்கொண்டு வந்தார்கள். இங்கு அப்படிப்பட்ட சகுனங்கள் யாவற்றையும் பூர்த்தியாய்த் தொகுத்துக் காட்டுகிறோம்.

சாதாரணமாய் மணத்தை வீசத்தக்க புஷ்பங்கள் சில சமயங்களில் அதிக நறுமணத்தை வீசிக்கொண்டிருக்குமாயின் மிகவும் சீக்கிரத்திலேயே மழை வருமென்று நாம் நிர்ணயித்துக் கொள்ளலாம். ஏனெனில், நம்மை நாற்புறமுஞ் சூழ்ந்துள்ள நிச்சலவாயு அணுத்திரள்களால் நிறையப்பெற்றுக் குளிர்ச்சியடையுந் தருணத்தில் புஷ்பங்களின் மணம் அதிகப்பட்டு நாற்புறமும் நன்றாய்ப் பரவுவது இயல்பு. நிச்சலவாயு மேற்கண்ட தன்மையடைவது மழை வருவதற்குச் சிறிது முன்பு தான்.



தூக்கணான் முதலிய பக்ஷிகள் மிகவும் மேலெழும்பாமல் நிலத்திற்கு அதிசமீபமாகப் பறந்து போய்க்கொண்டிருக்குமாயின் கூடிய சீக்கிரம் மழைவருமென்று நாம் அறிந்து கொள்ளலாம். ஏனெனில், மழைபெய்வதற்கு முன்னே நிச்சலவாயு ஆகாயத்தில ஜல அணுத்திரள்களால் நிறையப்பெற்றுக்குளிர்ந்திருக்கிறபடியால் மிகவும் மேலே இயங்க அப்பறவைகளுக் கிசையாமல் அவை பூமிக்குச் சமீபத்திலேயே பறந்துகொண்டிருக்கின்றன. அன்றியும் அப்பறவைகள் தமக்கு ஆகாரமாகத் தேடிச்செல்லும் சிறு கிருமிகள் அதே காரணத்தினாலே நிலத்திற்குச் சமீபமாகவே அப்படிப்பட்ட சமயங்களில் சஞ்சரித்துக்கொண்டிருக்கின்றன.

ஆண்வாத்து, பெட்டைவாத்து முதலிய பறவைகள் மழை வருவதற்குமுன் தாமே வலியத் தண்ணீரிருக்கு மிடத்திற்குச் சென்று தம்முடைய இறகுகளை நன்றாய் நனைத்துக் கொள்ளுகின்றன. ஏனெனில், அப்படிச் செய்வதனாலே உடனே மழை பெய்யும்போது மழைத்தாரைகள் அவைகளின் இறகுகளுக்குள்ளே பிரவேசித்து அவற்றிற்குக் கெடுதி செய்யாமல் மேற்புறமாகவே வழிந்துவிழுந்துவிடும். மழைபெய்யும்போது அவைகளின் இறகுகள் உலர்ந்து மயிர்களுக்கு மத்தியில் இடைவெளி யிருக்குமாயின் மழைத்தாரைகள் உள்ளே பிரவேசிப்பதற்கிடமிருக்கும்.

மழை வருவதற்கு முன்னே குதிரை, மாடு முதலிய கால்நடைகள் அடிக்கடி கழுத்தை நீட்டி மேலே தூக்கிக் காற்றை உள்ளுக்கு வாங்கி முகர்ந்துகொண்டேயிருக்கும். ஏனெனில், நெடுந்தூரத்திலுள்ள புஷ்பச்செடிகளில் நறுமணம் அப்படிப்பட்ட ஸமயங்களில் நாற்புறமும் வீசுகின்றபடியால் அம்

மணத்தை உட்கொள்வதற்காக அவைகள் அவ்வாறு செய்கின்றன.

சிலந்திகள் தாமே வலியத் தம்முடைய வலைகளை யழிக்கும்போது மழைவருமென்று நாமறிந்துகொள்ளலாம். ஏனெனில் மழை பெய்யும்போது ஈ, கொசு முதலிய சிறு ஜந்துக்கள் வெளி வருவதும் தம்முடைய வலைகளிலகப்படுவதுமில்லை யாதலின் அவ் வலைகளை அனுவசியமென்று கருதி சிலந்தி களழித்துத் தமக்கு மழைகாலத்தில் படுத்துக் கொள்ளவும், வெப்பமாயிருக்கவும், உதவும் படி தன்னிருப்பிடத்தில் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளுகின்றன.

நிலத்தின் அடிப்புறத்தில் உயிர்வாழும் பிள்ளைப் பூச்சி, நாகப்பூச்சி, முதலிய சிறு ஜந்துக்கள், மழைபெய்ய சற்று நேரத்திற்கு முன்பே நிலத்தில் இங்குமங்குமாக ஏராள மாய்ச் சிறு சிறு துவாரங்கள் செய்து வைக் கின்றன. ஏனெனில், அந்த ஜந்துக்களுக் காகாரமாயுள்ள அனேக சிறியப்பிராணிகள் இனிவரப்போகும் மழைக்குத் தப்பிப்பிழைப் பதற்காக இத்துவாரங்களுக்குள் நுழையு மென்றெண்ணி அவைகள் அவ்வாறு செய் கின்றன.

நன்றாய்ப் பாடுமியல்புடைய குயில் முத லிய பக்ஷிகள் பாடாமல் வியசனமுடைய னவாய்த் தோன்றில் மழை வருமென்று யூகித் துக்கொள்ளலாம். ஏனெனில், நிச்சலவாயு ஜல அணுத்திரள்களால் நிறைந்துகனத்திருக் கிறபடியால் அப்பறவைகளுக்குப் பாட அச்சமயங்களிற் கூடாமற் போய்விடுகின் றது.

ஆடு, மாடு முதலிய கால்நடைகள் தாம் மேய்ந்துக்கொண்டிருக்கும் மைதானங்களில் நிர்நிமித்தமாய் நாற்புறமும் ஓடி ஒன்றோ டொன்றுமோதி ஆரவாரஞ் செய்யுமானல் அதிசீக்கிரத்தில் நன்றாய் அடியிடித்து, மின் னல் மின்னி, மழைபெய்யுமென்று நாம் நிச்ச யிக்கலாம். ஏனெனில் இடியிடித்து மழை பெய்வதற்கு முன்னே நிச்சலவாயுவில் மின் சாரம் நாற்புறமும் பாய்ந்து பரவிக்கொண் டிருக்கிறபடியால் அந்தப் பிராணிகளுக்கு அப்போது ஒருவகை எரிச்சலுண்டாகிற கார ணத்தாலே அதைப் போக்கிக்கொள்வதற் காக அவைகள் அவ்வாறு செய்கின்றன.

மலர்ந்திருக்கும் நாநாவித புஷ்பங்கள் திடீ ரென்று குவிந்துவிடுமேயாகில் அதி சீக்கிரம் மழைவருமென்று நாம் ஊகிக்கலாம். ஏனெ னில், புஷ்பங்களுக்கு ஜீவாதாரமாய் அடிப் புறத்திலுள்ள பொகுட்டு மழைத்தண்ணீரால் அழுகிக் கெட்டுப்போகாதபடி இதழ்கள் முன் னெச்சரிக்கையாகக் குவிந்து மூடிக்கொள்ளு கின்றன. இப்படிப்பட்ட உணர்ச்சி தெய் வமே அவைகளுக்குக் கொடுத்திருக்கிறது.

சாதாரணமாய் நம்முடைய கண்களுக்கு நன்றாய்ப் புலப்படாமல் நெடுந்தூரத்திலுள்ள பொருள்கள் அதிக சமீபத்திலிருப்பதுபோல் தெளிவாய் விளங்குமாகில் சீக்கிரம் மழையை எதிர்பார்க்கலாம். ஏனெனில், மழை பெய் வதற்கு முன்னே நிச்சலவாயு அணுத்திரள்க ளால் நிறைந்து கனத்துவிடுகிறபடியாலும், பூமியிலுள்ள பற்பல நீர்நிலைகளின்றும், நுண் ணிய ஜலத்திரள்கள் ஆவியாய் மேல்நோக்கிச் செல்வது அத்தருணத்தில் நின்றுவிடுகிறபடி யாலும், தூரத்திலுள்ள பொருள்கள் நம் கண்களுக்குத் தெளிவாய் விளங்குகின்றன.

மழை பெய்யச் சிறிதுநேர மிருக்கையில் நெடுந்தூரத்திலுள்ள நக்ஷத்திரங்கள் சமீபமா யிருப்பவைபோல் காணப்படுவதுமன்றி மிகத் தெளிவாயுமிருக்கின்றனவென்று ஸர் ஐஸக் ந்யூ ட்டன் தெரிவித்திருக்கிறார். மேற்கூறிய விஷ யங்களே அதற்குக் காரணம். ஒரு பொருள்

நம்முடைய கண்களுக்குச் சாதாரண நிச்சல வாயு மூலமாகப் புலப்படும்போது அருபதடி தூரத்திலிருப்பதாகத் தோன்றுவதாய் வைத்துக்கொள்வோம். அப்பொருளே ஜலத்தின் மூலமாக நமக்குத் தோன்றுமானால் பத்தடி தூரத்திலிருப்பதுபோலவே நமக்குத்தோன்றுவதியற்கை. அடியில் நெடுந்தூரத்திலுள்ள கூழாங்கற்கள் முதலியவை அதிக சமீபத்திலிருப்பவை போல காணப்படுகின்றனவல்லவா? அத்தோற்றத்தினால் நாம் மதிமயங்கிச் சில சமயங்களில் காலை வைத்துக் குளம் முதலியவைகளில் விழுந்துவிடவும்நேரிடுகின்றதல்லவா? மேலே காட்டிய சித்தாந்தத்தைவிளக்குவதற்கு இவ்வொரு திருஷ்டாந்தமே சாலும். நிச்சலவாயு ஜலஅணுத்திரள்களால்நிறைந்து கனத்திருக்கும்போது (மழைபெய்ய சிறிது நேரத்திற்குமுன்) தூரத்திலுள்ள பொருள்கள் நமக்குச் சமீபத்திலிருப்பனபோற் புலப்படுவது மேற்படி சித்தாந்தத்தின்படி நியாயந்தானே?

நெடுந்தூரத்திலுள்ள தேவாலயங்களின் மணி முதலியவற்றின் சப்தங்கள் நம்முடைய செவிக்கு மற்ற காலங்களைவிட தெளிவாகவும், உரத்தும், கேட்குமாயின் சீக்கிரம் மழைபெய்யுமென்று நிர்ணயித்துக்கொள்ளலாம். ஏனெனில், சாதாரண நிச்சலவாயுவைவிட ஜலம் சப்தத்தை ஒரு புறத்தினின்றும், மற்றொரு புறத்திற்கு அதிவிரைவாகவும், மிகத்தெளிவாகவும், கொண்டுபோகத் தக்கது. மழைக்கு முன்னே நிச்சலவாயு ஜல அணுத்திரள்களால் நிறையப் போற்றிருக்கிறபடியால் நெடுந்தூரத்து ஓசைகள் சமீபத்திலிருப்பன போல் நமக்குக்கேட்பது இயல்புதானே.

எறும்புகள் ஏராளமாய் தம் முட்டைகளைத் தூக்கிக்கொண்டு தம்முடைய புற்றை நோக்கிச் செல்லுமானால் மழை வருமென்று எதிர்பார்க்கலாம். ஏனெனில், மழைத்தண்ணீர் தம்முடைய முட்டைகளுக்குக் கெடுதியையுண்டாக்கா வண்ணம் அவைகள் அவற்றை எடுத்துக்கொண்டு போகின்றன. அப்படிப்பட்ட உணர்ச்சி அவைகளுக்கு இயற்கையாகவே தெய்வத்தாலமைக்கப்பட்டிருக்கின்றது.

மேலே சொல்லிக்கொண்டுவந்த விஷயங்களையெல்லாஞ் சீர்தூக்கிப் பார்க்குமிடத்து மழை இன்னின்னகாலத்தில் வருமென்று வாயுமானி யென்னும் கருவி முதலிய உபகரணங்களைக்கொண்டு அறிந்துக்கொள்ளக்கூடாதவர்களாயிருந்த ஜனங்கள் முற்காலத்திற் பலவகை ஜீவராசிகளின் செய்கைகளைக் கொண்டே நிர்ணயத்து வந்ததாகத் தோன்றுகின்றது. அப்படிப்பட்ட அளவுக்கருவிகளை உற்பத்தி செய்துகொள்வதற்கு வேண்டிய பகுத்தறிவு முதலிய குணங்களமையப்பெறாத எறும்பு, சிலந்தி முதலிய ஜீவராசிகளும், செடிவர்க்கங்களும் தப்பிப்பிழைப்பதற்காக அவைகளுக்கியற்கையிலேயே பரமதயாநிதியாகிய பகவான் இவ்வித உணர்ச்சியைத் தந்தது சாலவியப்புடைத்தே !— தேசாபிமானியில் ஏ. தி. ல. கோ. ஸ்ரீராஜகோபால தாதாசாரி.

---

## THE PUNGAM TREE.

## புங்கமரம்.

---

புங்கமரம் குடித்தனக்காரருக்கு இன்றியமையாத மரங்களிலொன்று. இது ஒரு அழகிய மரம். பார்க்கப் பார்க்க மனதுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கும். இதில் மணிப்புங்கு என்றும் காய்ப்புங்கு என்றும் இருவகையுண்டு. மணிப்புங்கு என்பது சென்னையில் சீயக்காய்க்குப் பதிலாகப் பறைச்சிகள் குளிப்பதற்கு உபயோகிக்கும்வஸ்து. இதைச்

சலத்திற் தேய்க்க நுரைத்து வருமாதலால் அழுக்குப் போக்குவதற்குத் திறமானது. பட்டுவஸ்திரங்களிலிருந்து அழுக்கைத் துலைப்பதற்கு இந்தக்காய் மிகவும் மேன்மைப்பட்டிருக்கின்றது.

காய்ப்புங்கு என்பதை விவரித்துத் தெரிவிப்பது கஷ்டமல்ல. குக்கலினுல் அல்லது இருமலினுல் அவதிப்படும் குழந்தைகளுக்கு இதன் காயைக் கழுத்திலாவது இடுப்பிலாவது கட்டுவது உண்மை. இவ்வாறு கட்டுவதினுல் விளையும் பிரயோசனமின்னதென்று இதுவரையிலும் கண்டுபிடிக்கப்படவில்லை. இது மனுஷஜாதிக்குப் பலவிதத்திலும் உபயோகப்படுவதல்லாமல் இதன்கண்கவரும் பளபளத்த கறுப்பு நிறமும் மனதை ஆனந்திப்பிக்கும் உருவமும் வரையமுடியாது. இத்தகைய குணங்கள் பொருந்திய இம்மரத்தின் நிறத்தை ஸ்ரீ கிருஷ்ணனுடைய நிறத்துக்கு ஒப்பிட்டு அதற்கு "சதமால் விருட்சம்" என்று சம்ஸ்கிருதத்தில் வழங்கப்படுகின்றது.

இது சாதாரணமாய் ஆற்றோரங்களிலும் கடற்கரையோரங்களிலும் தானுய் வளர்ந்திருக்கும். மைசூர் ராஜ்ய முழுவதிலும் இம்மரத்தின் முழுப்பலனையு மனுபவிக்கிருர்கள். இதன்காய் பாதாங் கொட்டையைப்போலிருக்கும். இதை வளர்க்க விரும்புகிறவர்கள் மரத்திலேயே முற்றிக் காய்க்குங் காய்களை விதைத்துப் பயிரிடுவார்கள். மணல் நிலம் சிரேஷ்டம். ஜலங் கிடைக்கக்கூடிய ஆற்றோரங்கள், நீர் வாய்க்கால்கள், சமுத்திரங்கள் முதலியவிடங்களில் ஏராளமாய் வளரும். இதன் விதையைச் சாதாரணமாய் 20, 25 அடிதூரச் சதுரக்கலப்பைச்சாலில், ஆடி, ஆவணிமாதங்களில் விதைப்பார்கள். இந்தக் காய்ஓரு இராத்திரியாவது ஜலத்தில் நனைத்து மழை பெய்தவுடனே விதைப்பது இன்னும் விசேஷமாகவிருக்கும். ஏன் முழுக்காயைப் போடவேண்டும். நிலக்கடலைக்குத் தோலை உரித்து விதைப்பதுபோல ஏன் விதைக்கப்படாதென்று சிலர் தெண்டித்ததில் செடி நன்ருய் வளர்ந்தது. நீராதாரமுள்ள இடங்களில் இவ்வாறு வளர்ந்துவந்தாலும் புஞ்சைக்காடுகளில் இவ்வாறு பருப்பு விதைப்பது உசிதமல்ல. மண்ணின் கொழுமைக்குத் தக்கபடி ஏறக்குறைய 10 வருடத்தில் மரம் மதத்து வளர்கின்றது.

இவ்வாறு வளர்ந்த மரங்கள் கார்த்திகை, மார்கழி, தை மாதங்களில் முண்டமாகத்தறிக்கப்படும். ஒரு அங்குலக் கனமுள்ள கிளைகள் தறிக்கப்பட்டு நெல்வயலுக்கு உபயோகப்படுகின்றன. கிளைகள் தறிக்கப்படுவது உசிதமா? மரங்கள் பட்டுப்போகாதா? என்று சிலர் சந்தேகிக்கிருர்கள். முற்குறித்த மாதங்கள் தவிர மழைக்கு முந்தி வெட்டப்படுகிற மரங்கள் பட்டுப்போகின்றன. மரங்கள் தறிக்கப்பட்டு மனிதனுக்குப் பிரயோசனப்படுவதற்குக் குளிர் காலமே யேற்றகாலம்போலத் தெரிகிறது. ஏனெனில் அச்சமயத்தில் மரங்களுக்கு இலை செய்யவேண்டிய கடமையைச் செய்து முடித்துவிடும். பின்பு சிலநாளில் இலை உதிர்ந்தேவிடும். வீட்டோரத்தில் இருக்கும் மரங்கள் இம்மாதங்களில் நிழல்தருவது அவசரமற்றதாயிருக்கின்றது. குளிர் மாதங்களிற் சூரிய கிரணமே முக்கியம். நிழலோ அருவருப்பு. இப்பேர்ப்பட்ட நாட்களில் மரத்தைத் தறிப்பது மனிதனுக்கு உபயோகத்தைத் தருவதுடன் ஆரோக்கியத்தையும் தருகிறது. பின்னும் தறிக்கப்பட்ட மரங்களே பெலத்து ஆயுசு விருத்தியடைகின்றன. தறிக்கப்படாதவைகள் சில வருஷங்களிற் புழுப்பட்டுக் கெடுதியடைகின்றன. ஆகையால் மரந்தறிக்கப்படுவது பிரயோசனமாய்

முடிகின்றது. இவ்வசந்த காலங்களில் இளந் தென்றல் இம்மரத்தின்மேலே வீச கிளைகள் ஊஞ்சலாடுவது மனதுக்கு அதிக சந்தோஷமாயிருக்கின்றது. சாலை ஓரத்தில் இச்சரங்கள் தொங்கி ஆடுவது பிரயாணிகளை அழைத்து அவர்களுக்கு வெண்சாமரை வீசுவதுபோலிருக்கின்றது. இவ்வாறு புதிய கிளைகளும் தளிர்களும் ஒன்றின்பின்னொன்றாக அடுத்தடுத்துப் புற்றில் ஈசல் புறப்படுகிறதுபோல வந்துகொண்டிருக்கும். மரம் மொட்டையானபோது பட்ட வருத்தத்தை இப்போ அனுபவிக்கும் சந்தோஷத்துடனொத்துப் பார்த்தால் அக்கஷ்டம் அற்பமாயும், இச்சந்தோஷம் அபிரிமிதமாயும்காணும். இதனாற் சிறியவஸ்துக்கள் பெரியவஸ்துக்களுக்கும், சிற்றின்பம் பேரின்பத்துக்கும் அடக்கமுள்ளவைகளாயிருப்பதின் தர்மம் வெளிப்படுகின்றது. இம்மாதிரிக் குளிர்ந்த மரங்களையும், வெட்டுப்படாமல் வளரும் மரங்களையும் ஒத்துப்பார்த்தால் கஷ்டப்பட்டுச் சுகத்தை அனுபவிக்கும் கொள்கையே எத்தனையோ மடங்கு மேலானதென்று விளங்குகின்றது.

இம்மரத்து நிழல் இந்தியாவின் குளிர்ந்த நாடுகளில் மிக ஆரோக்கியங் கொடுக்கின்றது. இதன் நிழல் பெற்றதாயுடைய ஆதரவுக்கு ஒப்பிடப்பட்டிருக்கின்றது. தமிழ் நாட்டில் இதன் சமீபத்தினும் போகப்படாதென்கிறார்கள். இவ்வாறுகொள்கையுடைய இரு கட்சியாருக்கும் நியாயமுண்டு. இது சூடுண்டாக்குகிறது என்பதில் சந்தேகமில்லை. குளிர் நாடாகிய மைசூர் ராஜ்யத்தில் இதுபெருமை அடைகிறது. உஷ்ணமதிகமுள்ள தமிழ் நாட்டில் அவ்வளவாக மதிக்கப்படுவதில்லை. குடித்தனகாரருக்கு இந்தச்சூடும் இந்தக்குளிர்மையும் பயன் தருவதில்லை. பலனை அனுசரித்தே இவர்கள் பாடுபடவேண்டும்.

இவ்வாறு வெட்டப்பட்ட கிளைகள் 8 வண்டி ஒரு ஏக்கருக்கு எருவாகிறது. ஒருவண்டி 12 ஆள் சுமை. கட்டைகள் மிதிக்கப்பட மண் இளகுகிறது. மறுவருஷம் உழும்போது இக்கட்டைகள் வெளிப்படுகின்றன. அவை அப்போது அடுப்புக்கு உதவுகின்றன. ஒரு ஏக்கர் நிலத்துக்குச் சாதாரணமாய் நன்றாய் வளர்ந்த மரம் 100 போதும். கல்லுகளில் சிறுத்திருக்கும் மரங்கள் ஆயிரமானாலும் போதாது. இம்மரங்களை வருஷாவருஷம் வெட்டுவது யுக்தமல்ல. ஒரு வருஷம் விட்டு ஒரு வருஷம் வெட்ட மரங்கெடுவதில்லை. வெட்டும் வருஷம் தழைகிடைக்க, வெட்டாத வருஷம் காயும் பூவும் உதவுகின்றன. அங்கமெல்லாம் முத்துக்கோத்தாற்போற் புஷ்பிக்குமிம்மரத்தைப் பார்த்தவர்கள் இதன் அழகை மறக்கவே மாட்டார்கள். புஷ்பம் உதிரும் சமயத்தில் மரத்தடியில் முத்துக்களால் அமைத்த பாய் விரித்தாற்போல இருக்கும். இவ்வுதிர்ந்த புஷ்பத்தைச் சேர்த்துச் சிலவிடங்களிற் கரும்புக்கு எருவாக்குகிறார்கள். இது சீக்கிரத்தில் உக்கிக் கரும்புக்கு உதவும் காய்ந்தபின் இவைகளை உலர்த்திப் பயறு எடுப்பார்கள். தோல் குளிர் காய்வதற்குத் திறமானது. இதில் நெருப்பு நெடுநேரம் அவியாமலிருக்கும், தேகச்சூடு கொள்ளும். பயற்றை ஆலையிலிட்டு பிழிவார்கள். எண்ணெய் அதிகம் பிரகாசங்கொடுக்கும். புகையுண்டாகாது. பிண்ணாக்கு எருவாகக் கரும்புக்கும்நெல்லுக்கும் உதவுகிறது. மரம் கலப்பை செய்வதற்கும் ஏழைகள் வீடு கட்டுவதற்கும் உபயோகப்படுகிறது. இம்மாதிரி ஒவ்வொரு பாகமும் எருவுக்கு உபயோகமாகும். இவ்வண்ணமே இம்மரமானது பலவகையாய் மனுஷருக்குப் பிரயோசனப்படுகின்றது.—கமத்தொழில் விளக்கம்.

## THE WOES OF THE WIDOW.

## விதவைகளின் வேதனை.

—:o:—

மாதர்களின் மனக்குறையை மானவர்கள் அறிந்திலார்போலும். புருஷர்களின் பணிவிடைகளைச் செய்யவே பெண்மக்கள் பிறந்திருக்கிறார்களென்று ஸாமான்ய ஜனங்கள் கூறுவதுவழக்கம். அவர் சொல்வதுபோலவே ஒப்புக்கொண்டாலும், பதியில்லாத பரதேசிகள் யாருக்காக ஜீவித்திருக்கவேண்டும். அவர்களுக்கு நித்யகருமங்கள் தேவையில்லையா? உண்பதும், உடுப்பதும், உறங்குவதும் மானிடர்களின் வழக்கமாயிருக்கின்றன. ஆடிப்பாடி, ஓடி, நாடிச் செல்வதெல்லாம் பொருளைதேடி வைக்கவே என்றுசிலர் கூறுவார்கள். பெருளைச் சேகரித்தவர்களெல்லாம் அதை விநியோகப்படுத்தும் வழியைத் தெரிந்துகொள்ளாதிருக்க நியாயமென்ன? அறிந்திருந்தும் மௌனமாயிருப்பவர் அனேகர். ஆண்மக்களுக்கே ஸுகசந்தோஷாதிகள் சொந்தமாய் விட்டன புருஷனில்லாப் பெண்கள் ஆநந்த விநோதாதிகளை அகத்திலும் ஸ்மரிக்கலாகாதென்று ஜாதிப்பிரியர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். விப்ரகுல வநிதையர் விதவைகளானால் முண்டனம் செய்துகொண்டு "சிவ, சிவ' சிவ'" "ராம், ராம்," "கிருஷ்ண கிருஷ்ண, கிருஷ்ண" என்ற தெய்வ நாமங்களை எந்நேரமும் சொல்லிக்கொண்டலறவேண்டும். அவைகளை உச்சரிப்பதால் உண்டாகும் நன்மையென்னவென்று வினவினாலோ "வால்மீகி, கபீர், துளசிதாஸ், கிராதகன், குஷ்டரோகி,' முதலியவர்கள் நாமோச்சாரணைகளாலடைந்த நன்மைகளை உதாரணமாய்க் காட்டுகிறார்கள். மேற்கண்டவர்களைத் தவிர வேறு மனிதர் பகவந்நாம ஸ்மரணைகளால் புனிதராகவில்லை போலும். இருந்திருந்தால் அவர்களின் பெயர்களும், மேற்படியாரின் பட்டியில் சேர்ந்திருக்குமல்லவா? ஈச்வரநாமத்தை சொல்வதால் தப்பொன்றுமில்லை. சாகப்போகும் கிழவர்கள் தம்பதிகளாயிருப்பாராயின் அவர்கள் தெய்வத்தியானம், ஸ்நானாதிகளைச் செய்ய வேண்டிய அவசியமில்லையாம். தேக ஸுகத்தைத்தரும் மருந்து, லேக்யம், ஷரபத், முரபாக்களை யுண்டு உலகத்தில் வாழ அபேக்ஷிக்கலாம். மூன்றுவயதில் மணவாளனை இழந்த மூடப்பெண்களை அவகோலம் செய்து முண்டையென்ற பட்டத்தையும்கொடுத்து வெள்ளையுடுத்த உத்தரவிட்டு, வெண்ணீறு பூசும்படிக் கூறி விதியே, விதியே, என்று முக்காடணியச் செய்து உலகத்தைக் கண் திறந்து பாராவண்ணம் திட்ட மேற்படுத்தி அந்தகாரத்தில் அடைப்பார்கள். இதுஎன்ன தர்மமோ? இது யாரிட்ட கட்டளையோ! அறியோம். பெண் பாவத்தைக் கட்டிக்கொண்ட புண்யவானின் பெயரைக்கேட்டால் சொல்வோர் கிடையாது. எதற்காக மாதர்களை இவ்விதம் செய்கிறீர்ளென்று வாதித்தால் நாங்களென்ன செய்வோம், ஜாதிக்காரர்களின் ஸம்பிரதாயமென்கிறார்கள். ஸம்பிரதாய விரோதம் செய்தால் தெய்வதண்டனை ஏற்படுமாம். தெய்வத்தின் தலையில் இல்லாத பழிகளைச் சுமத்தும் சில ஸாமார்த்திய சாலிகள் ஆங்காங்குளர். ஒருமுறை தென்னாட்டிலுள்ள நகரம், கிராமங்களைச் சுற்றிவந்தால் மாதர்களின் பரிதாப நிலைமை தெரியும். காவேரி, ஏரி, ஆறு, குளங்களுக்கு வரும் விதவைகளைக் கணக்கிட்டு முடியாது. 13-வயதுள்ள பெண்கள் முண்டனம் செய்துக்கொண்டு அலங்கோல் உடையுடுத்தித் திரிகிறார்கள். அந்தோ! என்ன பரிதாபம். இவர்களைத் தொட்டுத் தாலிக்கட்டின பாபிகள் எமனுலகடைந்தார்கள். இறந்தவர்களின் பாடு சுகமாய் முடிந்தது. இந்தப் பரதேசிகளின் கெதியை யார் விவரிப்பது? எங்கே சென்றாலும் மொட்டை, கைம்பெண், அமங்கலி, அறுதலி என்ற சொற்களைக் கேட்கவேண்டும். இன்றையதினம்வாழ்பவரெல்லாம் நாளையதினம் தங்களுக்கு வரும் நிலைமையை ஆலோசியாமல் விதவைகளைப் பற்பல விதமாய் ஹேளனம் செய்து ஆநந்திக்

கின்றனர். உலகத்தில் பிறந்த ஆண் பெண்கள் அனைவரும் இறப்பவர்களே. "இருப்பது பொய் இறப்பது மெய்" என்பதை யாரும் மறக்கலாகாது. பசி, வியாதி, துன்பம், துக்கம் முதலியவைகள் எல்லோருக்கு முண்டு. பரதேசி படுக்க பாய் கிடையாதே என்றழுதால் பணக்காரன் சயனிக்க பஞ்சணை மஞ்சங்களில்லையே என்று பரிதபிக்கிறான். இதிலென்ன வித்திபாஸம். வார்த்தை பேதமேயொழிய துக்க வித்யாஸமில்லை. இதை விவேகிகள் நன்றாய் யோசிப்பார்களாகில் விதவைகளின் கெதி வெளியாகும். பால்ய விவாகம் ஒரு புறம் விதவைகளை அதிகரிக்கச் செய்கிறது. 'விருத்தஸ்யதருணீவிஷம்' என்ற வாக்கியத்தைப் பொய்யாக்கிக் கடையேறவிருக்கும் சில கிழங்கள் காமத்தால் காமினிகளிடம் ஆசைகொண்டு காசைக்கொடுத்துக் கல்யாணம் செய்து அனுபவிக்கச் சக்தியில்லாமல் உயிருடனிழந்தோ அல்லது உயிர் துறந்தோ பிரிந்து செல்கின்றனர் எல்லா விளையாடல்களும் நமது நாட்டில் நடந்து வருகின்றன. நமது தேசாபிமானிகளும், விவேக, வித்யா, விசார ஸகோதரர்களும் இத்தகைய காரியாதிகளைப் பார்த்தும் கேட்டும் வருகிறார்கள். ஆனால் எதற்காக மௌனவிரதம் பூண்டிருக்கிறார்களோ தெரியவில்லை. தங்கள் ஸ்வானுபோகத்தில் அறியாமையால் பிறருடைய கஷ்டநஷ்டங்கள் மனதில் பதியவில்லை என்றெண்ணலாமோ! அவ்விதம் நினைப்பதும் தவறாகும். பிரபஞ்ச வர்த்
ானங்களை க்ஷணத்தில கிரகிக்கும் மதியூகி
ம தங்கள் ஸகோதர ஸகோதரிகளின் ஸு..க
கள் ஷயங்களைத் தெரிந்துகொள்வது கடி
துக்க வ ற்காலத்து · முதியோர்கள் செய்த
னமா? மு முனு முணுப்பார்களாகில்
வழக்கமென்று ருஷர்கள் பெரியோர்கள்
தற்காலத்து ஸ்திரீ பு ர்மாதிகளைச் செய்து
விதித்துள்ளபடி நித்யக பாசிக்கவேண்டும்.
வருகின்றனரா என்பதை
அக்நிஹோத்திரம், ஔபாச ம், வானப்பிரஸ்
தம், தர்மம், தானம், ஈச்வராரா னைகள் எங்கே
சென்றன? முன் உடுத்தியிரு த உடைகள்
எங்கேபறந்தன? முகக்ஷவரம், மு ங்கால்கட்டு,
சட்டை, பட்டைகளெல்லாம் நம முதியோர்
கள் நம்மை யணிந்துக்கொள்ளுமாறு வாழ்த்
திக் கொடுத்தார்களா? இவைகளெல்லாம் புதிதாய்த் தோன்றி நமது வீட்டில் உறவாடுகையில் நமது விதவா ஸகோதரிகளுக்கு நூதன ஸகாயம் செய்வது தவறாகுமா? ஒருநாளுமில்லை. மறுமணம் செய்யும் வார்த்தையைப்பற்றிபிறகுபேசலாம். ஐந்தில் முண்டையானாலும், ஐம்பதில் விதவையானாலும், அம்பட்டனிடம் ஒப்புக்கொடுக்காதிருக்கும் மார்க்கத்தைக் கையாளும்படி விவேகிகள் போதிப்பார்களாக. இந்த துர்வழக்கத்தை அடியோடு தொலைத்தாலன்றி நாட்டுக்கும், வீட்டுக்கும் க்ஷேமமேற்படாது. விதவைகளின் மனத்துயரத்தை அகற்றும் மேதாவிகள் நமது நாட்டில் அனேக ரிருக்கின்றனர். விவேகிகள் ஒன்றுகூடி நன்மை செய்தாலல்லவோ ஏழை விதவைகளின் கஷ்டம் நீங்கும். விளையாடும் குழந்தைகளுக்குப் பெற்றோர்கள் மணம் செய்து வைப்பதும் தெய்வீகமாய் மணமகன் மாண்டால் மகளைத்தூறி சரீரதண்டனை, சிரமுண்டனங்களைச் செய்து நீசர்களைப்போல் நடத்துவதும் வழக்கமாயிருக்கின்றன அறிவில்லாத பாலிகைகளை என்ன குற்றத்துக்காகத் தண்டிக்கவேண்டும்? சுபகாரியங்களுக்கு அருகரில்லை யென்று அவமதிப்பாய் பேசுவானேன்? திருட்டு, துரோகம், விபசாரம், களவு முதலிய பாதகச் செய்கைகளைச் செய்தவர்களுக்குக்கூட சில தினங்கள்வரை தண்டனை விதிக்கப்படுகிறது. ஒரு குற்றமும் செய்யாத கன்யாமணிகளை உயிருள்ளவரையில் ஸந்தோஷத்தில் சேராவண்ணம் விலக்குவது நியாயமா? கீழ் அதிகாரிகள் தண்டனை விதித்தால் மேல் அதிகாரியிடம் நியாயம் கோருகிறார்கள். கவர்ன்மெண்டார் ஜனோபகாரமான நன்மைகளைச் செய்திருக்கின்றனர். நமது ஸகோதர ஸகோதரிகள். தாங்கள் பெற்ற பாலிகைகளின் விஷயத்தில் மனம் உருகாமலும், அவர்களின் துயரம், துன்பங்களை அகற்றாமலும் இருக்க நியாயமென்ன? இனியாவது சிரத்தை கொள்வார்களென்று நம்புகிறோம் நாகரீகமறிந்த ஸ்ரீமான், ஸ்ரீமதிகள் நன்றாய் ஆலோசிக்கவேண்டுகிறோம். சாஸ்திரத்தைப் பரிசோதித்துப் பார்க்கட்டும். எத்தனை ரிஷிகள் விதவைகளின் விஷயத்தில் இரக்கம், தண்டனைகளைக் காட்டியிருக்கிறார்களென்பது விளங்கும்.

ஹிதகாரிணி.

## THE KOHINOOR DIAMOND.

## கோகினூர் ரத்னம்.

கோகினூர் என்று இப்போது வழங்கிவருகிற ஒரு ரத்னத்தைப்பற்றி ஒரு மாதாந்தரப் பத்திரிகை பின் வருமாறு எழுதுகிறது :—

5011 வருஷங்களுக்குமுன் அதாவது கலியுகமாரம்பமாகுமுன் அசுவத்தாமாவிடம் முக்தாமணி என்று ஒரு ரத்ன மிருந்தது. பாரதக்கதையில் சிரஞ்சீவி பட்டம்பெற்ற அசுவத்தாமாவைப்பற்றித் தெரிவிக்கப்பட்டிருப்பது எல்லோருக்கும் தெரியும். திரௌபதியின் புத்திரர்களாகிய உப பாண்டவர்களை (பட்டத்துக்குரியவர்களை) நித்திரை செய்யும் போது அசுவத்தாமா கொன்ற குற்றத்திற்கு தண்டனையாக தன்னிடம் இருந்த இந்த உயர்ந்த ரத்னத்தை இழக்கும்படி நேர்ந்தது. அதை திரௌபதி அடைந்து யுதிஷ்டிரருடைய பட்டாபிஷேகத்தின்போது அம்மன்னருக்கு கொடுத்தனள். அது முதல் இந்த உயர்ந்த மணி அவருடைய வம்சத்தாரிடமே இருந்துவந்தது. 1193-ம் வருஷம் இராஜபுத்திரர்களின் ராஜ்யம் முழுமையும் நீங்கியவுடன் இந்த மணியும் அத்தோடு நீங்கி மகம்மதியர்களுள் எவரெவர் ஆண்டு வந்தார்களோ அவரவர்களிடம் மாறிமாறி வந்துகொண்டேயிருந்தது.

1732-ம் வருஷம் பர்ஷியாதேசத்திலிருந்து நாதர்ஷா என்ற வீரன் வந்து இந்தியாவைக் கொள்ளை யடித்துக் கொண்டுபோகையில் டெல்லிமாநகரத்திலிருந்து இந்த மணியையும் கொண்டுபோய்விட்டான். அப்போது முதற்கொண்டு மொஹலாயர்களுடைய ராஜ்யமும் சீரழிந்துவிட்டது. அப்போது இருந்த மொகலாய சக்கரவர்த்திக்கு இந்த முக்தாமணியின் மகத்துவம் தெரியுமாதலால் அதை ஒளித்துக்கொள்ளப் பிரயத்தனப்பட்டும் பலிக்காமற் போயிற்று. பின்வருமாறு நடந்த விபரமாவது.

நாதர்ஷா கொள்ளை யடித்துக்கொண்டுபோகும்போது மொகலாய சக்கரவர்த்தியிடம் மரியாதையாக விடைபெற்றுக்கொள்ள வந்தான். சக்கரவர்த்தி இந்த மணியைத் தன் தலைப்பாகைக்குள் மறைத்துவைத்திருந்தான். பர்ஷியன்ஷா மகம்மதிய வழக்கப்படி தலைப்பாகையை மாற்றிக்கொள்ள விரும்பியபோது சக்கரவர்த்திக்கு வேறுகதியில்லை. தன் தலைப்பாகைக்குள் இருந்த மணியும் நாதர்ஷா வசமாகிவிட்டது. பர்ஷியாவுக்குச் சென்றதும் நாதர்ஷாவின் கஜானிஜி ஷாவின் சொத்துக்களுடன் இந்தமணியையும் எடுத்துக்கொண்டு மோசம் செய்துவிட்டான். அதனால் தான் நாதர்ஷா மறுபடியும் இந்தியாவிற்கு வரச் சக்தியில்லாமற் போய்விட்டது. திருடிக்கொண்டு ஓடிய கஜானிஜி பிறகு இந்தியாவில் வந்து வியாபகமடைந்தாராம். இப்படி யிருக்கையில் இந்த முக்தாமணி பஞ்சவடி தீரத்து சிம்மமாகிய ரஞ்சிட்சிங் மகாராஜனுடைய கையில் வந்து சேர்ந்தது. இந்த மகாராஜனுடைய வல்லமையைப்பற்றி அனேக மாணவர்கள் படித்திருப்பார்கள். கடைசியில் இந்த மகாராஜனுடைய புத்திரன் காலத்தில் இதைவிக்டோரியா மஹாராணிக்குகொடுத்துவிட்டான். இந்த முக்தாமணிக்கே கோகினூர் என்றும் வேறு பெயருண்டு. அநேகருக்கு கோகினூர் என்ற பெயரே நன்கு தெரியும். இந்த முக்தாமணி எவருடைய கையில் சேருகிறதோ அவரே இந்த பரதகண்டத்தை ஆளுதற்கு பகவானால் தெரிந்தெடுக்கப்பட்டவர்போலும். மேலே சொல்லப்பட்ட விஷயங்கள் விநோதமாகத் தோன்றினாலும், அவ்விஷயங்கள் முட்டிலும் அப்படியே முழுமையும் உண்மை என்பது மாத்திரம்தான் நமக்கு நிச்சயம் தெரியும்.

## REVEW OF THE PRESS.

## பத்திரிகை ஆராய்ச்சி.

### A SUGGESTION TO TANJORE RYOTS.

### தஞ்சாவூர் ஜில்லா கிருஷிகருக்கு ஒரு யோசனை.

நவம்பர் மாஸத்துக் கிருஷிகளில் இந்தத் தலைப்பெயரின் கீழ் ஒரு சிறு வியாஸம் காணப்படுகிறது.

"தஞ்சாவூர் ஜில்லாவில் காவேரி, கொள்ளடம் நதிக்கரையிலுள்ள படுகை நிலங்கள் குடியானவர்களுக்கு மார்கழி மாதம் முதல் 6-மாதங்களுக்குக் குத்தகைக்குக் கொடுக்கப்படுகிறது. அவர்கள் அவைகளில் மக்காச்சோளம் என்று சொல்லும் முத்துச்சோளம், புகையிலை முதலிய பயிர்கள் சாகுபடி செய்வது வழக்கம். இப்பயிர்கள் அனேகமாய் மே௴ முன் அறுவடைக்கு வந்து விடும். இப்பயிர்கள் அறுவடை செய்தபின் அந்நிலங்களில் சாகுபடி செய்யும் குத்தகைதாரன் இன்னம் ஏதாவது ஒரு பயிரை இரண்டரை மாதத்துக்குள் சாகுபடி செய்து கொள்ளும்படியாய் நிலச்சுவான்கள் அனுமதி கொடுப்பதுண்டு. இப்படிச் சொற்ப நாளைக்குள் சாகுபடி செய்யக்கூடிய பயிர் சாதாரணமாய் கம்பு ஒன்றுதான் தற்காலம் வழக்கத்தின் கீழிருக்கிறது. குடியானவர்கள் தற்காலம் சாதாரண கம்புவிதையை விதைத்தே பயிர் செய்கிறார்கள். இது 60 நாள் கம்பு என்று சாதாரணமாய்ச் சொல்லப்பட்டபோதிலும் வாஸ்தவமாய் 90 நாளைக்கு மேல்தான் அறுவடைக்கு லாயக்காகிறது.

மே மாதத்தில் புகையிலை முதலிய பயிர்கள் அறுவடையான உடன் நிலத்தை உழுது கம்பு விதைத்தாலும் ஆகஸ்டுமாதத்தின் முதலில் தான் அறுவடைக்கு லாயக்காகும். ஸாதாரணமாய் காவேரியில் ஜூன் மாதத்தில் வெள்ளம் ஜாஸ்தியாய் வந்து கரை புரளுகிறது. ஸாதாரணமாய் இப்படி வெள்ளம் ஜாஸ்தி வரும் ஸமயங்களில் கம்புப் பயிர் கதிராயிருக்கும் தருணமாய் தற்காலம் நேரிடுகிறது. ஆகையால் கம்புப்பயிர் கெட்டு வெள்ளத்தால் அடிபட்டு மாசூல் யாதொன்றும் கிட்டாமல் குடியானவன் நஷ்டமடைவதுண்டு. இதுகாரணம் பற்றி அனேகர் இக்காலத்தில் நிலத்தில் பயிரேற்றாமல் தரிசு போட்டுவைக்கும் வழக்கமும் உண்டு. ஆகையால் இந்தக் கம்புப்பயிரை வெள்ளம் வரும் காலத்திற்கு முன் அறுவடைக்குக் கொண்டுவரக்கூடிய சாதனங்கள் ஏதாவது உண்டாவென்று சற்று கிருஷிகர் யோசிக்கவேண்டும். கம்புப்பயிர் திருநெல்வேலி முதலிய சில ஜில்லாக்களில் நாற்றுவிட்டு நடப்படுகிறது. சுமார் 25 நாள் முதல் 30 நாள்வரை நாற்றங்காலில் நாற்றாயிருந்து அப்பால் பயிர் செய்யப்பட்ட இடத்தில் நட்டால் அதின் வயதில் 30 நாள் வேறு இடத்தில் (நாற்றங்காலில்) சென்று விடுவதாலும், நாற்றுவிடும் நாள் விதைப்பதைவிட 30 நாள் முந்துவதாலும், பயிர் அறுவடைக்கு முந்தியே வந்துவிடுமென்பதில் யாதொரு ஆக்ஷேபனையு மில்லை. விவஸாய டிபார்டுமெண்டாரால் ஆப்ரிக்கா தேசத்திலிருந்து சில வருஷங்களுக்கு முன் கொண்டுவரப்பட்டு தற்காலம் விஸ்தாரமாய் பயிராகிவரும் ட்ரான்ஸ்வால் கம்பு என்னும் தினுஸு நம்முடைய ராஜதானியில் பயிராகிவரும் குறைந்த வயசு கம்புத் தினுஸுகளைவிட 10 நாளைக்கு முன்னதாகவே அறுவடைக்கு லாயக்காகும் குணம் அமையப்பெற்றிருக்கிறது. இக்கம்புத்தினுஸு அனேக இடங்களில் நாற்றுவிட்டு நட்டு நன்றாய் பலன் தந்

திருக்கிறது. இக்கம்பு விதைப்பதைவிட நடும் போது நல்ல மாசூல் தருகிறது. ஏகர் ஒன்றுக்கு ஸாதாரணமாய் விதைத்தால் 300 பட்டணம் படியும் நட்டால் 400 பட்டணம் படியும் தாழ்ந்த தரிசு நிலங்களிலுங் கூட கொடுத்திருக்கிறது. இத்துடன் இதில் இன்னும் ஒரு அனுகூலமுண்டு. தட்டை ஜாஸ்தியாய் வளராமல் குள்ளமாகவேயிருக்கிறது. கம்பின் தானியத்தின்மேல் பொட்டு ஜாஸ்தி மூடிக்கொண்டிராமலிருப்பதால் இதில் அரிசி ஜாஸ்திகிடைக்கிறது. சாப்பாட்டிற்கும் ருசியாயிருப்பதால் கோயம்பத்தூரிலிருக்கும் விவஸாயிகள் இந்தக் கம்புக்கு ஜாஸ்தி விலை கொடுத்து வாங்கிக்கொண்டு போகிறார்கள். ஆகையால் தஞ்சாவூர் ஜில்லாவில் படுகை நிலங்களை ஸாகுபடி செய்யும் குத்தகைதாரர்கள் தாங்கள் புகையிலை ஸாகுபடி செய்யும் நிலத்தின் ஒரு மூலையில் சுமார் ஒருசெண்டு நிலத்தில் 2 பட்டணம் படி இந்த தினுஸு கம்பு விதையை ஏப்பிரல்மீ மத்தியிலேயே நாற்றுவிட்டுப் பாதுகாத்துவந்தால் மேமீ முதலில் புகையிலை அறுவடை செய்தவுடன் நிலத்தை உழுது ஒரு ஏக்கர் விஸ்தீரணத்தில் இந்த நாற்றை உடனே நட்டுவிடலாம். இப்படிச் செய்வதால் குடியானவர்களுடைய கம்புப்பயிர் ஆற்று வெள்ளத்தினால் நஷ்டமடையாமலிருப்பதுடன் நல்ல பலனுமடைவார்களென்பதில் சந்தேகமில்லை. இந்த தினுஸு விதை வேண்டியவர்கள் விவஸாய டிபார்டுமெண்டு உத்தியோகஸ்தர்களுக்கு எழுதி வருத்திக்கொள்ளலாம்.

## MUTTRA.

## மதுராபட்டணம்.

இதன் அருமைப் பொருள்களைப் பற்றி எம். ராகவேந்திராசார் சுதேசமித்திரனில் எழுதியிருக்கிறார்.

இது ஒரு புராதன பட்டணம் ஹிந்துக்களின் யாத்திரை ஸ்தலங்களுள் இதுவும் ஒன்று. கி. பி. 400-ல் சீன யாத்திரிகனான பா-ஹி-யான் இவ்விடம் வந்து, இது பௌத்த மதத்தாரின் மத்தியஸ்தானம் என்றும் கிருஷ்ணன், பலராமன் என்ற இரண்டு சகோதரர்களின் ஜெனன பூமி என்றும், மதுரா ஜில்லாவைச்சேர்ந்த ஸ்ரஜு மண்டலம் என்ற பாகம் ஹிந்துக்களின் மிகச்சிறந்த யாத்திரை ஸ்தலம்என்றும் குறிப்பிட்டிருக்கிறார். இந்தப் பட்டணம் யமுனா நதியின் வடகரையில் இருக்கிறது. ஜனத்தொகை 60,040. 1017ம் வருஷத்தில், கஜனி மகம்மது இப்பட்டணத்தின் மீது படையெடுத்து பட்டணத்தையும், கோவில்களையும் நாசப்படுத்தினான். 1500-ல் சுல்தான் சிக்கந்தர் லோடி மதுராபட்டணத்தின் கோவில், விக்கிரகங்கள், அனைத்தையும் இடித்துத் தரைமட்டம் ஆக்கினான். ஆனாலும், இப்பட்டணத்தின் சிறப்புக்கு ஹானி வரவில்லை. இன்னும் ஹிந்துக்களால் இது யாத்திரை ஸ்தலமாகக் கொண்டாடப்படுகிறது. மதுராபட்டணத்திற்குக் கீழ்பாகம் 6-வது மைலில் மஹாபன் என்ற ஓர் புராதன பட்டணம் இருக்கிறது. இந்தஇடத்தில்தான் யசோதைக்குப்பிறந்த பெண் குழந்தையை எடுத்துக்கொண்டு அதற்கு பதில் ஸ்ரீ கிருஷ்ணன் என்ற சிசுவை வைத்துவிட்டுச் சென்றதாகவும் இந்ததான் அன்றுமுதல் ஸ்ரீ கிருஷ்ணன் வளர்ந்து வந்ததாகவும் சொல்லப்படு

கிறது. ஸ்ரீ கிருஷ்ணன் வளர்ந்து வந்த இந்த குறிப்பிட்ட இடத்தையும், குழந்தை கிருஷ்ணன் படுத்த தொட்டிலையும், நந்தனுடைய அரண்மனை இருந்தஸ்தலத்தையும், எசோதை தயிர் கடைந்த மத்தையும், கிருஷ்ணனுடைய வேணுவை கோபிகள் ஒளித்து வைத்த சுவரின் பாகத்தையும், காட்டுகிறார்கள். மதுரா பட்டணத்திற்கு வடக்கே ஐந்தாவது மைலில் யமுநா நதிக்கரையில் பிருந்தாவனம் என்ற ஓர் திவ்யஸ்தலம் இருக்கிறது. இதில் அநேக தேவாலயங்கள் இருக்கின்றன. 1580 வருஷத்தில் கோபிநாதனால் கட்டப்பட்ட ஓர் கோவிலும், 1590-ல் கோவிந்த தேவனால் கட்டப்பட்ட மற்றொரு கோவிலும், 1851-ல் 40,000 பவுன் செலவழித்துக் கட்டிய சிறந்த கோவிலும் இருக்கின்றன. கடைசியாகச்சொன்ன கோவில் பூரி, தானேஸ்வரம், ஹரித்துவாரம், இவ்விடங்களில் கட்டியிருக்கும் கோவில்களுக்குச்சமதியாகவே இருக்கிறது. மஹாபனத்திற்கு ஒருமைல் தூரத்தில் யமுனாநதியின் கீழ்க்கரையில் இருக்கும், கோகுலம் என்ற ஓர் சிறு கிராமம், ஸ்ரீ விஷ்ணுவின் அவதாரமான ஸ்ரீ கிருஷ்ணபகவானால் பூமண்டலத்தில் முதல் முதல் காலடிவைக்கப்பட்ட சிறந்த ஸ்தலமாகும். இந்த இடத்திற்கு குஜ்ராத்திலிருந்தும் பம்பாயிலிருந்தும் பலலாயிரம் ஜனங்கள் யாத்திரை செய்துவருகிறார்கள். புராதன கோவிலையும், மானஸ கங்கை யென்னும் சரோவரத்தை யுடையதுமான கோவர்த்தனம் என்ற க்ஷேத்திரத்திற்கு பல யாத்திரைக்காரர்கள் மழைகாலங் கழித்தபிறகு சென்று வருகிறார்கள். மதுராபட்டணத்தில் வியாபாரம் அதிகம் இல்லை. யமுனாநதியில் வருஷத்தில் 8-மாதம் வரையிலும் ஜலம் வற்றிப்போகிறபடியால், ஜனங்கள் ஜலக்கஷ்டத்திற்கும், பஞ்சத்திற்கும் உள்ளாகிறார்கள். இதன் பக்கத்தில் ஓர் கண்டோன்மெண்டு ஸ்டேஷன் உண்டு. அதில் படைகள் இருக்கின்றன.

இவ்வூர் கலெக்டர் கச்சேரிக்குச் சமீபத்தில் முனிஸிபல் ம்யூஸியம் (கண்காட்சி சாலை) ஒன்று உளது.

## IMPORTS OF MACHINERY INTO INDIA.

### இந்தியாவில் யந்திர இறக்குமதி.

ப்ரிட்டிஷார்களால் அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கும் யந்திரவகையராச் சாமான்களைப் பற்றிய விவர மொன்று லண்டன் "டைம்ஸ்" பத்திரிகையில் சென்ற மாதத்தில் வெளியாகி யிருக்கிறது. அதில் ப்ரிட்டிஷார்களால் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கும் யந்திர சமான்களைப் பற்றி மாத்திரம் நாம் தற்சமயம் கவனிப்போம். 1910-ம் வருஷம் மார்ச்சு மாதம் 31-ஆம் தேதியோடு முடிவான ஒரு வருஷத்தில் அந்நிய நாடுகளிலிருந்து யந்திர சாமான்கள் இந்தியாவுக்குள் எவ்வளவு வந்திருக்கின்றன வென்பது கீழே குறிக்கப்படும் கணக்கினால் விளங்கும். இந்த ஒரு வருஷத்தில் இந்தியாவுக்குள் வந்திருக்கும் யந்திர சாமான்களின் மொத்தக் கிரயம் ஐம்பதாறு லட்சத்து முப்பத்தேழாயிரத்து எண்ணூற்றிருபத்தைந்து பவுன்களாகும். அதாவது, எட்டு கோடியே நாற்பத்தைந்து லட்சத்து அறுபத்தேழாயிரத்து முன்னூற்றெழுபத்தைந்து ரூபாய்கள், இந்தியர்களால் யந்திர சாமான்களுக்காக வெளி நாட்டினர்க்குப் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த மொத்தத் தொகையில் 5, 351, 166 பவுன்கள் பெறுமான சாமான் இங்கிலாந்திலிருந்தும், 286, 659 பவுன்கள் பெறுமான சாமான்கள் ஜெர்மனி, ஜப்பான், இத்தலி போன்ற வேறு அந்நிய நாடுகளிலிருந்தும் இந்தியாவுக்கு வந்திருக்கின்றன. இங்கிலாந்து சாதாரண மெஷீன்களும், பஞ்சாலைபோன்ற பெரிய யந்திர சாலைகளுக்கு வேண்டிய மெஷீன்களும், இன்னும் வேறு வேலைகளுக்கான மெஷீன்களுமாக

அனுப்பி யிருக்கும் யந்திர சாமான்களின் மதிப்பு பின்வருமாறு :—

| சாமான்விவரம் | பவுன்கள் |
|---|---|
| பெரிய யந்திர சாலைகளுக்கு. | 3,247,684 |
| தண்டவாளங்களை நீக்கி மற்றை ரயில்வே சாமான்கள் | 2,103,482 |
| தையல் மெஷீன்கள் | 74,203 |
| டைப்ரைட்டிங் மெஷீன்கள் | 14,994 |

மற்ற அந்நிய நாடுகளிலிருந்து இதே காரியங்களுக்கு வந்த சாமான்கள் விவரம் பின்வருமாறு :...

| சாமான் விவரம் | பவுன்கள் |
|---|---|
| பெரிய யந்திர சாலைகளுக்கு | 21,433 |
| தண்டவாளங்களை நீக்கி மற்றை ரயில்வே சாமான்கள் | 14,902 |
| தையல் மெஷீன்கள் | 28,575 |
| டைப்ரைட்டிங் மெஷீன்கள் | 28,839 |

PROCEEDINGS OF THE UTTANKARAI CO-OPERATIVE CONFERENCE.

ஊத்தங்கரை தாலூக்கா, கோ-ஆபரேடிவ் கான்பரேன்ஸின் நடவடிக்கைகள்.— இந்த கான்பரென்ஸில் அக்ராசனாதிபதியா யிருந்த மிஸ்டர் டி. ஆதிநாராயண செட்டியார் அவர்கள்செய்த பிரசங்கமும் தீர்மானங்களும் மட்டும் பிரசுரப்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்தக் கான்பரென்ஸில் செய்யப்பட்ட உபந்யாஸங்களும் பிரசுரமாயிருந்தால் நலமாயிருக்கும்.

SRIMAT RAMAYANAM.

ஸ்ரீமத் ராமாயணம்.—சென்னை எ. வி. ராமசந்திர அய்யரால் ப்ரசுரிக்கப் பட்ட ஸ்ரீமத் ராமாயணத்தின் தமிழ்வசன காவியம் ஆரண்யகாண்டம் நாலாவது ஸர்க்கம் பின்பாதியும் அதற்குமேல் 27-வது ஸர்க்கத்தில் முன்பாதியும் அடங்கிய 17, 18, ஸஞ்சிகைகளை வரப்பெற்றோம்.

## REVIEWS OF BOOKS.
## புஸ்தக ஆராய்ச்சி

REPORT OF THE FIRST CO-OPERATORS' DISTRICT CONFERENCE, TANJORE DISTRICT.

தஞ்சாவூர் ஜில்லா ஐக்கிய நாணயச் சங்கங்களின் முதல் கான்பரேன்ஸ் ரிபோர்டு.— 1911-ஹூ மே௴ 28, 29-ம் தேதிகளில் நீடாமங்கலத்தில் அ. சேதுராமய்யர் முயற்சியால் இந்தக் கான்பரென்ஸ் நடந்தது. இதில் செய்யப்பட்ட பிரசங்கங்கள், உபந்நியாஸங்கள், தீர்மானங்கள் முதலிய ஸகலமும் இந்த புஸ்தகத்தில் அடங்கியிருக்கின்றன. இதில் பிராவிடென்டு பண்டுகளும் அவைகளால் விளையும் தீமைகளும், நிதிகளும், அவைகளின் வேலையும், விவஸாய ஐக்கிய முயற்சி, ஐக்கியச் சங்க சட்டம், நெசவுக்காரர்களும், கூட்டு முயற்சியும், கூட்டு முயற்சி பரவுதல், ஆகிய இந்த வியாஸங்கள் கவனிக்கத்தக்கவை.

கூட்டு முயற்சி விஷயமாய் அநேக இடங்களில் கான்பரென்ஸ்கள் நடந்து வருகின்றன. ஆனால் முதல் முதலாக இந்த நீடாமங்கலம் கான்பரென்ஸில் நடந்த விஷயங்கள்தான் அந்தக் கான்பரென்ஸுக்கு வராதவர்களுக்கு உபயோக மாகும்படி தமிழில் பூராவாக அச்சிடப்பட்டு வெளிவந்திருக்கின்றன. இந்த சென்னை ராஜதானியிலுள்ள ஸகல ஐக்கியச் சங்கங்களுக்கும் இந்த ரிப்போர்ட் அனுப்பப் படுமென்று அறிகிறோம். இப்படி ஒவ்வொரு சங்கமும் செய்யும் பக்ஷத்தில் அநுபவபூர்வமாய் ஏற்பட்ட நல்ல முறைகளைக் கைப்பற்றி குற்றங்குறைகளை நீக்குவதற்கு ஸௌகர்யமாகும்.

THE INDIAN READY RECKONER BY B. A. RAO, BRITISH BURMA PRESS, RANGOON.

மடவார் தோழி.—இது புதுவை சு. அ. சுப்பராயப் பிள்ளை எழுதியது. விலை அணா 4.

## BOYS' SECTION.
## சிறுவர் பகுதி.

---

SOME PROVERBS.

**சில பழமொழிகள்.**—தன் கை தான் தலையணைக் குதவும், சார்ந்து நிற்பவன் சேர்ந்து நிற்பான், சோறில்லாதவர்களுக்கு வீறில்லை, வீறில்லாதவர் களுக்குச் சோறில்லை, நாடு வாழ வீடு வாழும் என்னும் பழமொழிகளை சிறுவர் எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்திருப்பது நலம்.

THE ROOT.

**வேர்.**—வேர்கள் மரத்தைத் தாங்கிக்கொண்டு, அது கீழே விழாமல் காக்கின்றன; மரத்திற்கு உணவைத் தேடிக் கொடுக்கின்றன. நுட்பமான தொளைவேரின் முனையில் இருக்கிறது. வேர் அதன்வழியாய் நாம் ஊற்றும் நீரையும், பூமியிலுள்ள ஸாரத்தையும் கிரகித்து மரமெங்குப் பரவச்செய் கிறது. இதுதான் வேரின் முக்கியமான வேலை.

GREATNESS.

**பெருமை.**—ஒரு சக்கிறத்தின் மேல்பாகம் கீழே வரவும், கீழ்பாகம் மேலேபோகவும் அதிகநேரம் ஆகமாட்டாது "உடமையும் வறுமையும் ஒரு வழி நில்லா" என்று கொன்றை வேந்தனில் ஒருவசனமும் இருக்கிறது. ஒற்றுமை, பொருமை, பொறுமை, வறுமை, சிறுமை, தனிமை என்னப்பட்ட இந்த ஆறுவித—மைகளையும் பாத்திரமறிந்து பயன்படுத் திக்கொள்பவர்கள் ஏழாவது—மையாகிய பெருமை யைப் பெற்றுக்கொள்ளவும் அருகராவார்.

MR. BURGESS.

**மிஸ்டர் பர்ஜெஸ்.**—இங்கிலாந்துக்கும் ப்ரான் ஸுக்கும் நடுவிலுள்ள 30 மைல் விஸ்திரண முள்ள சமுத்திரத்தை பர்ஜெஸ் என்பவன் ஸமீபத்தில்நீந்தினுன். சென்ற 36 வருஷங்களாக எத்தனையோ நூற்றுக்கணக்கான நீச்சல்காரர்கள் பிரயத்தனப்பட்டும் சாதிக்க முடியாத விஷயத்தை பர்ஜெஸ் சாதித்தான். சென்ற 7 வருஷங்களாகப் பர்ஜெஸ் என்பவன் 15 தடவை பிரயத்தனப்பட்டு முடியாமற்போயும் விடா முயற்சினுல் 16 வது தடவையாக கடைசியில் இந்த 30 மைல் தூரத்தை யும் நீந்திக் கரையேறித்திரும்பினுன்.

BOYS WHO SAT ON THE THRONE.

**ஸிம்மாஸனத்தில் உட்கார்ந்த பையன்கள்.**—இங்கிலாந்து அரசரின் ஸிம்மாஸனம் வெஸ்ட் மினிஸ்டர் மடாலயத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஸிம்மாஸனத்தில் உட்காரவேண்டும் என்ற எண்ணத்துடன் ஒரு வெஸ்ட்மினிஸ்டர் ஸ்கூல் பையன் 1800 வருஷத்தில் ஒருநாள் ராத்திரி மடாலயத்தில் ஒளிந்திருந்து, இரவெல்லாம் ஸிம் மாஸனத்தில் இருந்தபடியே தூங்கினுன். மேலும் அவன் ஸிம்மாஸனத்தில் "பி. ஆபட் இந்த ஸிம் மாஸனத்தில் தூங்கினுன். 1800" என்று எழுதி வைத்தானும். இம்மாதிரியே வேறு இரண்டு பள் ளிக்கூடப்பிள்ளைகள் மடாலயத்தில் ஒளிந்திருந்த தாகவும், இருவரும் ஸிம்மாஸனத்தில் உட்கார்ந் திருந்ததாகவும், உண்மையை வெளியிட்டார் களாம்.

WORLD'S OPINION

**உலக அபிப்பிராயம்.**—உன்னைப்பற்றி உலகம் என்ன நினைக்கிறது அல்லது என்ன சொல்கிறது, என்று ஏன் கவலைப்படுகிறுய்? ஏனென்றுல் உலக மானது ஸரியாக நிதானிக்கும் நியாயாதிபதி அல்ல; அது எப்பொழுதும் அப்படித்தானிருக்கும் உன் மனச்சாட்சியே உலகத்தைப்பார்க்கிலும் பெரியதும் உண்மையுள்ளதும் ஸரியானதுமான நியாயாதிபதி யாகும்.—இ. டப்ள்யு. மேக்கவேன்.

ELEPHANT.

**யானைகள்.**—யானையின் உற்பத்தியும் வளர்ச்சியும் மிகவும் தாமதமானது. ஸாதாரணமாய் ஒரு பெண் யானையானது பக்குவப் பிராயம் அடைய பதி னைந்து வருஷம் செல்லும். அது குட்டியை இரு பத்திரண்டுமாதகாலம்வயிற்றில் வைத்திருந்து தான் ஈனும். ஆகையால் முதல் குட்டி போடுவதற்குள் பெண் யானைக்கு வயது 17 ஆகிவிடும். ஒவ்வொரு தடவையிலும் ஒரு குட்டிதான் போடும். அதற்கு இரண்டு வருஷகாலம் பால் கொடுத்து வளர்க்கும். அவைகளுக்கு இரண்டே முலைக்காம்புகள் தான் உண்டு. அவைகள் முன்னிரண்டு கால்களுக்கும் மத்தியில் இருக்கின்றன. யானைக்குட்டிகள் வாயி னுல்தான் பால் குடிக்கும், தும்பிக்கையினுல் குடிக் காது. ஆண் யானைகள் ஸரியான வயதுக்குவர

இருபது வருஷமாகும். ஆனால் பிடித்து வளர்க்கும் யானைகளுக்கு 25 வருஷமாகும்.

பழகின யானைகளை இலங்கைத்தீவில் காடுகளை யழிப்பதிலும், மரங்களை யிழுப்பதிலும், பாதைகள் போடுவதிலும், கற்பாலங்கள் கட்டுவதற்குப் பெருங் கற்களைக் கொண்டுவந்து சேர்ப்பதிலும் உபயோகப் படுத்துகிறார்கள். யானையின் தலையில் எலும்பும் தசையும் சேர்ந்து சுமார் 8 அங்குல கனமுள்ளதா யிருக்கிறது. அப்படி இருக்கும்போது அதைக் கொண்டு எவ்வளவு பலமாயும் வேகமாயும் தள்ளும் என்பதைப்பற்றி சொல்லவேண்டியதில்லை. யானையின் மத்தகம் அவ்வளவு பெரிதாயும், கெட்டியாயும், கனமுள்ளதாயிருந்தபோதிலும் அதற்குள்ளிருக்கும் மூளையானது மண்டையின் அரைக்கால் பாகத்தில் தான் இருக்கிறது. இக்காரணத்தினால்தான் யானையைச் சரியான இடத்தில் எய்து இறக்கச் செய்வது கடினம். அப்படி இடங்கண்டுபிடித்து எய்து கொல்லக்கூடியவன் மிகத்திறமையுள்ளவனும் தேர்ச்சியுள்ளவனாயு மிருக்கவேண்டும்.

THE NAMBUDRI.

**நம்பூதிரி.**—ஒரு பெரிய இல்லத்தில் நம்பூதிரிக்குக் கறவைமாடுகள், காளைகள் முதலியவைகள் நிறைந்து கோகுலமாக இருந்தன. யஜமானுக்கு பிசகாத நியமம் முதலிய பல சுபலக்ஷணக்களுண்டு. சம்பத்தக்காரியுடன் லோலாப்தியிலிருக்கும்போதும் விடியற்காலமாகிவிட்டால், கடிகாரத்தை எடுத்துக் கொண்டு, (இப்பொழுது இவர்களுக்குள்ளும் கைக் கடிக்காரம் ஸாமான்யமாய்க் காணக்கூடியதே!) ஸ்நானத்திற்கு இறங்கிவிடுவதே வழக்கம். ஆபத்துகள் எம்மாதிரி வந்தாலும் ஸாமான்யத்தில் தைரியத்தை யிழப்பதில்லை. எல்லாம் ஈசுவர சங்கற்பமென்று மனதைத் திடப்படுத்திக்கொள்வது நம்பூதிரிக்கு வெகு ஸகஜம். இதற்கு உதாரணமாக ஒரு கதை — "ஒரு நம்பூதிரியின் பிதுரார்ஜித வீடு நெருப்புப்பற்றி யெரிந்தது. அதே க்ஷணத்தில் அவனுடைய ஏகபுத்திரன் பாழுங் கிணற்றில் விழுந்து விட்டான். ஸம்ஸாரமும் கர்பமாகிப் பிரசவ வேதனை ஸகிக்கமுடியாமல் பிராணனை விடுவதாக இருந்தாள். இப்படிக் கதையில் சொல்லுவது போல் பல ஆபத்துகள் ஒன்றுசேர்ந்தும், நம்பூதிரி சிறிதாவது பதறாமல், "கேசவா, செல்லப்பெட்டியைக் கொண்டுவா," என்று கூவி ஸாவதானமாய் வெற்றிலை மென்று பிறகு காரியம் ஆரம்பித்தானாம்."

THE LEECHES FEAST.

**அட்டைகளின் விருந்து** —மணிப்பூருக்கு அருகில் நிக்ஷா—கார்ட் என்ற இடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் காவற்காரருக்குள் ஒருவன் தன்னுடைய ஸேவைத்தவணை முடிந்து இங்கிலாந்துக்குத் திரும்பிப்போகப் புறப்பட்டான். பயணத்துக்கு முன் மண்ணெண்ணெய் டின் நிறையப் பட்டைச் சாராயம் வாங்கிக்கொண்டு மகா சந்தோஷத்துடன் பறப்பட்டான். அடிக்கடி குடித்துக்கொண்டு கடைசியாய் கொயிமாபட்டணத்துக்கு 40 மைல் தூரத்திலுள்ள ஒரு காட்டில் வந்துசேர்ந்தான். அங்கு அவன் தன்னோடுகூட வந்தவர்களை விட்டுப்பிரிந்து கொஞ்சதூரஞ்சென்று நிழலடர்ந்த ஒருபெரியமரத்தனடியில் உட்கார்ந்து மண்ணெண்ணெய் டின்னிலிருந்த சரக்கில் அளவுக்குமிஞ்சி உட்கொண்டு உறக்கமாய்ப் படுத்துவிட்டான். அருகாமையில் ஓடிக்கொண்டிருந்த வாய்க்காலில் அட்டைகள் எதேஷ்டமாயிருந்தன. அவைகள் மோப்பம் பிடித்துக்கொண்டு அந்த நிர்பாக்கியனுடைய திரேகமெல்லாம் பரவி ரத்தத்தை உறிஞ்சிக்கொண்டிருந்தன. அவனுடைய கூட்டாளிகள் அவனைத்தேடிக்கொண்டு ஒருநாள் முழுவதும் அலைந்து கடைசியாய் அந்தப்பரிதாப நிலையில் அவனைக்கண்டார்கள். இன்னும் ஒன்று இரண்டு மணிநேரம் அவர்கள் தாமதித்து வந்திருந்தால் அவன் செத்திருக்கவேண்டியது. அவ்வட்டைகளைப் பிடுங்குகிறது மிகுந்த பிரயாசையாயிருந்தது. இப்போது அந்தக்குடியன் மிகுந்த ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் கிடக்கிறானாம்.

## LADIES' SECTION.
## ஸ்திரீகள் பகுதி.

OUR EMPRESS AND VAIKASI.

**நம்முடைய ராஜாத்தியும் வைகாசியும்**—நம்முடைய ராஜாத்திக்கும் வைகாசி மாதத்துக்கும் ஒரு பொருத்தம் தொடர்ந்துவருகிறது. இந்த ராஜாத்தி பிறந்தமாஸம் வைகாசி, விவாகம் செய்துகொண்ட மாஸம் வைகாசி, ராஜாத்தியான மாஸம் வைகாசி.

DRESSES OF ROYAL LADIES.

**ராஜ ஸ்திரீகளின் உடை.**—நம் சக்ரவர்த்தினியாகிய மேரி ராணியாருக்கு வருஷம் ஒன்றுக்கு உடைக்கு மாத்திரம் 2000 பவுன் செலவாகிறதாம்.

நம் சக்ரவர்த்தியின் அன்னைக்கு வருஷம் ஒன்றுக்கு உடைமாத்திரம் சற்றேறக்குறைய 2000 பவுன் செலவாகிவிடுகிறதாம்.

ஐரோப்பாவைச்சேர்ந்த ஹாலந்து தேசத்தின் ராணிக்கு வருஷம் ஒன்றுக்கு உடைக்குமாத்திரம் 4000 பவுனாகிறதாம்.

ருஷியா தேசத்தின் சக்ரவர்த்தினியானவள் உடைக்கு மாத்திரம் செலவழிக்கிற செல்வமானது உலகத்தில் சக்ரவர்த்தினிகள் உடைக்கு மாத்திரம் வாரி இறைக்கிற பணத்தை ஒன்ருய் குவித்தாலும் இவள் உடையின் பணத்திற்கு நிகராகாதாம்.

ஜர்மனி தேசத்தின் சக்ரவர்த்தினியின் உடைக்கு வருஷம் ஒன்றுக்கு 2500 பவுன் செலவாகிறதாம்.

இத்தாலியாவின் சக்ரவர்த்தினிக்கு வருஷம் ஒன்றுக்கு உடைக்கு மாத்திரம் 3000 பவுன் பிடிக்குமாம்.

MISS PATEL.

**மிஸ் பெட்டேல்.**—பம்பாய் ராஜதானியைச் சேர்ந்த பார்ஸி மாதாகிய மிஸ். தாசிபாய் ரஸ்டம்ஜி. கோவாஸ்ஜி பெட்டேல் பம்பாய் கிராண்ட் மெடிகல் காலேஜில் வாசித்து, எல். எம். எஸ். பட்டம்பெற்று உயர்ந்த வைத்தியப் பரீக்ஷைகளில் தேர்ச்சிபெற இங்கிலாந்துக்குச் சென்று, சென்றவருஷம் மேமீ 'ராயல் காலேஜ் ஆப்ஸர்ஜன்ஸ்' என்னும் கலாசாலையில் சேர்ந்தார். இக்கலாசாலையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாதர்களில் மிஸ்பெட்டேல் முதன்மையானவர். இம்மாது லண்டன் எம். பி. பரீக்ஷை முதலிய பரீக்ஷைகளில் தேறி பட்டம் பெற்றிருக்கிருரென்று அறிந்து சந்தோஷப்படுகிறேம்.

PUTTING CHILDREN TO SLEEP.

**குழந்தைகளை தூங்கச்செய்தல்.**—குழந்தைகளைத் தாயின் பக்கத்திலேயே தூங்க விடுவதால் குழந்தைக்குத் தாயின் சூடு பட்டு நல்ல நித்திரைசெய்யுமென்பது சிலரின் அபிப்பிராயம். ஆனல் இதற்கு மாருக, குழந்தைபெரியவர்களின் பக்கத்தில் படுத்து அவர்கள் வெளிவிடும் கெட்ட ஆகாயத்தைச் சுவாசிப்பதாம். அதற்கு சுகயீனம் நேரிடுமென்றும், தாய்மாரின் கைமுதலிய உறுப்புகள் குழந்தைகளின் மேல் படுவதால் அவர்கள் நித்திரைக்குப் பங்கமுண்டாகலாமென்றும், சில தாய்மார் படுத்துக்கொண்டு குழந்தைக்கு பால் கொடுக்க, குழந்தை தூங்குமுன் தாம் தூங்கி விடுவதால் குழந்தை அளவுக்குமிஞ்சிப் பால் குடித்து அஜீரணத்திற் கிடமாகலாமென்றும், சில குழந்தைகள் பால் குடித்துக்கொண்டே தூங்கி விடுவதால் பால் நாசியிலேறுவதினல், அல்லது குழந்தை தாயின் துணிகளினல் தன் வாயையும் நாசியையும் மூடிக்கொண்டு மூச்சுவிட கஷ்டப்படுவதினல் ஒரு ஸமயம் உயிர்ச்சேதமுண்டாகலாமென்றும் சிலர் அபிப்பிராயப்படுகிருர்கள். இது வாஸ்தவமே. ஆகையால் இவ்வித விபத்துகளுக்கு இடமுண்டாகாதபடி குழந்தைகளைத் தனிமையாகத் தாயின் படுக்கை ஓரத்தில் வேறு படுக்கையிற் போட்டு நித்திரை செய்யவிடவேண்டும். படுக்கை சூடாயிருக்கும்பொருட்டுக் கம்பளித் துணியை விரித்து அதின்மேல் மெல்லிய போர்வையை விரித்து குழந்தையைப் படுக்கவைக்கவேண்டும். நித்திரை செய்யும்போது தலைக்குல்லா முதலானவைகள் போட்டு முகத்தை மூடாமல் காற்று நன்ருய்ப் படும்படி முகத்தைத் திறந்து வைக்கவேண்டும். கொசு, மூட்டை, எறும்பு முதலியவை படுக்கைக்குச்செல்லாமல், கட்டிலின் கால்களில் கெரோஸின் எண்ணெயில் அல்லது கற்பூரத்திராவகத்தில் நனைத்த துணிகளைக் கட்டிவைக்கலாம். கொசு அதிகமாயிருந்தால் கொசு வலையால் கட்டிலை மூடலாம், அடிக்கடி குழந்தையின் படுக்கை முதலியவைகளை வெயிலில் காயப்போட்டெடுத்து உபயோகிக்க வேண்டும்.

THE EMPRESS AND THE INDIAN LADIES.

**சக்ரவர்த்தினியும் இந்திய ஸ்திரீகளும்.**—டிஸம்பர்௴ 13௳ புதன்கிழமை யன்று ஜார்ஜ் சக்ரவர்த்தி வாலண்டியர் படையைச்சேர்ந்த உத்தியோகஸ்தர்களுக்கும் ராணுவத்தைச் சேர்ந்த இந்திய உத்தியோகஸ்தர்களுக்கும் சென்னை டில்லிடெபுடேஷன்களுக்கும் பேட்டிகொடுத்துக் கொண்டிருந்தபோது மேரி சக்ரவர்த்தினி பெருமாட்டி டில்லி ஸர்க்கிட் ஹவுஸில் தேச மன்னர்களின் குடும்பங்களைச் சேர்ந்த 120 ராஜ ஸ்திரீக்ளுக்கு பேட்டி கொடுத்துக் கொண்டிருந்தார். அப்போது லேடிஹார்டிஞ்சும், டெவன்ஷையர் டச்சஸ்ஸும், லேடி மாக்மோகனும் சக்ரவர்த்தினி பெருமாட்டியோடு கூடவே யிருந்தார்கள். அந்த 120 ராஜஸ்திரீகளில் விஜயநகரம் ராணி ஒருவர். அச்சீமாட்டி தமது குழந்தைகள் இரண்டை தமது கூடவே அழைத்துக்கொண்டு போயிருந்தார்கள். சக்ரவர்த்தினி பெருமாட்டி அக்குழந்தைகளிரண்டையும் தம்முடைய ஸிம்மாஸனத்தின் கீழேயே உட்கார்ந்து கொள்ளச் சொன்னார்கள். சிறிதுநேரம் பரஸ்பரம் குசலப் பிரஸ்னம்செய்து கொள்வதில் கழிந்தது. அப்பால் விஜய நகரம் ராணி சக்ரவர்த்தினியைப் பார்த்து. 'சக்ரவர்த்தினி பெருமாட்டியின் இப்போதைய விஜயத்தை இந்திய மாதர்கள் வெகு மங்களகரமான நற்சகுன நிகழ்ச்சியாய்க் கருதுகிறார்கள். அவர்கள் சக்கிரவர்த்தினி பெருமாட்டி இந்நாட்டுக்கு இரண்டாந்தடவை விஜயஞ்செய்ய கிருபை கூர்ந்ததற்கு அப்பெருமாட்டிக்குப் போதுமானபடி நன்றிசெலுத்த முடியாதவர்களாயிருக்கிறார்கள். சக்ரவர்த்தினி பெருமாட்டி இவ்விஜயத்தால் இந்தியா முழுமையையும் கௌரவப்படுத்தியிருப்பதோடு, இன்றைக்கும் அப்பெருமாட்டியின் முதல் விஜயத்தை மிகுதியும் பேணி ஞாபகத்தில் வைத்துக்கொண்டிருக்கிற இந்திய மாதர் கூட்டத்தை கௌரவப்படுத்தியிருக்கிறார்கள். நேற்றுசக்ரவர்த்தி பெருமானும் சக்ரவர்த்தினி பெருமாட்டியும்நடத்திய தர்பாரைவிட வேறெதுவும் இந்திய ஜனங்கள் மனதில் நன்றாய்ப் பதியும்படி அவ்வளவு ராஜ கம்பீரத்தோடு கூடியதாயிருக்கவில்லை. தங்களுக்கு ஒரு அரசனும் அரசியும் இருக்கிறார்களென்று இந்திய ஜனங்களுக்கு இப்போது நன்றாய்த் தெரியவருகிறது. டில்லி தர்பார் தலைமுறைக் கணக்காய் ஜனங்கள் ஞாபகத்திலிருக்கும். அது இந்திய ஜனங்கள் பிரிடிஷ் அரசரிடம் வைத்திருக்கும் மதிப்பால் ஏற்படக் கூடிய ராஜ விசுவாசத்தைக் கயிறுகட்டி இழுத்து நெருங்கி வரும்படி செய்யும். போனவருஷம் இந்த மாதவாக்கில் நான் லேடி ஹார்டிஞ்சினிடம் சக்ரவர்த்தினியின் பணி மாதர்களில் ஒருத்தியாய் இன்னும் சில இந்திய மாதர்களுடன் சேவிக்க வேண்டுமென்ற விருப்பம் எனக்கிருப்பதாய் அப்பெருமாட்டிக்குத் தெரியப்படுத்தும் படியாய்க் கேட்டுக்கொண்டேன். ஆனால் என்பிரேரணை ஒப்புக் கொள்ளப்பட வில்லை. இந்தியமாதர்கள் தங்களுக்கு சக்ரவர்த்தினியிட மிருக்கும் பக்தி விசுவாசத்தைத் தெரியப்படுத்திக் கொள்ள ஏதேனும் ஒரு ஸமயம் கிடைத்தால், அம்மாதிரி ஸமயம் கிடைத்ததைப் பற்றி அவர்கள் கர்வங் கொள்வார்களென்று இச்சமயம் நான் உறுதிகூறத் துணிகிறேன்"—என்று வெகு சாதுரியமாயும் ஸமயோசிதமாயும் பேசினார். அப்படி விஜயநகரம் ராணி பேசியதைக்கேட்டுக் கொண்டிருந்த சக்ரவர்த்தினி பெருமாட்டி அந்த ராணியைப்பார்த்து டில்லி தர்பாரால் நன்மைகள் விளையுமென உங்கள் வாய்ப்படக்கேட்க எனக்குச் சந்தோஷமாயிருக்கிறதென்று சொல்லி, அந்த ராணிக்கு நன்றி செலுத்திவிட்டு அச்சீமாட்டியின் மூத்த பிள்ளையைப்பற்றி விசாரித்தார்கள். அப்போது விஜயநகரம் ராணி தமது மூத்தபையன் ஆஜ்மீர் மேயோ காலேஜில் வாசித்துக்கொண்டிருப்பதாயும் சக்ரவர்த்தினி பெருமாட்டி அந்த காலேஜுக்குப் போகும்போது அவன் அப்பெருமாட்டியை வந்து சேவாஞ்சலிசெய்து கண்டுகொள்வானென்றும் தெரிவித்தார்கள். விஜயநகரம் ராணி சக்ரவர்த்தினி பெருமாட்டியை அச்சமயம் ரூபா 2000 காணிக்கை வைத்துக்கொண்டார்கள். அதனை அப்பெருமாட்டி ஏற்றுக்கொண்ட பாவனையாய் கையால் தொட்டுத் திருப்பினார்கள். அதன்மேல் அந்த ராணி, "சக்ரவர்த்தினி பெருமாட்டியை நேரிற்கண்டு சம்பாஷிக்கும்படியாய் இன்று நான் அடைந்துள்ள மகோன்னதப் பதவியையும் பெருமையையும் குறிக்கும் ஞாபகார்த்தமாய் இத்தொகையை தருமத்துக்குக் கொடுத்துவிடப் பிரியப்படுகிறேன்" என்று சொன்னார்கள்.—சுதேசமித்திரன்.

## DEPARTMENTAL NOTES.

## பகுதிக் குறிப்புகள்.

### AGRICULTURAL NOTES.

### விவஸாயக் குறிப்புகள்.

CATTLE SHOW.

**மாடுகளைச் சேகரித்தல்.**—மைசூர் நாட்டைச் சார்ந்த ஹாஸன் டிஸ்ட்ரிக்ட்டில் வருகிற ஜனவரி மீ 4,5-ந்தேதிகளில் அநேக வலுவுள்ளமாடுகள் சேகரிக்கப்படும் காட்சி யேற்பாடாயிருக்கிறது.

URINE AS MANURE.

**மூத்திர எரு.**—எருது, மாடு, ஆடுமுதலியவை களின் மூத்திரம் பயிர்பூண்டுகளுக்கு பிராணதார மான ஆகாரம். அதில் நைட்ரோஜன் நிறைந்திருக் கிறது. "ஆடுமிதிக்காமல் நாடுவிளைவதில்லை," என்றும், "ஆடுமிதியாத பூமியும், ஆண்பிள்ளையா ளாத பெண்டிரும் உதவாக்கருவிகள்" என்று சொல் லுவார்கள்.

A COW'S RATION.

**ஒரு பசுவின் ஆகாரம்.**—1000 ராத்தல் எடை யுள்ள பசு ஒன்று நாள் ஒன்றுக்கு 100 ராத்தல் தீவ னம் தின்று ஜலம் குடிக்கும். பசுந்தீவனமானல் ஜலம் வேண்டியதில்லை. அதன் தீவனத்தில் 75 ராத்தல் ஜலமும் 25 ராத்தல் உலர்ந்த உணவும் இருக்கும். இதில் 10 ராத்தல் ஜீரணிக்கமுடியாத நார் இருக்கும். 12 ராத்தல் மாவு சர்க்கரை முதலி யன இருக்கும். $2\frac{1}{2}$ ராத்தல் சிநனம், $\frac{1}{2}$ ராத்தல் தைலமிருக்கும்.

GROWTH OF WEEDS.

**களை முளைத்தல்.**—களை முளையாமலிருக்கச் செய் யவேண்டிய காரியங்கள்.

1. ஆடுமாடு உடம்புகளில் களைவிதை ஒட்டிவரா மல் பரீட்சிக்க வேண்டும்.

2. முளைத்த களை, பூக்கொள்ளும்போதே அதை வெட்டிவிடவேண்டும்.

3. கிழங்குள்ள சிலகளைகளை வேரோடு அறுத் துவிடவேண்டும்.

4. கோரைக்களை சீக்கிரத்தில் மடியாது. அதை அடிக்கடி வெட்டிக்கொண்டுவந்து மண்ணோடு மண் ணுய் மடித்து விடவேண்டும்.

5. களை முளைத்திருப்பது கொஞ்சமாயிருந்தால் பாஷாணம் தெளிக்கலாம். ஆனல் ஆடுமாடு மேயக் கூடாது.

RICE PESTS.

**நெற்பயிரில் வண்டுகள்.**—நெற்பயிர்களை சில ஸமயங்களில் வண்டுகள் சேதம்செய்வதை நாம் அறிந்திருக்கிறோம். இவைகள் இலைகளையும் சாப் பிட்டுத் தானியத்தையும் பாழ்செய்கின்றன. வண் டுகள் அடிக்கும் வயல்களில் பின்வருமாறு செய்ய வேண்டும்:

1. பயிர் தண்ணீரில் முழுகியிருந்தால் தண் ணீரை வெளியிலே பாய்ச்சிவிடு.

2. வண்டுகள் அதிகமாயிருந்தால் ஒரு சாக்கை எடுத்துப் பயிரின்மேலாகக் கொண்டுபோனல் பூச்சிகளைப் பிடித்துவிடலாம்.

3. தாரை எரித்தால் அதன் நாற்றத்தினுல் பூச் சிகள் விலகிவிடும்.

4. குப்பை கூளங்களைப் போட்டுக் கொளுத்தி னுலும் பூச்சிகள் விலகிவிடும். சுற்றுப்புறத்திலிருக் கும் புல்பூண்டுகளை அடியோடு பிடுங்கி எறிந்துவிட வேண்டும்.

CATTLE REARING.

**மாடுகளை வளர்த்தல்.**—பசுக்கள், காளைகள், எரு மைகள், இவைகளை வெவ்வேருய் மேய்க்கவேண்டும். கன்றுகளை ஸமீபமாயுள்ள காடுகளில் விட்டு மேய்க்க வேண்டும். சினைப்பசுக்களை மேய்ச்சல் காடுகளில் மேய்த்துவந்த பின் மேற்கூறையுள்ள தொழுவில் ராக்காலங்களில் விட்டுவைக்க வேண்டும். காளைக் கன்றுகளைக்கட்டியே வைத்து வளர்த்து வரவே ணும். சிறு வயசு முதல் இவ்விதம் கையாடி அன் பாய் வளர்க்கப்பட்டு வந்தால் அவைகள்ரொம்பவும் ஸாதுவாய்ப் போகும். காளைகளைக்கட்டாமல் விட்டு விடுகிறதினுல் துர்க்குணமுள்ளவை யாகின்றன. லம்பாடி மாடுகளை மேய்ந்து வந்ததின்பின் கட்டி வைத்து வளர்த்து வருகிறதினுல் அவைகள் சாந்த மாயிருக்கின்றன. சாந்தமாகிறதற்காகக் காளைகளை விதையடிக்கிறார்கள்.

THE MANGO TREE.

மாமரம்.—"கொட்டைபோட்டு வளர்த்த மரங்கள் ஐந்து வருஷமானாலும் பெயர்த்து வைக்கலாமென்று பரீக்ஷையில் தெரிகிறது. துளிர் விடாததற்கு முன்னமே மாங்களின் கிளைப்பிரிவுக்கு $2\frac{1}{2}$ அடி அப்பால் வெட்டி நட்டார்கள். சில மரங்கள் வேருடன் பிடுங்கப்பட்டு நடப்பட்டன. சில மரங்கள் வேறின் மண்ணோடு கட்டியாய்ப் பெயர்த்து உடனே நடப்பட்டன. சில மரங்கள் 15 நாளைக்கு முன்னதாகவே பக்கங்களில் சுற்றிலும் தோண்டி வேரின் காயங்களை ஆற்றி பிடுங்கி நடப்பட்டன. வேறு சில மரங்கள் மூன்றாவது மாதிரியே செய்து பிடுங்குகிற அடி வேர்களை ஒன்று இரண்டு மணி நேரம் காற்றுறவிட்டு நடப்பட்டன. எல்லா மரங்களும் வேர்பிடித்துத் தழைத்தன.

மிஸ்டர் இ. வி. ஸ்மித் என்பவர் காய்க்கும் மரத்தையும் இவ்வாறே ஒட்ட தறித்து துளிர் பிடியாததற்கு முன்னமே நட்டதில் வேர் பிடித்து அவ்வருஷம் பழம் நஷ்டமில்லாமல் கிடைத்ததென்று தெரிவிக்கிறார்."—தென்னிந்தியா விவஸாயம்.

SEED SELECTION.

விதை பொறுக்குதல்.—சுதேச மித்திரனில் ஒரு நிரூபர் அடியில் கண்டபடி செய்து விதைபொறுக்கச் சொல்லுகிறார் :—

மாசூல் அறுவடை யாகுமுன்னே, செழுமையாக வளர்ந்து கதிர் வாங்கியிருக்கும் 4, அல்லது 5 வயல்களைக் குறிப்பிட்டு, அந்த நாலைந்து வயல்களில் இருக்கிற கதிர்களுக்குள்ளெல்லாம் கொழுமையாய்ச் செழித்திருக்கும் 4, அல்லது 5 கதிர்களை அறுத்துக்கொண்டுவா. இக்கதிர்களைத் தேர்ந்தெடுப்பது எப்படியெனில் கதிர்கள் நீண்டவையாயும் அகலமாயும், நெற்கள் மணி மணியாயும் உள்ளனவாயிருக்கவேண்டும். 4 அல்லது 5 சிறிய ஓலைப்பெட்டிகள் தயார் செய்து ஒவ்வொரு பெட்டியில் போட்டுக் குறிப்பிட்டு ஒன்றோடு ஒன்று கலக்காமல் ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள். எந்த வயல்களில் நடப்போகிறோமோ அந்த வயல்களிலேயே கொஞ்ச பாகம் ஒரு மூலையில் ஒதுக்கி, அதில் தனித் தனியாய்ப் பிரித்து ஓலைப் பெட்டியி லிருக்கும் கதிர்களை (5 கதிர்கள்) தெளி ; எந்த எருவை வயல்களுக்கு உபயோகிக்கபோகிறாயோ அதையே இம்மூலைகளிலும் பரப்பு; ஜலத்தைவிட்டுக் கட்டி பின்பு வெளியே பாய்ச்சிவிடு. விதையை இம்மாதிரி தெளித்து 5 நாள் முதல் 7 நாள் வரையிலும் சும்மா இருந்துவிடு. ஆனால் மாடு முதலியன விதைப்பாத்தியை அழிக்காமல் பாதுகாத்துக்கொள்ளவேண்டும். ஒரு வாரத்திற்குப் பிறகு வளர்ந்திருக்கும் நாற்றுகளைத் தனித்தனியாய்ப் பிடுங்கி மண்ணில்லாமல் நன்றாய்க்கழுவிவிடவேண்டும். இப்பொழுது எந்த நாற்று செழுமையாய் வளர்ந்து நிரம்ப வேரோடி யிருக்கிறதோ அந்த நாற்றின் கதிரைக் குறிப்பிட்டு அக்கதிர் எந்த வயலி லிருந்துகொண்டு வரப்பட்டதோ அவ்வயலின் நெல்லையே இவ்வயலுக்கு விதையாக உபயோகப்படுத்தவேண்டும். ஒவ்வொரு வருஷமும் இம்மாதிரி செய்யவேண்டியதில்லை. ஒரு வருஷம் செய்தால், இம்மாசூலிலிருந்து அடுத்த வருஷத்துக்கு நல்ல விதை எடுக்கலாம்.

MILKING.

பால் கறத்தல்—தலையீத்து மாடுகளுக்கு முலைக்காம்பில் கூச்சம் அதிகமுண்டு. அப்போது சில வேளை பசுவை தட்டிக்கொடுக்கவேண்டுமே யொழிய அடிக்கக்கூடாது.

பால் கறக்கும்போது பாலில் விரலை நனைத்து முலைக்காம்பை உருவுவது பெரிய பிசகு. பால் கறப்பவனும் பாத்திரங்களும் வெகு சுத்தமாயிருப்பதே பால் கெடாமல் இருப்பதற்கு ஓர் முக்கிய காரணம்.

பால் கறக்குமிடத்தில் யாதொரு துர்வாஸனையும் இருக்கப்படாது. பாலுக்கு வாஸனை கிரகிக்கும் குணம் விசேஷம். ஆகையால் பசுமாடுகளை கொட்டாய்களில் கறக்கப்படாதென்று பால் கறப்பதற்கு சுத்தமான வேறே இடங்களை ஏற்படுத்துகிறார்கள். வெளிச்சத்தில் கறப்பது பாலுக்கு நல்லது. குளிர் நாளில் இருட்டறைகளில் கறக்கவேண்டுமானால் விளக்குவைத்துக் கறக்கும்படி ஐரோப்பியர் தெரிவிக்கிறார்கள். ஸாதாரணமாய் காலை மாலை இரண்டு வேளைகளிலும் பால் கறப்பதுண்டு. தினந்தோறும் ஒரேநேரத்தில் கறக்கவேண்டும். காலம் மாறிக் கறக்கக்கூடாது. பால் கறப்பவன் ஒருவனாகவே இருப்பது உத்தமம். கை மாறுவதால்பால் குறைவது மாடுவைத்திருப்பவருக்கு தெரிந்தவிஷயம். மேலே கூறப்பட்ட விதிகளையனுசரிப்பதினால் மாடுகள் அதிக பால் கொடுப்பதுடன் அவைகளுக்கு நாளடைவில் பால் சுரக்கும் குணம் விருத்தியடையுமென்றும் தேகத்திற்கு ஆரோக்கியமானபால் உண்டாகுமென்றும் தெரிகிறது.

## INDUSTRIAL NOTES.

## கைத்தொழில் குறிப்புகள்.

GERMAN SILVER.

ஜெர்மன் வெள்ளி.—நல்லசெம்பு 50 ராத்தல், துத்த நாகம் 20 ராத்தல், சுத்திசெய்த வெள்ளிப் பித்தளை 10 ராத்தல் இம்மூன்றையுஞ்சேர்த்து உருக்கினால் ஜெர்மன் வெள்ளியாகும்.

A NEW PAPER INDUSTRY IN RANGOON.

ரங்கூனில் புதிதாக ஓர் காகிதத் தொழில்.—கல்கத்தாவிலுள்ள டபள்யூ ஹில்ஜாஸ் அண்டு கம்பெனியார் ரங்கூனில் மூங்கிலிலிருந்து காகிதம் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார்களாம். கவர்ன்மெண்டாரும் உதவி புரிவார்கள். கூடிய சீக்கிரத்தில் ஒருபெரிய காகிதசாலையாய் விடுமாம்.

ESSENCE OF MAHUA FLOWER.

இலுப்பைபூ தைலம்.—"நமது நாட்டில் இலுப்பை மரங்கள் ஏராளமாய் இருக்கின்றன. அதன் புஷ்பம் இனிப்பாயும் தலைநோயுண்டாக்கும் வாஸனையுமுள்ளது. புஷ்பம் அநேகமாய் உதவாமல் பாழாய்ப் போவதுண்டு. பன்றிகளும் கோழிகளும் ஆடுகளும் இதைத்தின்பதுண்டு. இப்புஷ்பத்தில் தைலமிருப்பதாகத் தெரிகிறது.

புஷ்பத்தை மூன்று நாள் உலர்த்தினால் அதிலிருக்கும் நாற்றம் ஒழிந்துபோய் வற்றல் நல்ல வாஸனையாயிருக்கும். புஷ்பம் உலர்ந்ததும் மூன்றிலொரு பாகம் ஆகிறது. 3 ராத்தல் உலர்ந்த புஷ்பத்திலிருந்து ½ ராத்தல் தைலம் கிடைக்கிறது. இப்புஷ்பத்தை வாலியில்போட்டு நீரால் மூடி காய்ச்ச பட்டியில் (பாத்திரத்தில் நீரும் தைலமும் கலந்து இருக்கும். தைலம் லேசானதால் மிதக்கும். தைலம் அதிக வாசனையாயிருக்கும். இத்தைலம் தலைக்கு பூச உதவும். மயிர் நன்றாய் வளர்கிறது. ஆரோக்கியமுண்டாக்குகிறது, தலைக்குத்தேய்த்து முழுக ஆரோக்கியமாய் இருக்கிறது. இவ்வெண்ணெய் ஸோப்செய்யவும் உதவும். எண்ணெய் கிராக்கியாகும் இக்காலத்தில் இது உபயோகிக்கத்தக்கதே. இதனால் கெடுதி ஒன்றுமில்லை. இந்த வியாபாரம்செய்வதில் தேசத்துக்கும் உழைக்கிறவனுக்கும் லாபமே. சிறு முதல் வைத்தே மண் பட்டியில் காய்ச்சி தைலமெடுக்கலாம். புஷ்பங்களை ஒன்று சேர்த்து வேலை ஆரம்பிப்பது லாபகரம். இது தென்னிந்தியாமுழுவதும் செய்யக்கூடிய தொழில்."
—தென்னிந்தியா விவஸாயம்.

PEARL PRODUCTION.

முத்துவளர்த்தல்.—பூர்ண சந்திரோதயத்தில் ப. நா. எழுதுகிறார்.

மிகிமோடாவென்ற ஜப்பானியார் ஒருவர் முத்துக்களை உண்டுபண்ணும் முயற்சியில் பலன் பெற்றிருக்கிறார். முத்துச்சிப்பியின் முட்டைகள் ஏராளமாய் அகப்படக்கூடிய விடங்களில் சிறு கற்களைப் போடுவதால் முட்டையிடும் பூச்சிகள் அக்கற்களின் மேல் கருக்களை வைக்கின்றன. பெரும்பாலும் இவ்விதம் முட்டை வைக்கின்றதானது ஆழமில்லாத சமுத்திரத்தில் அதேயிடத்திலிருக்கும் பக்ஷத்தில் குளிர்காலம் வரும்போது அக்கருக்கள் மரணமாக ஹேதுவாகின்றன. இச்சம்பவத்தை நீக்கும்பொருட்டு கருக்களமைந்த கற்களை எடுத்து ஏற்கனவே ஆயத்தம்செய்யப்பட்டிருக்கின்றசமுத்திரத்தில் ஆழமான இடத்தில் அவைகள் வைக்கப்படுகின்றன. அவ்விடத்தில் அவைகள் தங்கிக்கருமலர்ந்து பூச்சிப் பருவத்தையடைந்து அபிவிருத்தியாகும்படி அவைகள் அவ்விதம் வைக்கப்படுகின்றன. பின்புஅவைகள் எடுக்கப்பட்டு அந்த ஒவ்வொரு பூச்சிக்குள் முத்துச்சிப்பியின் ஒரோர் சிறுதுண்டு புகட்டப்படுகின்றது. பின்பு அந்தச்சிறு துண்டைச்சுற்றி இனி முத்தாகக்கூடிய திரவியம் அமைகிறது. இதுவே பின்பு முத்தாகஆகிறது. இம்முத்து உண்டுபண்ணும் தொழிலை ஜப்பான் தேசத்தில் ஸ்திரீகள் நடத்துகின்றார்கள். அவர்கள் சமுத்திரத்தில் குளித்துக் கருக்களமைந்த கற்களை எடுத்தும் அவைகளுக்குவேண்டிய சிகிச்சைகளை முத்தாகப் பரிணமிக்கிறவரையில் செய்தும் வருகிறார்கள். புருஷரை விட ஸ்திரீகள் சுவாஸ பந்தம் அதிககாலம் செய்ய சாமர்த்தியம் உள்ளவர்களாகத்தெரிகிறது. அதனால் ஜலத்தில் அதிககாலம் மூச்சைப்பிடித்துத் தங்குகிறார்கள். இதற்குக்காரணத்தை அடியில் வருமாறு விநோதமாக ஒருவர் வினவுகிறார். ஸ்திரீகள் அதிகப் பேச்சுக்காரிகளானதால் கும்பகம் செய்யும் சக்தி அதிகமாக உண்டாகின்றதோ? அல்லது புருஷர்கள் பலவாறாக மனம் நோகும்படி ஸ்திரீகளை வைதலும் ஹிம்ஸித்தலும் காரணமாக ஸ்திரீகள் மனச்சாந்தமும், பொறுமையும் பெற்று அதனால் கும்பகம் செய்யும் சக்தி அதிகரிக்கின்றதோ? எவ்விதமாயினும் ஸரி, ஸ்திரீகளின் சக்தி முத்துக்கள் அதிகமாயுண்டுபண்ணுவதில் உதவுகின்றது.

## EDUCATIONAL NOTES.
## வித்யாவிஷயக் குறிப்புகள்.

THE UNIVERSITY CONVOCATION.

**யூனிவர்ஸிடி கான்வோகேஷன்**—சென்னை ஸர்வ கலாசாலை பரீட்சைகளில் தேறினவர்களுக்குப் பட்ட மளிக்கும்சடங்காகிய கான்வோகேஷன் போன மாஸத்தில்நடந்தது. பட்டம்பெற்றவர்களில் 818 பேர்கள் இருந்தார்கள்; இவர்களில் எட்டுஸ்திரீகள் இருந்தார்கள். இந்த எட்டு ஸ்திரீகளில் சுப்பலக்ஷிமி என்ற ஒரு பிராமண ஸ்திரீயும் இருந்தார். இந்த ஸ்திரீகளில், 2பேர் எல். டி. அதாவது உபாத்தியாயர் தொழிலுக்கான பட்டமும், ஒருவர் எல். எம். எஸ். அதாவது வைத்தியத்துக்கான பட்டமும், 5 பேர் பி. எ. பட்டமும் பெற்றார்கள். பாக்கிப் பேர்களில் எம். எல். பட்டம் பெற்றவர் ஒருவர். பி.எல். பட்டம் பெற்றவர் 81; எல்.டி. 11; எம்.டி. 1; எம். பி. அண்ட் ஸி. எம். 2; எல். எம். எஸ். 11, பி. இ. 7. அதாவது இஞ்சினீர் உத்தியோகத்துக்கான பட்டம் பெற்றவர் 75 எம். ஏ. 22; பி. ஏ. 639; பாக்கிப்பேர்கள் வரவில்லை. பட்டங் கொடுத்த பிறகு, ஆனரபில் வி. கிருஷ்ணசாமி அய்யர், யூனிவர்ஸிடி வழக்கப்படி, பட்டம் பெற்றவர்களைப் பார்த்து அவர்களுடைய ஒழுக்க விஷயமாயும், பொதுக்கல்வி விஷயமாயும் ப்ரஸங்கம் செய்தார்.

EDUCATION OF CONVICTS.

**கைதிகளுக்குப் படிப்பு**—நீண்ட காலம் தண்டிக்கப்பட்ட கைதிகளுக்கு, தஞ்சாவூரில் சிறு குற்றவாளிகளுக்கு படிப்புச் சொல்லிவைக்கிறமாதிரி, மற்ற ஜெயில்களிலும் சொல்லி வைக்க, கவர்ன்மெண்டார் ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அதை முதலில் பரீக்ஷார்த்தமாக சென்னை, ராஜமஹேந்திரம், கண்ணனூர் ஸெண்ட்ரல் ஜெயில்களில் சொல்லிவைக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். 30 வயதுக்கு மேற்படாத கைதிகளில் யார்படிக்க இஷ்டப்படுகிறார்களோ அவர்கள் படிக்கலாம். படிக்கிறவர்களுக்கு இரண்டு வகுப்புகள் உண்டு. ஏற்கனவே எழுதப்படிக்கத் தெரிந்தவர்களுக்கு ஒரு வகுப்பும் தெரியாதவர்களுக்கு ஒரு வகுப்புமாம். எல்லாருக்கும் எழுதப் படிக்கவும் கணக்குப் போடவும் மட்டும் சொல்லிக்கொடுக்கப்படும். இதற்கு வேலை செய்யவேண்டிய காலத்தில் ஒரு மணிதள்ளிக்கொடுக்கப்படும். படிப்புவராதென்று தோன்றும் பட்சத்தில் அந்தக்கைதிக்கு இப்படிப்பட்ட வஸதி கொடுக்கப்படமாட்டாது. உபாத்தியாயர்கள் படித்த கைதிகளிலிருந்து தெரிந்தெடுக்கப்படுவார்கள். வேண்டுமானால் ரூ 20ல் ஒரு ஹெட்மாஸ்டரும் நியமிக்கப்படுவார். லைப்ரெரியில், கொரான், கீதை, பைபில் முதலிய ஸத் விஷயங்களடங்கிய புஸ்தகங்கள் வைக்கப்படும். அவைகளைக் கைதிகள் படிக்கவும் வஸதிகள் கொடுக்கப்படும்.

THE RESPONSIBILITY OF THE TEACHER.

**வாத்தியார் ஜவாப்தாரி.**—இங்கிலாந்தில் சிறுவர் பள்ளிக்கூட மொன்றை ரிபேர் செய்வதற்காகப் பள்ளிக்கூடக் கட்டிடத்தின் வெளிப்புறத்தில் கண்ட்ராக்டர் சுண்ணும்பும் மணலும், குவியலாகக் கொட்டியிருந்தார். இந்தக் குவியலைப் பார்த்தால் சிறுபிள்ளைகள் துஷ்டத்தனம் செய்வார்களென்று ஹெட்மாஸ்டர் நினைத்து, அதை வேறிடத்தில் கொண்டுபோய்க் கொட்டி வைக்கும்படி சொல்லியும் கண்ட்ராக்டர் பாராமுகமா யிருந்துவிட்டார். ஸ்கூல் விட்டவுடன் பையன்கள் வெளியே வந்து ஒருவர் மேலொருவர் மண்ணையும் சுண்ணும்பையும் கைகையால்அள்ளி வீசி நிர்த்தூளி செய்ததில் வழிப்போக்கர் ஒருவர் மேற்பட்டு சேதமுண்டாயிற்று. இவ்வழிப்போக்கர் வாத்தியார்மேல் நஷ்ட ஈட்டுக்காக வியாஜ்யம் செய்து, ஜயம் பெற்றதாகத் தெரிகிறது. இவ்வளவு தொகை நஷ்ட ஈடாகக் கொடுக்கப்பட்டதென்று தெரியவில்லை. இப்பள்ளிக்கூடம் ஊரார் பொதுவரித்தொகையில் நிர்வகிக்கப்படுவதாகையால் வாத்தியார் மேல் தீர்ப்பான தொகை இந்த வரித்தொகையிலிருந்தே கொடுக்கப்படும். பிரஸ்தாப கேஸில் வாத்தியாரின் பொறுப்பு இன்னதாகுமென்று வியக்தமாக எடுத்துச் சொல்லப்பட்டது. தகப்பன் குழந்தைகளை எவ்வளவு ஜாக்கிரதையாய்ப் பார்ப்பானோ, அவ்வளவு ஜாக்கிரதையாய் வாத்தியார் பிள்ளைகளைப் பார்க்கவேண்டும். பிள்ளைகளின் ஸாதாரண ஸ்பாவத்தை யறிந்து, துஷ்டச்செயல்கள் செய்வது அவர்களுக்கு இயற்கை யென்றும், அவர்கள் ஏது கண்ணிற்பட்டாலும் அதைத் தீண்டி விஷமம் செய்வார்களென்றும் மனதிற் கொண்டு, அதற்கொத்தபடி முன் எச்சரிக்கையுடன் வாத்தியார்கள் நடக்கவேண்டும். சுண்ணும்பு மணலை எடுக்கச் சொன்ன மாத்திரத்தில் வாத்தியார் பொறுப்பு தீர்ந்துவிடவில்லை. அதை அவர் எடுப்பித்தே யிருக்கவேண்டும்.

# SCIENTIFIC NOTES.
# சாஸ்திரீயக் குறிப்புகள்.

## A WATER FINDER.

**ஒரு ஜலம் கண்டுபிடிக்கும் கருவி.**—ஓர் குறித்த இடத்தில் பூமிக்குள்ஜலம் இருக்கிறதா இல்லையா என்று சாஸ்திர யுக்தமாய்த் தெரிந்துகொள்ள டீனர்ட்டு என்னும் ப்ரான்ஸ் சாஸ்திரியொருவர் ஓர் நூதன கருவியைக் கண்டுபிடித்திருக்கிறார். சிறிய பொருளைப் பெரிதாய்க் காட்டுகிற பூதக் கண்ணாடி போல, சிறுசப்தத்தை உரத்த சப்தமாய்க் கேட்கச் செய்யும் 'மைக்ரோபோன்' என்னும் கருவியிலிருந்து வரும் ஒரு சிறு ரப்பர் குழாயைப் பூமிக்குள் சொருகிவைத்தால் அதன் மூலமாய் பூமிக்குள் மிக ஆழத்தில் ஓடும் தண்ணீரின் சத்தம் கேட்கிறது. கிணறு, குளம், 'ஆர்ட்டிசீயன் வெல்' என்னும் பாதாளசுனை யூற்றுக் கிணறு முதலியவைகளைத் தோண்டுபவர் களுக்கு இந்தக் கருவி மெத்தப் பிரயோசனமானதே.

## EARTH WORMS.

**மண்ணுண்ணிப் பூச்சிகள்**—.மண்புழுக்கள் மண்ணையே தின்று ஜீவிக்கிற விசேஷத்தை நம்மவர்கள் முன்னமேயே கண்டறிந்திருக்கிறார்கள் என்பதற்கு மண் உண்பூச்சியென்ற பெயரே அத்தாட்சியாக இருக்கிறது. மண்ணைப் பிராணி எப்படி உண்ணும் என்று நாம் ஸந்தேகிக்கலாம். மண்ணோடு கலந்து அநேக செடிவஸ்துவும் பிராணி வஸ்துவும் அழுகி நிலை குலைந்து ஒருவித ரஸ பதார்த்த நிலைமையிலிருக்கின்றன. அவ்வித ரஸ பதார்த்தத்தை உட்கொள்ளும் பொருட்டு மண்ணை இப்புழுக்கள் உட்கொள்ளுகின்றன. உபயோகமுள்ள பதார்த்தத்தை தேகத்துக்கு உணவாக எடுத்துக்கொண்டு தங்களுக்கு உபயோகமில்லாத மண்ணைக் கழிவு பதார்த்தத்துடன் மலமாகவிலக்குகின்றன. இப்படி மண்புழுக்கள் செய்யும் செய்கை நிலத்துக்கு உழுது உரம் வைத்ததுபோல் ஆகிறது. மேல்மண் கீழ்மண்ணாகப் புரளவும், இப்பிராணிகளின் கழிவு பதார்த்தங்களோடு சேர்ந்தமண்ணே உரமாகவும் ஏற்படுகிறது. இவ்விஷயத்தைடார்வின் என்ற உயிர் நூல் நிபுணர் விஸ்தாரமாக ஒரு புஸ்தகத்தில் கண்டு பிடித்தெழுதியிருக்கிறார்.

## WORMS AND DISEASE.

**புழுக்களும் வியாதியும்.**—விவேகபோதினியில் ஒரு நிருபர் எழுதுகிறார்.—புழுக்கள் கருத்தரித்தால் முட்டையிடுகின்றனவா, குட்டி போடுகின்றனவா என்ற விபரம் நமக்குத் தெரிய வேண்டியது அவசியம். பெரும்பாலும் இவைகள் முட்டைகள்தானிடுகின்றன. நாக்குப் பூச்சி இனத்தைச்சேர்ந்த சிலபுழுக்களை வயிறுநிறைய குஞ்சுகள் நெளியநிற்கும் நிலைமையில் நான் பரிசோதித்திருக்கிறேன். அவைகளே குட்டிபோடும் இனம். வியாதிகளுக்குக் காரணபூதமாக இருக்கும் நரம்புச் சிலந்தியோ, நாடாப்புழுவோ, இவைகள் மலத்தின் மூலமாகத் தம் முட்டைகளைக் கடத்திவிட அவைகள் ஜலத்தின்மூலமாகவோ, அஜ்ஜலத்தைப் பருகும் ஆடு, கோழி போன்ற பிராணிகள் மாமிசத்தின் மூலமாகவோ, மறுபடி மனுஷ தேகத்தையே அடைகின்றன. ஆகையால் நாம் குடிக்கும் ஜலமும் சாப்பிடும் உணவும் சுத்தமாக இருப்பதுடன் நன்றாகச் காய்ச்சிக் கொதிக்க வைத்ததாக இருக்க வேண்டுமென்பது அவசியமாக இருக்கிறது.

## THE SIZE OF THE BODY AND THE INTESTINES.

**உடலளவும் குடலளவும்.**—மனிதர்கள் ஒவ்வொருவரும் அவரவர் கையால் எண்சாணுயரம் உடையவர். உடற்பருமன் எவ்வளவென்றால், தத்தங்கையால் நாலுசாணேயாம், இனி, குடலளவு என்னவென்றால் உடலளவால் வந்த உயரச்சாண் எட்டுக்கும் பருமச்சாண் நாலுக்குமாகப் பெருக்கினல் வந்த முப்பத்திரண்டு சாணேயாம். இம்முப்பத்திரண்டும் அவரவர் கைச்சாணளவே. இக்குடலளவை "முப்பானிரண்டு முழக்குடல்" என்னும் 'மனேபோதை' 32-வது செய்யுளாலறிக. இனி, குடலளவு எவ்வளவோ அவ்வளவே உண்டியளவும் கொள்ளவேண்டும். வயிற்றில் முப்பத்திரண்டு முழக்குடல் அமையப்பெற்றிருப்பதால் ஆகாரமும் 32 பிடியாகும். அப்படிக்கொள்ளும் ஆகாரமும் சாதம், கறி, நீர், ஆக மூன்றும் உட்படவேயாம். பிடியளவும் அவரவருடைய கையினளவே. இப்படி எவனொருவன் தன் கரத்தால் 32-பிடி ஆகாரம் உட்கொள்ளுகிறானே அவன் ஒரு நாளும் பிணிக்கு ஆளாகமாட்டான். அமுதங்கிடைத்தாலும் 32-பிடிக்குமேல் அணுவளவும் புசிக்கலாகாது.

## MEDICAL NOTES.
## வைத்தியக் குறிப்புகள்.

---

CHIRETTA.

நில வேப்பு.—இதை கஷாயம்போட்டு சாப்பிட்டால் ஸகல வித பித்தம், ஊதுகாமாலே, மஞ்சட்காமாலே முதலிய ஈரலேப்பற்றிய வியாதிகளும் குணமாகும். நல்ல பசி உண்டாகும்.

GUINEA WORM.

நரம்புச் சிலந்தி.—திண்டிவனம் உலக்கூர் முதலிய ஊர்களில் நரம்புச்சிலந்தி நோய் மிகுதியாக இருக்கிறது. திண்டிவனத்தில் மாத்திரம் 500-பேருக்கு மேற்பட்டவர்கள் ஷை நோயால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் அசுத்த ஜலத்தை உபயோகப்படுத்துவதே யாம்.

BEE STING FOR RHEUMATISM.

வாதக்கட்டுக்கு தேனீக்கொட்டு.—வாதக்கட்டுக்கு தேனீக்கொட்டு கைகண்ட வைத்தியம் என்று பரீக்ஷித்துக் கண்டிருக்கிறார்கள். 10 வருஷம் 15-வருஷங்கள் வாதக்கட்டினல் வருந்தினவர்களெல்லாம் தேனீக்கொட்டினல் குணப்பட்டுத் தேறியிருக்கிறார்களென்றும், அதற்காகச் சில வைத்தியர்கள் தேனீக்களே வளர்த்து வருகிறார்களென்றும் தெரிகிறது.

THE MOSQUITO TROUBLE.

கொசுவின் தொந்தரவு.—முறைஜுரம் வருவதற்கும் ராத்தூக்கம் கெடுவதற்கும் கொசுவே முக்கிய காரணம். கொசு கடிக்காதபடி வலேத்துணிகளே ஜன்னல்களிலும் கதவுகளிலும் கட்டிலேச் சுற்றியும் கட்டுவது ஸாதாரணம். திண்டுக்கல்லுக்கு அடுத்த ஸ்டேஷனில் தும்பையிலேயைக் கசக்கி ரஸம் பிழிந்து தேகத்தின்மேல் பூச கொசு கடிப்பதில்லேயாம். வீட்டுக்கூரையில் ஒட்டியிருக்கும் கொசுக்களே சில ஐரோப்பியர் கிண்ணத்தில் கிரோவின் எண்ணெய்விட்டு அதற்கடியில் தூக்க அவைகள் விழுந்து மடிகின்றனவாம். பாழுங்குளம் முதலிய இடங்களில் 15 சதுர அடிக்கு ஒரு அவுன்ஸ் கிரோவின் ஊற்ற அது பாவி அனேக கொசு புழுக்களேக் கொல்லும். கொசுவும் முட்டை இடுவதில்லே.

மீனில்லாத குளமாயிருந்தால் அதில் மீனே வளர்த்தால் இப்புழு வெகு சீக்கிரத்தில் அற்றுப்போகிறது. ஷை குளங்களில் கிரோவின் எண்ணெய்யைப் பரவலாய் தெளிப்பது உத்தமம்.

DOGS AS PLAGUE PREVENTERS.

நாய்களால் பிளேக்நோய் பரவுதலேத் தடுக்கலாம்.—மைசூர் நிருபர் ஒருவர் இவ்விஷயமாய்த் தம்முடைய அனுபவத்தை "டெயிலி கிரானிகல்" என்ற பத்திரிகைக்கு எழுதியிருக்கிறார்.—

"பிளேக் அம்மை குத்திக்கொள்வதானது சில காலம் பிளேக்நோய் பீடிக்காமல் ஒருவரைப்பாதுகாக்கும். கவர்ன்மெண்டார் ஒரு வீட்டில் திடீரென எலிகள் மாண்டு போனல் அவ்வீட்டைக் காலி செய்ய உத்தரவு செய்து கூரையைப் பிரித்து விடுகிறார்கள். இப்படிச் செய்வதால் பிளேக் ஈக்கள் சூரிய உஷ்ணத்தில் இறந்துபோகுமென்பது அவர்களின் கருத்து. பிளேக் வியாதி பீடித்த எலிகள் காலி செய்யப்பட்ட வீட்டில் உணவு அகப்படாமல் அயல் வீட்டுக்குச் சென்று அதைத் தொத்துள்ள இடமாக்கி விடுகின்றன. பிளேக் ஈக்களேக் கொல்ல நாம் உபயோகிக்கும் விஷங்கள் மிக்கப் பயனுடையவையாயில்லே. ஈக்கள் இறக்க சிலமாதங்கள் ஆகின்றன.

"என்னுடைய பங்களாவிலும் வேறு வீடுகளிலும் 6 முறை எலிகள் இறந்துவீழ்ந்தன. நான் இறந்த எலிகள்மேல் மண்ணெண்ணெயை நிறைய ஊற்றி அவைகளே குறடுகொண்டு எடுத்துச்சென்று எரித்துவிட்டேன். 3,4 நாய்களே அந்த வீடுகளுக்குள் துரத்திச் சாயங்காலம்வரை அடைத்துவைத்தேன். பிறகு நாய்களின் மேல் பிளேக் ஈக்கள் ஒட்டிக்கொள்ளுகிறதால், இவைகளுக்குச் சதும்ப விளக்கெண்ணெய் பூசி கார்பாலிக் சோப்பு கொண்டு கழுவி விட்டேன். நாய்களுக்கு பிளேக் வியாதியுண்டாகவில்லே. ஈக்களின் சுவாஸக் குழாய் விளக்கெண்ணெயால் அடைபடுவதால் அவைகள் இறந்துபோகின்றன. மேலும் நான் அந்த வீடுகளில் எலிக்காக உணவுகளேப் பல இடங்களில் போட்டு கூண்டுகளே வைத்து அவைகளேப் பிடித்துக் கொன்று வந்தேன். நாய் பூனேயை விட அதிக எலிகளேப் பிடிக்கிறது. இப்படி எல்லாரும் செய்து பார்க்கலாம். எப்படியாவது பிளேக் வியாதியைத் தடுக்கவேண்டும்.

---

## LEGAL NOTES.
## சட்டக் குறிப்புகள்.

JUNIOR MEMBER OF A JOINT FAMILY

**அவிபக்த குடும்பத்தில் சின்னவர்.**—சேர்ந்த குடும்ப ஸொத்தை மானேஜிங் மெம்பர்போல கையாடும்படி விடப்பட்ட ஷை குடும்பத்தைச் சேர்ந்த ஒரு இளைய மெம்பர், குடும்ப அவசியச் செலவுகளுக்காகச் செய்த பராதீனம் மற்ற மெம்பர்களைக் கட்டுப்படுத்துமென்று தீர்மானிக்கப்பட்டது. இ. லா. ரி. 29 கல். 797.

ARBITRATOR'S AWARD.

**மத்தியஸ்தர்களின் தீர்ப்பு.** — மத்தியஸ்தர்கள் செய்த தீர்ப்பில் வெளிப்படையாகக் காணப்படும் பிசகுகளை கோர்ட்டார் ஸரிப்படுத்த மட்டிலும் கூடும் இப்படி பிசகுகளிருக்கிற தென்கிற காரணத்தை முன்னிட்டு அந்தத் தீர்ப்பையே ரத்துசெய்து, கேஸை விசாரணைசெய்து அந்த தீர்ப்பிற்கு பதிலாக தங்களுடைய தீர்ப்பையும், டிக்கிரியையும், ஈடுபடுத்தக்கூடாது. கக்ஷிக்காரர்களுக்குள்ளிருக்கும் எல்லா கக்ஷி வாதத்தையும் கோர்ட்டார் மத்தியஸ்தர்களுக்கு ரிபர் செய்யவேண்டுமேயொழிய சிற்சில கக்ஷிவாதங்களை மட்டிலும் ரிபர் செய்யக் கூடாது.

DEDICATION OF A MINOR.

**மைனருக்குப் பொட்டுக்கட்டி விட்டது**— சென்னையில் வஸித்து வரும் ராஜம் என்னும் பெயருடைய ஒரு கோவில் தாசி 1905-ம் வருஷம் தன் சகோதரன் புத்திரியை ஸ்வீகாரமாய் எடுத்து வளர்த்து வந்தாள். அந்தப் பெண்ணுக்கு வயது பத்து என்று ஸ்வீகாரபத்திரத்தில் கண்டு இருவரும் பத்திரத்தை ரிஜிஸ்டர் செய்துகொண்டார்கள். 1910ம் வருஷத்தில் சென்னையிலுள்ள அருணசலேஸ்வரர் கோவிலுக்குப்பொட்டு கட்டிவிட எண்ணி மேற்படி ஆலயத்தின் டிரஸ்டிகளிடம் ராஜம் என்பவள் ஒரு மெடிகல் ஸர்ட்டிபிகேட்டை தாக்கல் செய்தாள். அந்த ஸர்ட்டிபிகேட்டில் மேற்படி பெண்ணுக்குப் பதினேழு வயது என்று கண்டிருந்தது. ஆனால் 1905-ம் வருஷத்தில் மேற்படி பெண்ணுக்கு வயது பத்து என்று ஸ்வீகாரப்பத்திரத்தில் கண்டிருந்தபடியால் 1910-ம் வருஷத்தில் அவளுக்குப் பதினேழு வயது எவ்விதம் ஆகுமென்று ட்ரஸ்டிகள் ஸந்தேகித்து, ராஜம் தாக்கல் செய்த மெடிகல் ஸர்ட்டிபிகேட்டை அங்கீகரிக்காமல், சென்னையிலுள்ள சிறுவர் ஸம்ரட்சணை சங்கத்தின் கௌரவ காரியதரிசியான டாக்டர் விஜயராகவலுடன் கலந்து யோசித்தார்கள். மிஸ்டர் விஜயராகவலு இப்போது அப்பெண்ணுக்குப் பொட்டு கட்டுவதை ஒப்புக்கொள்ள முடியாதென்றும், இன்னும் ஒரு வருஷங்கழித்துக் கட்டலாமென்றும் நயமாக மேற்படி தாசிக்குக்கூறி, அவள் காட்டிய மெடிகல் ஸர்டிபிகேட்டையும் அவளிடமே கொடுத்து அவளை அனுப்பிவிட்டார். ராஜம் அத்துடன் சும்மா இராமல் மறுபடியும் ஒரு வைத்தியரிடம் சென்று மேற்படி பெண்ணுக்குப் பதினாறு வயது என்று ஒரு மெடிகல் ஸர்ட்டிபிகேட் வாங்கி 1910-ம் ௵ ஆகஸ்டு ௴ல் ஷை பெண்ணைக் காஞ்சிபுரத்திலுள்ள ஒரு சிறு கோவிலுக்குப் பொட்டுக்கட்டிக்கொடுத்துவிட்டாள். இந்தச்செய்தியை அறிந்த சிறுவர் ஸம்ரட்சணை சங்கத்தார் உண்மையைக் கண்டு பிடிக்க விரும்பி முனிஸிபல் ரிகார்டுகளைத் தேடிப்பார்த்தார்கள். அவ்விதம் பார்த்ததில் மேற்படி பெண் 1895-ல் வருஷம் அக்டோபர் மாதம் இரண்டாம் தேதி பிறந்ததாகத் தெரியவந்தது. பெண்ணுக்கு மைனர் வயது நீங்குவதற்கு முன்பு ராஜம் அப்பெண்ணைக் காஞ்சிபுரத்தில் பொட்டுக் கட்டிவிட்டது குற்றமென்று மேற்படி சங்கத்தார் கண்டு விஷயத்தை அதிகாரிகளுக்கு அறிவிக்கலானார்கள். இந்தியன் பினல் கோட் 372, 373-வது ஸெக்ஷன்படி ராஜத்தை ப்ராஸிகியூட்செய்து முதலில் செங்கற்பட்டு ஜாயிண்ட் மாஜிஸ்டிரேட்டால் கேஸ் விசாரிக்கப்பட்டது. அவர் அவளை விடுதலை செய்துவிட்டார். மேற்படி ஸங்கத்தார் பழையபடியும் கேஸை ஹைகோர்ட்டுக்குக் கொண்டு போனார்கள். மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்ஸன் கேஸை விசாரித்து ராஜத்துக்கு ஆறு மாதம் கடுங்காவல் தண்டனை விதித்தார். பொருளுக்கு ஆசைப்பட்டு தாசிகள் சிறுபெண்களை மைனர் நீங்குவதற்கு முன்பே கோவில்களில் பொட்டுக்கட்டிவிடுகிற வழக்கம் தென்ஜில்லாக்களில் அதிகமாக இருந்துவருகிறது. இப்படிப்பட்ட தாசிகளுக்கு இந்தக் கேஸ் ஒரு சற்போதனையாகும்.

## PERSONAL NOTES.

## மனுஷ்யர்களைப்பற்றிய குறிப்புகள்.

THE NEW NIZAM.

**புதிய நிஜாம்.**—புதிய நிஜாம் அரசர் தமது ஸமஸ்தானத்து மந்திரி மகாராஜா ஸர். கிருஷ்ண பிரசாத்துக்கு ஒரு லட்சம் ரூபாய் பெறுமான நகைகளை வெகுமதியாய்க் கொடுத்தார். அவைகளில் ஒரு முத்து ஆரம், வைரக்கல்வைத்து இழைத்த ஒரு சங்கிலி, இவையிரண்டும் மிகவும் விலையுயர்ந்த ஆபாணங்களாம்.

THE LATE MR PANDITHURAI THEVAR.

**ஸ்ரீமத்-பாண்டித்துரைத்தேவர் காலமாயினர்.**- பல்லவநத்தம் ஜமீன்தாரும் மதுரைச் செந்தமிழ்ச் சங்கத்து அதிபருபமாகிய ஸ்ரீமத் பாண்டித்துரைத் தேவர் இம்மாதம் 2ந் தேதி தேகவியோகமாயினர். இவர் தமிழ்க்கல்வியின் அபிவிர்த்தியின் பொருட்டுப் பேரூக்கங்கொண்டு உழைத்து வந்தவர். தமிழ்க் கல்விக்கும் மாணவர்களுக்கும், தமிழ்ப்பண்டிதர்களுக்கும் பேருபகாரஞ் செய்து வந்தவர். இவருக்கு வயது 45. இவர் இறந்தது தமிழ்ப் பாஷாபிவிர்த்திக்கும் பெருங்குறைவே. இவருடைய ஜீவிய சரித்திரத்தை அடுத்த ஸஞ்சிகையில் பிரசுரிப்போம்.

SIR SASSOON DAVID.

**ஸர் ஸாஸூன் டேவிட்.**—பம்பாயிலிருக்கும் இந்த யூத கனவான் பெரிய கோடீசுவரர். இவர், செய்த தர்மங்கள் பல. இவர் ஸமீபத்தில் 8,01,000 ரூபா கவர்ன்மெண்டார் வசம்விட்டு, அதைக்கொண்டு பம்பாய் மாகாணத்திலும் ஸிந்து மாகாணத்திலுமுள்ள விவஸாயிகளை முன்னுக்குக் கொண்டு வர வேண்டுமென்று சொல்லி யிருக்கிறார். இந்தத் தொகை சில ட்ரஸ்டிகளால் செலவழிக்கப்படும். அந்த ட்ரஸ்டிகளில் ரெவினியூ இலாகா கவர்ன்மெண்ட் ஸெக்ரிடெரியும், வித்தை இலாகா கவர்ன்மெண்டு ஸெக்ரிடெரியும், கவர்னரால் நியமிக்கப்பட்ட ஒரு மெம்பரும், ஸர் ஸாஸூன் டேவிட்டாலாவது, அவர் வம்சஸ்தர் அல்லது பிரதிநிதியர்லாவது, நியமிக்கப்பட்ட ஒரு மெம்பரும் இருப்பார்கள்.

இந்த திரவியத்தில் முழுமையுமாவது ஏக தேசமாவது விவஸாய விஷயமாகவும், கேவலமாயிருக்கிற விவஸாயிகளை முன்னுக்குக் கொண்டு வருவதற்காகவும், விவஸாயப் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிப்பதற்காகவும், நூதனமான விவஸாய முறைகளைக் கண்டுபிடிப்பதற்கு பிரயத்தனம் செய்யும் ஸங்கந்தாருக்கு உதவி செய்வதற்காகவும், செலவழிக்கப்படலாம். கவர்ன்மெண்டுப் பாடசாலைகளுக்கு ஹோஸ்டல்கள் கட்டுவதற்கும் இத்திரவியம் உபயோகப்படுத்தப்படலாம்.

எவ்வழியில் இது உபயோகப்பட்டாலும், ஸர் ஸாஸூன் டேவிட்டின் பெயர் அவற்றிற்கு கொடுக்கப்படும்.

MESSRS. VENKATASAMI NAIDU & SONS.

**மெஸர்ஸ் வெங்கடசாமி நாயுடு அண்ட் ஸன்ஸ்.**—மெஸர்ஸ் வெங்கடசாமி நாயுடு அண்ட் ஸன்ஸ் செய்துவந்த அலுவலில் அவர்கள் விழுந்துபோனபடியால், அவர்களுடைய ஸொலிஸிடர்களாகிய மெஸர்ஸ் ஷார்ட் அண்டு ப்யூஸ் அந்தக் கம்பெனியின் வீட்டு வாசலில் பின்வரும் வருகிறபடி நோட்டீஸ் போட்டிருக்கிறார்கள். "மெஸர்ஸ் வெங்கடஸாமி நாயுடு அண்ட் ஸன்ஸைச் சேர்ந்த அனைவரும் இன்ஸால்வெண்ட் என்று மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தா அய்யர் இன்று தீர்மானித்துவிட்டபடியால், அவருடைய சொத்துக்கள் அபிஷல் அஸைனி வசம் ஒப்புவிக்கப்பட்டுப்போயின."

இந்தக் கம்பெனியில் திவான் பகதூர் எம். வெங்கடசாமி நாயுடு முக்கியமான ப்ரொப்ரைட்டர். இவர் இன்ஸால்வெண்டாய்ப்போனது சென்னையில் அவரையறிந்த ஆங்கிலேயருக்கும் இந்தியருக்கும் விசனத்தைக் கொடுக்கும். ஆதியில் இவர் மதுரையில் விசேஷக் கீர்த்தியில்லாமல் வசித்து பிறகு சென்னைக்கு வந்தார். சென்னையில் தோல் ஏற்றுமதி வியாபாரத்தை விசேஷமாய்ச் செய்துவந்து அவருடைய தந்திரத்தாலும் ஸாமர்த்தியத்தாலும் ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களின் நன்கு மதிப்பைப் பெற்று ஸர் ஆர்தர் லாலி கவர்னராயிருந்த காலத்தில் கவர்ன்மெண்டிடம் பல நன்மைகளை யடைந்தார். ராயபகதூர்ப் பட்டமும் திவான்பகதூர்பட்டமும் இவருக்கு வரிசையாய்க் கிடைத்தன. பிறகு ஒரு வருஷம் சென்னை ஷெரிப்பாயு மிருந்தார். இவர் செய்துவந்த செலவே இவரை இன்ஸால்வெண்டாக்கியதுபோலும்.

## FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

THE KING SPOKE TO HIM.

அவனிடத்தில் ராஜா பேசினர்.—தன்னுடன் ராஜா பேசினரென்று ஒருவன் எல்லாரிடத்திலும் சொல்லிக்கொண்டு வந்தான். "ராஜா உன்னோடு என்ன பேசினர்?" என்று அவர்களில் ஒருவன் அவனைக்கேட்க, அவன் "ஒன்றுமில்லை. அவர் வரும்பொழுது வழியில் குறுக்கே நின்றுகொண்டிருந்தேன். 'வழியிலிராதே' என்று அவர் என்னைக் கோபித்துக்கொண்டார், என்று பதில் சொன்னன்.

THE WAY TO THE SWEETMEAT SHOP.

மிட்டாய்க் கடைக்கு வழி.—ஸகோதரி :—தம்பீ! நாம் புதிய வீட்டுக்குக் குடி வந்திருக்கிறோம். மிட்டாய்க் கடைக்குப் போகும் வழி தெரியுமா?

ஸகோதரன் :—அக்கா! நன்றாயறிவேன். நம்முடைய வீட்டிலிருந்து மேற்கே சென்று அங்கிருந்து வடக்கே திரும்பி மறுபடி கிழக்கே வந்து தெற்கே நடந்தால் கடை யிருக்கும். பக்ஷணம் வாங்கி வருகிறேன்.

ஸகோதரி :—மூடா! பக்கத்திலுள்ள கடைக்கு இத்தனை தூரம் சுற்றுவானேன்?

ஸகோதரன் :—அக்கா! கடையைப் பிரதக்ஷிணம் செய்தால் கைலாஸம் கிட்டும். நாம் சாப்பிடும் அன்னத்தை எத்தனை முறை ஜலத்தால் சுற்றி உண்கிறோம். கோவிலை வலம் வருகிறோம். அவ்விதமே உணவு பொருளான மிட்டாய்க் கடையைச் சுற்ற வேண்டும்.

A DOG'S ACT.

ஒரு நாயின் செய்கை.—ஒரு ஊரில் இடையனொருவன் தன்னுடைய ஆடுகளுக்குக் காவலாயிருக்கும்படி ஒரு நாயை வளர்த்துவந்தான். ஒரு நாள் அவன் ஆட்டுமந்தையை மேய ஓட்டிக்கொண்டு போயிருந்தபோது ஒரு பாறையிலிருந்து மற்றொரு பாறைக்குத் தாண்ட, கால் தவறிப்பாறையின்மேல் விழுந்தான். அதனல் அவனுக்குஅதிக நோயுண்டாகி எழுந்து நடக்க முடியாமற் போயிற்று. அவன் உடனே தன்னுடைய அரைச்சொக்காயைக் கழற்றி அதை அந்த நாயின் கழுத்தில் கட்டிவிட்டு வீட்டுக்குச் செல்லும்படி சொன்னன். அது வீட்டுக்குச் சென்றபோது வீட்டிலிருந்தவர்கள் அதன் கழுத்தில் தம்முடைய குமாரனுடைய அரைச் சொக்காயிருக்கக்கண்டு, அவனுக்கு ஏதோ அபாயம் நேரிட்டிருக்கவேண்டுமென்று எண்ணி, உடனே அவனைத் தேடுவதற்குப் புறப்பட்டார்கள். அந்த நாய் அவர்களை வெகு சீக்கிரத்தில் அவ்விடையன் விழுந்திருந்த இடத்திற்கு அழைத்துக்கொண்டுபோயிற்று. பிறகு அவர்கள் அவனை வீட்டுக்குக் கொண்டு போய்ப் பலவிதமான சிகிச்சோபசாரங்கள் செய்தார்கள்.

A THIEF'S BAD BARGAIN.

ஒரு திருடனின் நஷ்டவியாபாரம்.—சீமையில் ஒரு நாள் கூட்டமாயிருந்த ட்ராம்வண்டி ஒன்றில் ஒரு ஸ்திரீ ஏறினள். அங்கிருந்தவர்களில் ஒருவன் பெரிய மனுஷன்போல் உடுப்பணிந்துகொண்டும், கையில் ஒருநல்ல வைர மோதிரம் போட்டுக்கொண்டும் இருந்தான். அவனையே எல்லாரும் கவனித்தார்கள். கடைசியாக மேற்சொல்லிய ஸ்திரீ ஒரு இடத்தில் வண்டியைநிறுத்தச் சொன்னள். மெதுவாக இறங்கும் பொழுது மேற்சொல்லிய திருட்டுப்பெரியமனுஷன் அருகில் இருந்துகொண்டு அவள் கீழே விழுந்து விடாமலிருப்பதற்கு ஒத்தாசை செய்வதுபோல் அவளைப்பிடித்து இறக்கிவிட்டான். அப்படி இறக்கி விடும்பொழுது ஸ்திரீயின் சட்டைப் பையிலிருந்த மணிப்பையை மெதுவாக எடுத்துக்கொண்டு விட்டான். அந்த ஸ்திரீக்கு அது தெரியாமல் நேரே நகைக்கடைக்கு ஏதோ மோதிரம் வாங்கப்போய், ஒரு மோதிரமும் வாங்கி, பணம்கொடுப்பதற்கு சட்டைப் பையில் பணப்பையைப் பார்த்தால், பையைக்காணேம்! நன்றாய்த்தேடினள் பணப்பைக்கு பதிலாக ஒரு வைர மோதிரம் அகப்பட்டது. அதை நகை வியாபாரியிடம் என்னபெறும் என்று கேட்கவே, "30 பவுன் பெறும்" என்றான். அவள் பணப்பையில் 1 பவுன்தான் வைத்திருந்தாள். 29 பவுன் லாபமாய்ப் போய்விட்டது. திருடனுக்கு 1-க்கு 30 நஷ்டம்.

## CURIOSITIES.
## விநோதங்கள்.

BORN THREE CHILDREN.

**ஒரே முறையில் மூன்று பிரஸவம்.**—அழகாபுரியில் ஒரு செட்டியார் வீட்டில் ஒரு ஸ்திரீ சில தினங்களுக்கு முன் ஒரே முறையில் மூன்று ஆண் குழந்தைகளை யீன்றாள். அக்குழந்தைகளுக்குப் பிறந்த முறைப்படி ராமன், லட்சுமணன், பரதனெனப் பெயரிடப்பட்டிருக்கிறது.

HUSBAND AND WIFE RECONCILED.

**புருஷனும் பெண்சாதியும் ஸமாதானமானார்கள்.**—அயோவா என்கிற இடத்தில் ஒரு புருஷனுக்கும் அவனுடைய பெண்சாதிக்கும் ஒரு ஆண் குழந்தை பிறந்ததாம். அதற்கு பெயரிடுங்காலத்தில் இருவருக்கும், அதற்கு தகப்பன்பெயரை வைப்பதா அல்லது தாயின் பெயரை வைப்பதா என்கிறதைப்பற்றி தர்க்கம் உண்டாகி விட்டது. இந்ததர்க்கத்தில் கணவன் தன் பெண்சாதியைத்துறந்தான். இருபது வருஷங்களுக்குப் பிறகு பிள்ளை பெரியவனானதும் அவனாலேயே பிரிந்த தலைவனும் தலைவியும் பழையபடி கூடிக்கொள்ள நேர்ந்ததாம்.

A SNAKE IN A HAT.

**டோப்பிக்குள்ளிருந்த பாம்பு.**—பீஹார் நாட்டைச் சேர்ந்த பாலா என்னுமிடத்தில் வசித்திருந்த ஐரோப்பியன் ஒருவன் தான் வெளியே போனபோது, அதற்குமுன் தன் படுக்கையின்மேல் வைத்திருந்த தனது டொப்பியை எடுத்து தன் தலையில் போட்டுக்கொண்டு சென்றானாம். செல்லும் வழியில் தலையில் ஏதோ நிண்டுவதைப்போல் இருப்பதாக அறிந்த அவன் டொப்பியை எடுத்துப்பார்க்கையில் அதற்குள் ஒரு விஷநாகமிருந்ததாம். அது அவனைத் தீண்டாமலிருந்தது அதிசயமேயாகும்.

SLEPT FOR SIX MONTHS.

**ஆறுமாதம் நித்திரை செய்தான்.**—பாரீஸ் பட்டணத்தில் மோம்பபெல்லியே ஆஸ்பத்திரியில் எமீல கோத்ராங் என்றகொடி முந்திரிகைத் தோட்டக்காரன் ஒருவன் ஆறுமாதகாலமாய் நித்திரையிலிருந்து சென்ற மாதம் 10-ந்தேதி சவுக்கியமாய் விழித்தெழுந்தானும். அவனுடைய நீண்ட நித்திரையில் அவனுக்குத் தினந்தோறும் 5 பைண்ட் பால் குழாய் வழியாய் உள்ளுக்கு ஆகாரமாக இறக்கப் பட்டது. ஆப்ரிக்காவில் வியாபித்திருக்கும் நித்திரை ரோகம் என்ற வியாதியல்ல வென்றும், ப்ராஞ்சு தேசத்தில் அவ்வியாதி கிடையாதென்றும், அந்தத் தோட்டக்காரனுக்கு ஸ்வபாத்திலேயே தூக்கத்தைப் போன்ற ஓர் அசமந்தம் உண்டாயிருக்க வேண்டுமென்றும் வைத்தியர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள்.

WHITE CROW.

**வெள்ளைக் காகம்.**—காம்பக்குடி (புதுக்கோட்டை) என்ற ஊருக்குச் சமீபமாயுள்ள இருங்களன் விடுதிகிராமத்திற்குப் போயிருந்த போலீஸ் இன்ஸ்பெக்டரவர்கள் நாளது மாதம் இரண்டாம் தேதி ஒரு மாத்திலிருந்து தவறிக் கீழேவிழுந்த ஒரு வெள்ளைக் காகத்தின் குஞ்சை எடுத்து ஒரு கூண்டிலடைத்துக் கொணர்ந்திருக்கிறார். அதற்கு இன்னும் ஆகாரங்களைத் தானே தின்னத்தெரியவில்லை. சப்தம் மட்டில் ஜாதிக்கு விரோதமில்லாமலிருக்கிறது. அதன் சரீரம் முழுதும் வெளுப்பு, மூக்கும் வெளுப்பு, கண் உயர்ந்த கோமேதக ரத்தினத்தின் வர்ணம்போலிருக்கிறது. இது ஆச்சரியமென்றே ஸகலரும் வந்து பார்த்துப்போகிறார்கள். இதை சமஸ்தான பிராணிகளின் காட்சிச் சாலையில் வைக்கக் கொண்டுபோகிறார்.—ஜனானுகூலன்.

A CURIOUS GOAT.

**ஒரு விநோத வெள்ளாடு.**—ஆகஸ்டு மாதம் 23ந் தேதி பகல் 12 மணிக்கு ஹிந்துப்பூரில் ஒரு வெள்ளாடு முன்புறத்தில் ஒரு தலையும் இரண்டு முகமும் பின்புறத்தில் நான்கு கண்களும் காதுகளுமுடைய ஒரு குட்டிபோட்டது. இது இரட்டைகுட்டிபோலிருக்கிறது. இரண்டு குட்டிகளின் கழுத்தும் மார்பும் ஒன்று சேர்ந்து இரண்டு மார்பிலும் முன்கால்கள் இரண்டிருக்கின்றன. வயிறும் இடுப்பும் இரண்டு பின்கால்களாலும் வாலினாலும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் நாபிக்கொடி ஒன்றுதானிருக்கிறது. இக்குட்டிகள் உயிருடன் பிறந்து சில நிமிஷத்தில் இறந்துபோயின. இரண்டும் பெண் குட்டிகளே.

## NEWS OF THE MONTH.
## மாஸ வர்த்தமானங்கள்.

### INDIAN NEWS.
### இந்திய நாட்டு ஸமாசாரங்கள்.

HIS MAJESTY'S DARBAR SPEECH.

மாட்சிமைதங்கிய சக்ரவர்த்தியின் தர்ப்பார் பேச்சு.—"இன்றையதினம் நான் உங்களோடிருப்பதானது எனக்கு மனப்பூர்வமான ஆநந்தத்தைக் கொடுக்கிறது. இந்தவருஷம் முழுவதும் மஹாராணிக்கும் எனக்கும் பல பெரிய சடங்குகள் இருந்ததோடு எப்பொழுது மில்லாத அலுவல்களும் இருந்தன. ஆனால் அந்த அலுவல்களெல்லாம் சந்தோஷகரமானவைகளே. நான் உங்களை முன்தடவை பார்த்து நாளாகி என்னுடைய வெகுதூரமுள்ள தேசத்துக்குப் போனபோதிலும், நாங்கள் உங்களிடத்தில் கொண்ட ஆசையும் ஆநந்தமான ஞாபகமும் உங்களை மறுபடியும் வந்துபார்க்கவேண்டுமென்று எங்களைத் தூண்டின. ஆகையால் எங்கள் வீடுபோலவே நடத்திவந்த உங்களுடைய தேசத்தைப்பார்க்க இந்த நீண்டயாத்திரை செய்யத்தொடங்கினோம். இப்படிச் செய்ததால் நான் ஜூன் மீ 22 தேதி வெஸ்ட்மினிஸ்டர் ஆபியில் ஈசுவரகிருபையால் மகுடாபிஷேகமானதை இந்தியாவிற்கு நேரில் வந்து விளம்பரம் செய்வதாக சொன்னதை நிறைவேற்ற முடிந்ததாயிற்று. மஹாராணி சக்ரவர்த்தினியுடன் நான் இங்கேவந்து இந்தியாவிலுள்ள பக்தியுள்ள மன்னர்களுக்கும் விசுவாஸமுள்ள ஜனங்களுக்கும் எங்களுடைய அன்பைக்காட்ட ஆவலுள்ளவனாயிருப்பதோடு, இந்தியாவின் க்ஷேமமும் சந்தோஷமும் எங்கள் ஹ்ருதயத்திற்கு எவ்வளவு அருமையாய் இருக்கிறதென்பதையும் காட்ட ஆவலுள்ளவனாயிருக்கிறேன். என்னுடைய மகுடாபிஷேகக் கொண்டாட்டத்தை பார்க்காதவர்கள் டெல்லியில் நடக்கும்வைபத்தைப் பார்க்க வேண்டுமென்பது என்கருத்து.

"இந்தப் பெருங்கூட்டத்தைப் பார்க்க எனக்கும் சக்ரவர்த்தினிக்கும் உண்மையான சந்தோஷமும் திருப்தியும் உண்டாகின்றன. என்னுடைய கவர்னர்களையும், நம்பிக்கை பெற்ற உத்தியோகஸ்தர்களையும், என்னுடைய மேலான மன்னர்களையும், ஜனப்ரதிநிதிகளையும், என் இந்திய ஸமஸ்தானங்களைச்சேர்ந்த ராணுவங்களின் டெபுடேஷன்களையும், இந்தக் கூட்டத்தில் பார்த்துச் சந்தோஷமும் திருப்தியும் அடைகிறேன். அவர்கள் எனக்கு பக்தியுடன் செலுத்த விரும்பும் சேவாஞ்சலியையும் ராஜ பக்தியையும் மனப்பூர்வமான திருப்தியுடன் நான் நேராகப் பெறுவேன். சரித்திரத்தில் நிலைபெறக்கூடிய இந்த ஸமயத்தில் மன்னர்களும் ஜனங்களும் ஒற்றுணர்ச்சியையும் அன்பு வாய்ந்த நல்லெண்ணத்தையும் பாராட்டி என்னோடு ஒன்றாகச் சேர்ந்திருக்கிறார்கள் என்ற எண்ணம் என்மனதில் ஆழப்பதிகிறது. இந்த உணர்ச்சிகளுக்கு அறிகுறியாக என்னுடைய விசேஷ தயவையும் மதிப்பையும் காட்டும் குறிகளால் என்னுடைய மகுடாபிஷேகஸம்பவம் ஞாபகத்திலிருக்கும்படி செய்ய விரும்புகிறேன். இன்று இன்னும் சில நேரம் பொறுத்து இவைகள் இன்னவையென்றும் இந்தக் கூட்டத்துக்கு என் கவர்னர் ஜெனரலைக்கொண்டு சொல்லிவிப்பேன். முடிவில், என்னுடைய பூஜியர்களான மூதாதைகளால் உங்களுடைய சுதந்திர பாத்தியங்களைக் காப்பதாகச் செய்த உறுதிகளை புதிப்பிக்க இந்த ஸமயம் வாய்த்ததென்று நான் சந்தோஷப்படுகிறேன். உங்களுடைய க்ஷேமம், அமைதி, திருப்தி, இவைகளைப்பற்றி நான் கொள்ளும் கவலையைத் தெரிவிக்க ஸமயம் நேரிட்டதென்றும்சந்தோஷப்படுகிறேன். என்னுடைய ப்ரஜைகளுக்குக் காவலாய் கடவுள் அருள் இருந்து அவர்களுடைய ஸந்தோஷத்தையும் வளப்பதையும்முற்படுத்த என்னாலியன்ற முயற்சியில் உதவி புரிவாராக. இங்கிருக்கும் சாமந்த மன்னர்களுக்கும் பிரஜைகளுக்கும் என்னுடைய அன்புவாய்ந்த வாழ்த்துக்களைச் செய்கிறேன்."

TLE PROCLAMATION.

விளம்பரம்.—நாளதுமாஸம் 12-ம்தேதி டெல்லி தர்பாரில் சக்ரவர்த்தி அவர்களுக்கு மகுடாபிஷேகமானதாக வாசித்தவிளம்பரம் பின் வருமாறு:—

"நமது அரசாட்சியின் முதல் வருஷமாகிய நமது கர்த்தருடைய ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பத்தாம் வருஷம் ஜூலைமாதம் பத்தொன்பதாம் தேதியும் நவம்பர் மாதம் ஏழாம் தேதியுமுள்ள நம்முடைய ராஜ விளம்பரங்களினாலே, ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பதினோராம் வருஷம் ஜூன்

மாதம் இருபத்திரண்டாம் தேதியில் நமது ராஜ மகுடாபிஷேக மகோற்சவத்தை ஸர்வ சக்தியுள்ள கடவுள் கிருபையினாலும் ஆசீர்வாதத்தினாலும் கொண்டாடவேண்டுமென்னும் நமது ராஜ உத்தேசத்தை நாம்பிரசித்தப்படுத்தி அறிவித்தபடியாலும்!

"ஸர்வசக்தியுள்ள கடவுள் கிருபையினாலும் ஆசீர்வாதத்தினாலும் சென்ற ஜூன்மாதம் இருபத்திரண்டாம் தேதி வியாழக்கிழமை மேற்படி மகோற்சவத்தை நாம் கொண்டாடக் கூடியவர்களா யிருந்தபடியாலும்;

"நமது அரசாட்சியின் முதல் வருஷமாகிய நமது கர்த்தருடைய ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பதினோராம் வருஷம் மார்ச்சுமாதம் இருபத்திரண்டாம் தேதியுள்ள நம்முடைய ராஜவிளம்பரத்தினாலே மேற்படி மகோற்சவமானது அந்தப்படி கொண்டாடப்பட்டதென்று நம்முடைய இந்திய ராஜ்யங்களுக்குள் நம்மிடத்தில் அன்புபாராட்டும் எல்லா ப்ரஜைகளுக்கும் நாமே நேரில் பிரசித்தப்படுத்துவதும், நம்முடைய கவர்னர்களையும், லெப்டெனென்ட் கவர்னர்களையும், நம்முடைய மற்ற உத்தியோகஸ்தர்களையும், நமது சம்ரக்ஷணையிலிருக்கும் சுதேச ராஜ்யங்களின் அரசர்களையும், அதிபதிகளையும், பிரபுக்களையும், நமது இந்திய ராஜ்யத்தைச் சேர்ந்த ஸகல மாகாணங்களின் பிரதிநிதிகளையும் நமது ஸந்நிதானத்துக்கு வரவழைப்பதும் நம்முடைய கோரிக்கையென்றும் விருப்பமென்றும் நாம் தெரிவித்தபடியாலும்:

"நமது இந்த ராஜ விளம்பரத்தினால் நாம் இப்போது அதைப் பிரசித்தஞ்செய்து, நம்முடைய ஸகல உத்தியோகஸ்தர்களுக்கும் இப்போது டெல்லியில் கூடியிருக்கும் ஸகல அரசர்களுக்கும் அதிபதிகளுக்கும் பலவகையான ஜனங்களுக்கும் நாம் மகாராஜாவாகவும் சக்ரவர்த்தியாகவும் வாழ்த்துகூறி, நமது இந்திய ராஜ்யத்தில் நாம் ஆழ்ந்த அன்பு வைத்திருப்பதையும் அதன் க்ஷேமத்திலும் அபிவிருத்தியிலும் நாம் இடைவிடாமல் அக்கறை கொண்டவர்களாயிருப்பதையும் இனி எப்போதும் அப்படியே இருந்து வருவதையும் அவர்களுக்கு உறுதியாய்ச் சொல்லுகிறோம்.

"டெல்லியில் நமது ராஜ ஸபையிலே நமது அரசாட்சியின் இரண்டாவது வருஷமாகிய ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பதினோராம் வருஷம் டிஸம்பர் மாதம் பன்னிரண்டாம் தேதியில் கொடுக்கப்பட்டது. மகாராஜ சக்ரவர்த்தி அவர்களைக் கடவுள் ரக்ஷிப்பாராக"

LAYING THE FOUNDATION STONE FOR NEW DELHI.

**புது டெல்லிக்கு சக்ரவர்த்தி அஸ்திவாரம் போட்டது.**—இந்த மாஸம் 15-ந்தேதி காலமே சக்ரவர்த்தி இந்தியாவுக்கு இப்போது தலை நகராய்விட்ட டெல்லியில் புதுப்பட்டணம் ஒன்று நிர்மாணிக்கும் நோக்கத்தோடு தர்பார் நடந்த இடத்தில் அஸ்திவாரக்கல் நட்டார். இந்த ஸமயத்தில் லார்ட் ஹார்டிஞ்ஜ் பேசினதை சுதேசமித்திரன் மொழிபெயர்ப்பைத் தொடர்ந்து எழுதுகிறோம்.

"காரொனேஷன் தர்பாரின்போது இந்தியாவுக்கு டெல்லி இனி தலைநகராகுமென்று விளம்பரப்படுத்தினதற்கு இப்போது மாட்சிமை தங்கிய தாங்கள் இந்தத்தலை நகரத்தில் புதிதாய் நிர்மாணிக்கப்படப்போகும் புதுப்பட்டணத்துக்கு அஸ்திவாரக்கல் நட இசைந்தது முத்திரை வைத்தது போலாகிறது. அந்த ஸமயம் ஒப்புயர்வற்ற சிறப்புடன் நிறைவேறினதைவிட அதனால் கிளப்பப்பட்ட ராஜபக்தியினால் எப்போதும் அது ஞாபகத்திலிருக்கும். டெல்லியைச் சுற்றிப்பல தலைநகர்கள் அப்போதப்போதுண்டாகி அவைகள் ஆதிகாலத்துச் சரித்திரத்தில் மறைந்திருக்கின்றன ஆயினும், இவைகளில் எதுவும் மாட்சிமை தங்கிய தாங்கள் இப்போது செய்யப்போகிற சடங்குகளைவிடப் பிரகாசமான சடங்குகளுடன் உண்டானதில்லை. எதுவும் பிற்காலத்து வளப்பமும் மகிமையும் நிலைக்கும் படியான ஸந்தர்ப்பங்களுடன் உண்டானதில்லையென்பது நிச்சயம்.

"கல்கத்தாவிலிருந்து தலை நகரத்தை டெல்லிக்கு மாற்றுவது பூரணமான தீர்க்காலோசனையின்றி செய்யப்படவில்லை. இது போன்ற யோசனைகள் 1868-ம் வருஷம் முதல் கடந்து போன பல தடவைகளில் செய்யப்பட்டிருக்கின்றன. விவாதத்துக்குரிய அம்சங்கள் பலவற்றைப் பற்றிச் சரியான அபிப்பிராயங்கள் செய்ய ஏற்கெனவே ஸாதனங்கள் ஏற்பட்டிருக்கின்றன. எந்தப் பெரிய மாறுதலும் அது எவ்வளவு நலந்தரத் தக்கதாயிருந்த போதிலும் சிலருக்கு நஷ்டமில்லாமலாவது ஸ்தல உணர்ச்சிகளுக்கு விரோதமில்லாமலாவது செய்யப்படுதல் கஷ்டம். ஆனாலும் என் ஆலோசனை ஸபையிலுள்ள மெம்பர்கள் பேராலும் என் பேராலும் மாட்சிமை தங்கிய தங்களுடைய பிரதி நிதியாக நான் பேசக்கூடுமானால், எந்த மாறுதலும் இதைப்போல பலருக்கு நன்மை செய்வதாய் இருந்ததில்லை; சிலருக்கு நேரிடுமென்று நினைக்கக்கூடிய தீங்குகள் சில காலத்துக்கு மட்டும் நேரிட்டு பின்னால் கிடைக்கக் கூடிய நன்மைகளில் மறைந்துவிடும். மாட்சிமை தங்கிய தங்களுடைய மந்திரிகளுடைய ஆலோசனையின் பேரில் கான்ஸ்டிட்யூஷன் (ராஜாங்கமுறை)படி செய்த தீர்மானம். அதனால் அவசியமாயுண்டாகக் கூடிய மாறுதல்களோடு இந்த ஏகாதிபத்தியத்தின் கவர்ன்மெண்ட் முறைகளில் விசாலமான முற்போக்குள்ள திருத்தமாய்முடியும்; போட்டியையும் விரோதத்தையும் இல்லாமற் செய்து, பொதுவாய் அமரிக்கையும் திருப்தியும் குடிகொண்ட சகாப்தத்தை யுண்டு பண்ணும் என்று சொல்ல விரும்புகிறேன்.

இந்தத் தீர்மானம் செய்த விதத்தைத் தவிர, அபிப்பிராயபேதமாவது விவாதமாவது இல்லாமலும் மாட்சிமை தங்கிய தங்களுடைய பக்தியுள்ள பிரஜைகளிற் பல வகுப்பாரும் உற்சாகத்துடனும் விசுவாசத்துடனும் ஆதரிக்கக் கூடியபடியும் வேறு விதமாய்ச் செய்தல் ஸாத்

தியமல்ல. இந்தக் கல்லுகள் நடப்படும் ஸ்தலத்தைச் சுற்றி நாம் நிர்மாணிக்கக் கருதியிருக்கும் மகா பட்டணமானது அதன் உற்பத்தியான சமயத்துக்கு உற்றதாயிருக்குமென்று நாங்கள் நம்புகிறோம். இந்தப் பழைய நாகரீகத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் ஸ்தானமாயுள்ள இடத்தில் மாட்சிமை தங்கிய தாங்கள் நடும் கல்லுகளே தங்கள் அருளுள்ள பிரசன்னத்திற்கும், தங்களுடைய பிரஜைகளுக்கு விளம்பரம்செய்து பிரசுரிக்கப்பட்ட மகாமுக்கியமான தீர்மானத்திற்கும், அடையாளமாயிருக்கும்."

சக்ரவர்த்தியின் பேச்சாவது :—"சக்ரவர்த்தினிக்கும் எனக்கும் டெல்லியை விட்டுப் போவதற்கு முன்னால் நாம் நிற்கும் இடத்தில் நிர்மாணமாகப் போகிற பட்டணத்துக்கு அஸ்திவாரக்கல் நடக்கூடியதா யிருப்பது பெருந்திருப்தியாயிருக்கிறது. மூன்று தினங்களுக்கு முன்னால் என்னுடைய காரோனேஷன் தர்பார் சிறப்பாயும் எங்கள் மனதில் படியும்படியாயும் இருந்த ஸமயத்தில் நான் செய்த முக்கியமான பிரசித்தமானது பூர்த்திபெற இது முதலெடுப்பாகும். இப்போது செய்யப்பட போகும் பெரும் மாறுதல்களால் எதிர்ப்பார்க்கக்கூடிய நலந்தரத்தக்கனவாய் நெடுந்தூரம் செல்லத்தக்க பலன்கள் பூர்த்தி பெறுமென்றும் இந்தியாவுக்கு திருத்தம்பெற்ற நிர்வாகத்தை ஜனங்களுக்கு அதிகமான சுகத்தையும் வளப்பத்தையும் கொடுக்குமென்றும் நான் மனப் பூர்வமாய்க் கோருகிறேன். இங்கு கட்டப்படும் பட்டணத்து ப்ளானும் டிஸைனும் தக்கபடி யோசனையுடனும் ஜாக்கிரதையாயும் செய்யப்படுமென்றும் அந்தப் புது சிருஷ்டியானது இந்த அழகான நகரத்துக்குப் பொருந்தியதா யிருக்குமென்றும் கோருகிறேன். இன்றிவ்வளவு மங்களகரமாய் ஆரம்பிக்கும் வேலைக்கு ஈஸ்வரக் கடாக்ஷம் பூர்ணமாயிருக்க வேண்டுகிறேன்."

REPLY TO THE DELHI ADDRESS.

டெல்லி அட்ரெஸுக்குச் சொன்னபதில்.—சக்ரவர்த்திடெல்லி அட்டிரெஸுக்குச் சொன்ன பதிலாவது:—

"உங்களுடைய விக்ஞாபனப் பத்திரத்தில் கண்ட வரவேற்புக்கும் நற்சிந்தனைக்கும் நானும் சக்ரவர்த்தினியும் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம். சிலமாசங்களுக்கு முன்னால் இந்தியாவில் தோன்றும் போலிருந்த எப்போதுமில்லாத வரட்சியால் நாங்கள் இத்தேசத்துக்கு வரும் சமயம் சந்தோஷமற்றுப் போமென்று பயப்பட்டோம். ஜனங்களுடைய க்ஷேமமானது பருவமழையினாலும் பூமியின் நல்ல விளைச்சலாலும் பாதிக்கப்படுகிறபடியால் நம்பிரஜைகளின் பெரும்பான்மையோருக்கு இந்த வரட்சி துக்ககரமான ஆபத்தாய் முடியுமென்று பயந்தோம். இப்போது இந்த வரட்சியானது விஸ்தீரணத்தில் குறைந்து போயிற்றென்றும், போக்கு வரத்து வசதிகளும் பாசனவேலைகளும் அதிகப்பட்டிருப்பதால் பூர்வம் பஞ்சத்தால் ஜனங்கள் வருந்தி மாண்டது போல இப்போது வருந்தி மாளமாட்டார்களென்றும் சந்தோஷப்படுகிறோம். மற்றவழிகளிலும் இந்தியாவின் விவசாய நிலைமை திருந்தியிருக்கின்றது விவசாயிகளின் அனுஷ்டானங்கள் பழய வழக்கத்தைப் பற்றினவாயிருந்தாலும் பொறுமையும் உழைப்பும் சாமார்த்தியமும் உள்ளவர்கள். சமீபத்தில் சாஸ்திரத்தின் சாதங்களால் விவஸாயம் நன்மைபெற்றிருக்கின்றது. பூமி வளப்பத்தை அதிகப் படுத்துவதிலும் கால்நடைகளின் வியாதிகளுக்குச் சிகிச்சை செய்வதிலும், பூமியைப் பயிரிடுவோருக்குப் பயங்கரமான விரோதியாயிருக்கும் பூச்சிகளைக் கொல்லுவதிலும், சாஸ்திரப் பிரயோகத்தினால் பெரும் பலன்கள் பெறக்கூடுமென்று சில தினங்களாக நிரூபணமாயிருக்கின்றது. ஜனங்களுக்குள் ஐக்கிய முறையை யுண்டுபண்ணி முழுமையும் உபயோகப்படுத்தக் கூடுமானால் இத்தேசத்து விவஸாய உரிமைகள் இனி பெருமையும் மகிமையும் பெறுமென்று நினைக்கிறேன்.

"எங்கள் வரவை நோக்கி உங்கள் நகரத்தை அலங்காரங்களால் தயார்செய்ய நீங்கள் செய்த முயற்சிகள் பயன்பட்டதை நாங்கள் உணர்கிறோம் சென்ற இருபது வருஷகாலமாக சுகாதார நிலைமையைச் சீர்படுத்துவதில் நீங்கள் அசிரத்தையாயிருக்கவில்லை, உங்களுடைய வடிகால்களைச் செப்பனிட்டு நல்ல பயனைப் பெற்றிருக்கிறீர்கள். சுத்தஜலத்தைப் பெற்று காலராமுதலிய தொற்றுவியாதிகள் தோன்றாமற் செய்ததால் அதற்கான செலவுகள் நல்ல செலவுகளாகவே ஆயின. டெல்லியில் காடும் சதுப்புமாயிருந்த பூமியை விலாசமான தோட்டமாக்கி மேலாவைச் சுத்தபடுத்தினபடியால் விஷஜுரம் எப்போதும் காணுவதுபோல் இந்தவருஷம் காணவில்லையென்று அறிகிறேன். என்னுடைய இந்தியப் பிரஜைகளுக்கு நல்ல சரீரசுகமும் பத்திரமும் உண்டாகும்படி இங்கு செய்த மாதிரி எங்கும் செய்யப்படுமென்று நான் மனப்பூர்வமாய் நம்புகிறேன். இந்த பயங்கரமான வியாதிகளாகிய ப்ளேக், விஷஜுரம், காலரா இவைகள் வராமலிருக்கும் உபாயம் ஜனங்களாலும் அவர்களுடைய தலைவர்களாலுமே செய்யப்படவேண்டும். அதிகாரிகள் செய்யும் சாஸ்திர பூர்வமான முயற்சிகளோடு இவர்கள் மனமொப்பி ஒத்துழைக்கவேண்டும். இந்தக் கொடும் வியாதிகளின் காரணங்கள் ஸ்தல நிலைமைகளைக் கற்பதாலும் ஆராய்ச்சியினாலும் வெகுவாய் அறியப்பட்டிருக்கின்றன; ஆனாலும் இன்னும் செய்யவேண்டியதுண்டு. எல்லாவற்றிற்கும் மேலாக, சாமானிய ஜனங்களுக்கு அறிவை யூட்டி அவர்களுடைய சாவதானத்துக்கும் க்ஷேமத்துக்கும் தகுந்த முன் ஜாக்கிரதைகளை அறிந்து அனுசரிக்க ஆரோக்கியசாஸ்திரத்திலும் வீட்டு சுகாதாரத்திலும் மூலாதாரங்களை அவர்களுக்குக் கற்பிக்கவேண்டும்.

"உங்களுடைய பழய கீர்த்திபெற்ற நகரத்துக்கு

மறுபடியும் வரப்போவதைப்பற்றி சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தோம். இத்தேசத்தில் ஞாபகமிருக்கக்கூடிய சம்பவங்களுக்கு அது ஸ்தலமாயிருந்தது. இவைகளிற் சில என்னுடைய வமிசத்தோடும் சிம்மாசனத்தோடும் நெருங்கி சம்பந்தப்பட்டவைகள். இனி எங்களுக்குள்ள சம்பந்தம் இன்னும் நெருங்கியதாகும். உங்கள் நகரத்தின் பூர்வ சரித்திரத்தால் அதற்கு விநோதமான கவர்ச்சியுண்டா யிருக்கிறது. பூர்வ காலத்து ராஜ வமிசங்களின் சின்னங்கள் எங்கு பார்த்தாலும் கண்ணில் விழுகின்றன. சிறப்பான மாளிகைகளும் ஆலயங்களும் காலத்தாலுண்டாகும் நாசத்துக்குத்தப்பி யிருகின்றன. இவைகளெல்லாம் பூர்வகாலத்துப் பெருமைக்கு நிதர்சனங்கள். இந்தியா கவர்ன்மெண்டுக்கு ஒரு மத்திய ஸ்தலமான ராஜ நகரத்தை நிச்சயம் செய்ததில் இந்த பழய நிலைமைகளும் லக்ஷணங்களும் நான் சமீபத்தில் வெளியிட்ட தீர்மானத்துக்கு முக்கிய காரணங்கள். இன்று முதல் ஏகாதி பத்தியத்துக்கு டெல்லி ராஜஸ்தலமாயிருக்கும். இந்த அழகான நகரம் பஞ்சாப் மாகாணத்தில் சேர்க்கப்பட்ட 50 வருஷ காலத்தில் அதை பிரபலப்படுத்திச் செய்த முயற்சிகளை நான் ஒப்புக்கொள்கிறேன். அதனுடைய பூர்வீக சரித்திரச் சின்னங்களை காப்பாற்றி டெல்லி இந்திய ஏகாதிபத்தியத்துக்கு ராஜஸ்தலமாகி அதனுடைய பூர்வீக கௌரவமான நிலைமைக்கு இப்போது அதை உயர்த்த உங்கள் கவர்ன்மெண்ட் கவலைப்பட்டிருக்கின்றதையும் அறிவேன். இந்த மாறுதலால் ராஜாங்க நிர்வாகத்தில் பல புதுமைகள் செய்யும்படி நேரிடும். ஆயினும் டெல்லி மாகாணக் கவர்ன்மெண்டின் முக்கியஸ்தலமாகயிருந்து அதனுடைய பழய பெருமையையும் ஜனங்களின் க்ஷேமத்தையும் பற்றி ஜாக்கிறதை பெற்றதுபோல இம்பீரியல் ராஜஸ்தலமாக அதே ஜாக்கிறதையைப் பெறுமென்பதில் சந்தேகமில்லை. டெல்லி இப்போது எந்த ஏகாதிபத்தியத்துக்கு ராஜஸ்தலமாயிற்றோ அதில் அமைதியும் முற்போக்கும் நீதியும் வளப்பமும் நிலை நின்று, அது உங்கள் நகரத்தின் பூர்வீகப் பேருடன் இன்னும் அதிகப் பெருமையும் மகிமையும் தங்கிய சரித்திரத்தையும் உண்டாக்குமென்று நான் பிரார்த்திக்கிறேன்."

REPLY TO THE MADRAS ADDRESS.

சென்னை அட்ரேஸுக்கு சொன்னபதில்.—"சென்னை ராஜதானியின் ஜனங்கள் போல் நீங்கள் செய்திருக்கும் பக்தியும் அடக்கமுமுள்ள விக்ஞாபனப் பத்திரத்துக்கு நானும் சக்ரவர்த்தினியும் சந்தோஷப்படுகிறோம். நமது இந்திய சமஸ்தானங்களில் பழய ராஜதானியாகிய சென்னையில் வசிக்கும் ஜனங்களுடைய பக்தியால் எங்கள் மனம் நெகிழ்கின்றது. இதில் வசிக்கும் 4 கோடி ஜனங்கள் எங்களிடத்தில் நேரான பிடிப்பிருப்பதைக்காட்ட ஒன்று சேர்ந்ததற்காக நன்றி கொள்கிறோம். தென்னிந்தியாவில் பல ஜாதி மத ஜன வேற்றுமைகளைக்காட்டி கையெழுத்திட்டிருப்பது நீங்கள் எங்களை வரவேற்றதற்குவிலைபெற்ற அத்தாட்சியாகச் சேமிக்கப்படும். இந்தியாவுக்கு இப்போது வந்த சமயத்தைப்பற்றி நீங்கள் சொல்லியிருக்கும் வார்த்தைகளையும் 1906-ம் வருஷத்தில் சென்னையில் நாங்கள் இருந்ததை நீங்கள் பட்சமாய் நினைத்திருப்பதையும் நாங்கள் பூராவாய் அறிகிறோம். எங்களுக்கு அப்போது நீங்கள் செய்த உபசாரத்தை நாங்கள் மறக்கவில்லை. உங்களுடைய பேர்பெற்ற நகரத்தை நாங்கள் திரும்பிப் பார்க்க வேண்டுமென்று நீங்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்குமாறு எங்களுக்கு அவகாசமில்லாததைப் பற்றி நாங்கள் விசனப்படுகிறோம். இந்திய ஏகாதிபத்தியத்தில் எனக்குப் பிரியமான பாட்டியாரும் பிதாவும் காட்டின உணர்ச்சியையும் கரிசனத்தையும் பற்றி நீங்கள் சொல்லுவதைக் கேட்க எனக்கு ஆழ்ந்த திருப்தி யுண்டாகின்றது. அவர்களுடைய உணர்ச்சிபோல என்னுடையதும் இருக்கிறதென்று உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. என் இந்தியப் பிரஜைகளின் க்ஷேமமும் வளப்பமும் என்னுடைய மனப்பூர்வமான கவலைக்கு விஷயங்களாயிருக்குமென்று நான் சொல்லவேண்டியதில்லை."—சுதேசமித்திரன்.

THE LATE HON. MR. V. KRISHNASAMI AIYER.

**காலஞ்சென்ற கனம் வி. கிருஷ்ணஸாமி அய்யர்.**—நாளது மீ 28-ம் தேதி காலமே 5 மணிக்கு கனம் வி. கிருஷ்ணஸாமி அய்யர் இறந்துபோய் விட்டாரென்று கேட்க ரொம்பவும் துக்கமாயிருக்கிறது. இவர் டெல்லியில் சக்ரவர்த்தியின் மகுடாபிஷேகத்துக்காகப் போயிருந்தார். அங்கே மகுடாபிஷேகத்தன்றைக்கு ஒரு சிரங்கு புறப்பட்டு கொஞ்சம் ஜுரமும் வந்தது. அதனால் டாக்டர்கள் அவர் மகுடாபிஷேகத்துக்குப் போகாமல் சென்னப்பட்டணத்துக்குப் போய்விடுவதே நல்லதென்று சொன்னதால் அப்படியே வந்துவிட்டார். இங்கே வந்து நல்ல வைத்தியர்கள் பார்த்தும் கடைசியாக அறுத்தசிரங்கு புரையோடி இறந்துபோனார். இவர் போனது இந்தியாவுக்கு, முக்கியமாய் சென்னை ராஜதானிக்கு ஒரு பெரிய நஷ்டம். படிப்பிலும், யுக்தியிலும், புத்தியிலும், பேசும் சாதுர்யத்திலும், பிடித்த காரியத்தை நிறைவேற்றுவதிலும், பணம் ஸம்பாதித்து அதை தர்மங்களில் செலவிட்டதிலும், பொதுக்காரியங்களில் சலிப்பில்லாமலும் மனம் தளராமல் உழைப்பதிலும், இவருக்கு நிகர் ஒருவருமில்லை என்று நிச்சயமாய்ச் சொல்லலாம். இவருடைய ஜீவிய சரித்திரத்தை விரித்து எழுத இடமில்லாமையால் இவ்வளவோடு நிறுத்துகிறோம். வி. கிருஷ்ணஸாமி அய்யரைப்போல காலத்தையும் ஸம்பாத்தியத்தையும், திறமையையும் ஜனங்களுடைய க்ஷேமாபிவிருத்திக்காக அர்ப்பணம் பண்ணக்கூடிய மகான் ஸமீபத்தில் உதிப்பாரென்று நமக்குத் தோன்றவில்லை.

## FOREIGN NEWS.

## அந்நியநாட்டு ஸமாசாரங்கள்.

—:o:—

### AN AFGHAN NEWSPAPER.

**ஆப்கானிஸ்தான் ஸமாசாரப் பத்திரிகை.**—ஆப்கானிஸ்தானத்தில் முதன் முதலில் பிரசுரமாகிய பத்திரிகையின் பிரதி யொன்று பிஷாவருக்கு எட்டியதாகத் தெரிகிறது. அதற்கு ஸஃர்ஜால் ஆக்பர் என்றுபெயர். அது இந்த வருஷம் அக்டோபர் மாதம் 9-ம் தேதி வெளியானதாகத்தெரிகிறது. அது 15 அங்குலம் நீளமும் 10 அங்குலம் அகலமுள்ள காகிதத்தில் லெத்தக்ராப் செய்திருக்கிறது, இதிலடங்கியவிஷயங்கள்கெஜட்டு ஸமாசாரங்களும். கோர்ட்டு ஸமாசாரங்களுமாம். இதன் முதல் பிரதி எல்லாருக்கும் இனமாக அனுப்பப்பட்டது. அடுத்த பிரதிகள் 1 அணு விலையுள்ளனவாம்.

### RICE CULTURE.

**நெல் ஸாகுபடி.**—இட்டிலி தேசத்துக்கு ஸமீபத்திலுள்ள வெர்வில்லி என்னும் இடத்தில் 1912-ஆ அக்டோபர்மீ௳த்தில் நெல்ஸாகுபடியைக் குறித்து எல்லா தேசத்தாரும் கூடிப்பேசும் நாலாவது மகா சங்கம் நடக்கப்போகிறது. இதில் நெல் ஸாகுபடியைப்பற்றிய முக்கியவிஷயங்களைக்குறித்துப்பேசுவதுடன் நெல் ஸாகுபடி வியாபாரத்தில் எந்த ஸ்திதியிலிருக்கிறதென்றும், ஸாகுதார விஷயத்தில்நெல் ஸாகுபடி ஜனங்களுக்குண்டாக்கும் லாபநஷ்டத்தை குறித்தும், நெல் ஸாகுபடியில் இதுவரையில் செய்திருக்கும் சாஸ்திர ஆராய்ச்சியைக் குறித்தும், பயிருக்குஎவ்வளவு தண்ணீர் அவசியமாய்த்தேவை என்பதையும், இன்னும் இதைப்போலொத்த அனேக முக்கிய விஷயங்கள் பேசப்படுமாம். தவிர. அந்த தேசங்களில் உபயோகிக்கும் கருவிகளும் அரிசி செய்யும் யந்திரங்களும், அநேகவித அரிசி. நெல் தினுஸுகளும் அவைகளின் பேதா பேதங்களும் விவரிக்கப்படுவதுடன், முக்கியமாய் விசைபொறுக்கி எடுத்துப் பயிர் செய்வதாலுண்டாகும் விருத்திகளையும் குறித்துப் பேசுவார்களாம். இத்துடன் நடக்கும் காட்சிசாலையில் நெல் பயிருக்கு வெவ்வேறு விதமாய் நீர்ப்பாய்ச்சும் விதங்களையும், திருஷ்டாந்த பூர்வமாய் காட்டப்போகிறார்களாம்.

### THE THEATRE.

**நாடகசாலை,**—சென்ற வருஷத்தில் மட்டும்ப்ரிட்டிஷ் ஜனங்கள் நாடகங்கள் பார்ப்பதில் $2\frac{1}{2}$ கோடி பவுன் செலவு செய்திருக்கிறார்களாம். சில வருஷங்களுக்கு முன் லண்டனில் 12-நாடக சாலைகளும் ப்ரிட்டிஷ் ராஜ்யத்தில் 80 நாடகசாலைகளுமே யிருந்தன. தற்காலம் லண்டனில் மாத்திரம் 67-ம், சுற்று மாகாணங்களில் 738-ம் இருக்கின்றன. 40,000 ஜனங்கள் நாடகத்தை ஜீவனமாகக்கொண்டிருக்கிறார்கள். உலகத்திலுள்ள எல்லா நாடுகளிலும் அமெரிக்காவில் தான் நாடகத்தை ஜீவனமாகக் கொண்டவர்கள் அதிகம். அமெரிக்காவுக்கு அடுத்த படியில் ப்ரிட்டிஷ் ராஜ்யத்தைத்தான் சொல்ல வேண்டும்.

### WHITE ELEPHANT.

**வெள்ளை யானை.**—ஸயாம் புது அரசர் ஆளுகைக்கு வந்த பிறகு முதல் முதல் பிடிக்கப்பட்ட வெள்ளையானையை பாங்காக் என்னும் பிரதான நகரத்திற்கு சிறிதுநாட்களுக்கு முன்பு வழக்கப் பிரகாரம் சடங்குகளுடனும் பழகின யானைக் கூட்டங்களுடனும் சோல்ஜர்களும் பின்தொடர, பாண்ட் வாத்தியங்களுடன் கொண்டு வந்தார்கள். வேடிக்கை பார்க்க பெருங்கும்பு கூடினது. பிறகு ராஜாவானவர் அந்த யானையைக் கட்டும் மண்டபத்திற்கு வந்து யானைக்கு நாமகரண மஹோற்சவகாலத்தில் ராஜ்ய ஆடம்பரங்களும் சடங்குகளும் அநேகமாய் ராஜாவே ஸொந்தமாக நடத்தி 'பிரா-ஸ்வேத்-வாச்சிரபாஹா' என்னும் நாமதேயம் வைத்தாராம்.

### JAPANESE WOMEN.

**ஜபானிய ஸ்திரீகள்.**—இரண்டொரு வருஷங்களுக்கு முன் முதல் முதலாக ஜப்பானிய ஸ்திரீகள் கம்பெனிகளிலும், வர்த்தக சாலைகளிலும் குமஸ்தாக்களாக நியமிக்கப்பட்டார்கள். இவர்கள் புருஷர்களை விட ஸாமார்த்தியமுள்ளவர்களாயிருக்கிறபடியால், வியாபாரிகள் உத்தியோகங்களுக்கு அவர்களையே வைத்துக்கொள்ளுகிறார்களாம். முக்கிய பட்டணங்களாகிய டோக்கியோவிலும் யோகஹாமாவிலும் ஸ்திரீகள் ஸகலவித உத்தியோகங்களிலும் நியமிக்கப்பட்டிருக்கிறார்களாம்.

## MADRAS MARKET REPORTS.

## மதராஸ் மார்க்கெட் நிலைவரங்கள்.

தென்னிந்தியா சேம்பர் ஆப் காமர்ஸ் என்றுசொல்லப்படும் வர்த்தக சங்கத்தாரின் டிஸம்பர் மாஸம் 20-ம்உ ரிப்போர்ட்டுப்படி.

PRODUCE MARKET.—விளைபொருள்கள்.

| | | ரூ. |
|---|---|---|
| ஆவாரம்பட்டை பாரம் 1-க்கு | .. | 13 முதல் 22 |
| கொன்னைப்பட்டை ஷை | .. | 13½ |
| கடப்பை கடுக்காய் ஷை | .. | 8 முதல் 10 |
| சேலம் ஷை ஷை | .. | 17 முதல் 18 |
| நல்லெண்ணெய் ஷை | .. | 105 முதல் 112 |
| புங்கம் எண்ணெய் ஷை | .. | 70 முதல் 90 |
| எட்டிக்கொட்டை ஷை | .. | 17 |
| விளக்கெண்ணெய் ஷை | .. | 76 முதல் 77 |
| கொட்டை முத்து | .. | 10 முதல் 10¼ |

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| பந்தர் பச்சை அரிசி 44 படி | | 8 | 8 | 0 |
| நெல்லூர் அரிசி 31 படி | .. | 6 | 10 | 0 |
| கோதுமை 4 படி | .. | 1 | 0 | 0 |
| கொள்ளு 195 ராத்தல் | | 6 | 0 | 0 |
| வெங்காயம் (தாட்பத்திரி) பாரம் | .. | 10 | 0 | 0 |
| ஷை (பல்லாரி) ஷை | .. | 9 | 8 | 0 |
| பங்களூர் உருளைக்கிழங்கு | | 15 | 0 | 0 |

METALS—உலோகங்கள்.

| | | ரூ. |
|---|---|---|
| பித்தளைத்தகடுகள் 'Rex' ம் இங்கிலீஷுமும் ராத்தல் 20-60, 30-60, 20-40, 20-50, பாரம் | .. | 206 |
| செப்புத் தகடுகள் பாரம் | .. | 250 |
| செப்புக்கட்டி ஷை | .. | 220 |
| நாகம் ஷை | | 84 |
| ஷை (உள்ளூர்) ஷை | .. | 80 |
| ஈயம் ஷை | .. | 60 |
| காரீயம் ஷை | .. | 70 |
| வெள்ளீயம் ஷை | .. | 196 வராகன். |

IRON—இரும்பு.

| | | |
|---|---|---|
| மருக்கி சட்டம் 2 செ. பாரம் ரூ. | | 20½ |
| சீமை | .. .. .. | 40 |
| மருக்கி தகடு | 6—9, 12—13, | 24—37 |
| பீப்பாய்க் கட்டு | .. .. | 27—28 |
| 8 பட்டை எஃகு | .. .. | 22 |
| எஃகு வில்கட்டு | .. .. | 27—31 |
| திரணைக் கம்பி மருக்கி 2 செ. | .. | 22—25 |
| சீமை | .. .. .. | 40-46-49 |

## SEASON.

## காலஸ்திதி

RAINFALL.

**மழை.**—1911ஞூ ஏப்ரல் மீ 1-உ யிலிருந்து டிஸம்பர் 31-ம் உ வரையில் பெய்த மழையின் அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரி பெய்திருக்க வேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம், ஸெண்டுகளாக குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 33·88 | 46·25 |
| வால்டேர் | 21·95 | 42·89 |
| காக்கிநடா | 31·32 | 38·90 |
| மசூலிப்பட்டணம் | 36·13 | 40·49 |
| நெல்லூர் | 37·61 | 30·10 |
| மதராஸ் | 36·53 | 49·49 |
| கூடலூர் | 45·81 | 50·92 |
| நாகப்பட்டணம் | 67·37 | 53·22 |
| பாம்பன் | 29·02 | 36·35 |
| கொழும்பு | 61·99 | 79·78 |
| திருவநந்தபுரம் | 61·42 | 59·74 |
| கொச்சி | 110·49 | 111·42 |
| கள்ளிக்கோட்டை | 99·55 | 114·29 |
| மங்களூர் | 100·98 | 123·79 |
| மெர்க்காரா | 138·34 | 123·97 |
| ஐதராபாத் | 20·86 | 30·87 |
| ரெய்ச்சூர் | 18·97 | 30·06 |
| பல்லாரி | 12·85 | 19·48 |
| கர்நூல் | 17·94 | 27·00 |
| கடப்பை | 23·30 | 32·48 |
| ஹாஸ்ஸான் | 32·80 | 35·55 |
| பெங்களூர் | 29·04 | 34·36 |
| கொடைக்கானல் | 63·64 | 52·71 |
| உதகமண்டலம் | 61·21 | .. |
| கோயம்புத்தூர் | 25·04 | 19·74 |
| வேலூர் | 34·03 | .. |
| சேலம் | 24·72 | 39·25 |
| திருச்சிநாப்பள்ளி | 32·95 | 31·12 |
| புதுக்கோட்டை | 35·86 | .. |
| மதுரை | 28·23 | 32·09 |
| திருநெல்வேலி | | |